963

ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

இது
'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும்
பொதுநிலைக்கழகத்தின்
அரிய பெரிய செந்தமிழ்விளக்க வெளியீடு

ப, கங. | அக்ஷய ஹு ஐப்பசி, கார்த்திகை, மார்கழி [ இ, ரு, சா, எ

## பொருளடக்கம்

மாணிக்கவாசகர் காலம், மூன்றாம்பகுதி.
(The Age of Saint Manickavachakar, the third part—reviews all the arguments that have appeared for the last 16 years and finally fixes his age in the third century A. D.)
மணிதவசியம் அல்லது உலகியல்ஒழுக்கம்
Personal Magnetism or The Successful Mode of Living
பத்தாம்பதுமத் தொடர்ச்சி; இவ்விதழில் முற்றுப்பெற்றது.

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
சமரச சன்மார்க்க நிலையகுரு;
பல்லாவரம்

பல்லாவரம், சமரசசன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிடப்பட்டது;

15th February, 1927.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

மேலைச் சிதம்பரமாகிய திருப் பேரூர்*

ஸ்ரீ மத் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயத்துச்

சத்வித்தியா சன்மார்க்க சங்கத்தின்

கக-வது ஆண்டு நிறைவுவிழா நிகழும் மாசிமீ 6, 7, 8-ஆம்நாட்களுக்கு நேரான நிகழும் பிப்ரவரிமீ 17, 18, 19-ஆம் நாட்களில் நடைபெறும். அப்போது ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் அவைத்தலைவ ராய் அமர்ந்திருக்கக், கீழே குறிப்பிட்டுள்ள அருந்தமிழ்க் கலைஞர்கள் அரிய பெரிய விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். அன்பர்கள் அனைவரும் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மறைத்திருவாளர் கருணைலய சுவாமிகள்— 'திருத்தொண்டர்பணி'
திருவாளர் அ. சரவணமுதலியாரவர்கள்— 'அழுதடியடைந்த அன்பன்' 'அப்பூதியடிகள்'
,, ம. ரா. குமாரசாமிபிள்ளை யவர்கள்— 'அருளின் அருமையும் பொருளின் பெருமையும்;' 'சேந்தனார் அருமையும் வேந்தனார் பெருமையும்'
,, ச. சச்சிதாநந்தம் பிள்ளை யவர்கள், B.A., L.T.,— 'தாயினும் நல்ல சங்கரன்,' 'தமிழரும் தமிழும்'
,, சின்னைய நாயகரவர்கள்— 'குருபக்தி'
,, மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்— 'பக்தியோகம்' 'சமயம்'
,, தி. சோ. காந்திமதிநாத பிள்ளையவர்கள், B.A.,— 'தமிழர் திருமறை'
,, C. K. சுப்பிரமணியமுதலியா ரவர்கள், B.A.,— 'தற்காலசமயநிலை'

இங்ஙனம்
S. மாணிக்க சுவாமி
சங்கத்தலைவர்.

* இத்தலம் கோயமுத்தூருக்கு மேற்கே 3-வது மைலிலிருக்கிறது.

---


## மணிதவசியம்

## Personal Magnetism or The Successful Mode of Living

(வெளிவந்துவிட்டது.)

உலகத்திலுள்ள நன்மக்களின் அன்பையும் உதவியையும் பெற்று அவற்றால் திரண்ட செல்வத்தையும் கல்வியறிவையும் மனவலிமையையும் அடைந்து இம்மை மறுமைக்குரிய எல்லா இன்பங்களையுந் தாமுந் துய்த்துப் பிறரையும் துய்க்கச் செய்தற் குரிய வழிகளைத் தெள்ளிய இனிய எளிதான தனிச் செந்தமிழ்நடையில் விளக்கிக்காட்டும் அரிய தமிழ்நூல். இதற்குமுன் இத்தகைய அரியநூல் தமிழில் வெளிப்பட்டதில்லை.

இதன் பொருளடக்கம்:-மணிதவசியம் இன்னதென்பது—நினைவை ஒருவழி நிறுத்தல்—கண்ணின்சிறப்பும் பார்வையின்கவர்ச்சியும்—எண்ணமும் எண்ணத்தின் வலிவும்—எண்ணத்தை வலுப்படுத்துவன—மந்திரமொழியும் அதனைச் செலுத்தும் முறையும்—வசியச்செயல்கள்—சேர்க்கைப்பொருள் வசியம்—வசியத்திற்கு ஏற்றகாலம்—நடுயாமத்துச் செய்யும் வசியமுறைகள்—விந்துவைக் கட்டல்—ஓங்காரம் உருவேற்றல் முதலியன.

வழுவழுப்பான உயர்ந்த சீமைக்கடிதத்தில் அச்சிடப்பட்டது; 192 பக்கங்கள்; விலை இரண்டுரூபா எட்டணா.

அம்மூன்றுங் கடவுட்டன்மையுடையவாதல் தெரிப்பார் அவை தம்மைக் கொடிநிலை கந்தழி வள்ளி யென்னும் பெயர்களாற் சிறந்தெடுத்துக் கூறினர். அற்றேல், அச் சொற்கள் கடவுட்டன்மையினைக் குறிக்குமாறு யாங்ஙனமெனிற் காட்டுதும்: 'கொடிநிலை' என்னும் இருமொழித் தொடரிற் 'கொடி' என்பது கிழக்குத் திசையினை யுணர்த்துதல்,

"பொய்தீர் உலகம் எடுத்த கொடி மிசை
மையறு மண்டிலம் வேட்டனள்" (கலித்தொகை, கசக)

என்று உரைகாரர் நச்சினர்க்கினியர் ஆண்டெடுத்துக் காட்டிய செய்யுளால் நன்கு விளங்கும். விளங்கவே, கீழ்த்திசைக் கண்ணே வந்து நிற்குங் கதிரொளியை அஃதுணர்த்துதல் புலனும். திங்களும் இல்லாத இரவின் எல்லையெல்லாங் கண்ணொளியை மறைத்த இருளால் அறிவொளியும் மறைபட்டு அயர்ந்துறங்கிய உயிர்த்தொகைகள் அத்தனையுங், கிழக்கின்கட் கதிரொளிவந்து நிலைபெற்ற அளவானே தங் கண்ணொளியுங் கருத்தொளியும் ஒருங்கு விளங்கப்பெற்று முயற்சி யுடையவாதல் கண்டாமன்றே. இங்ஙனமாக உயிர்ப்பன்மைகளின் அறிவும் முயற்சியும் விளங்கி நடைபெறுதற்குக் கீழ்த்திசைக்கண் எழுந்து நிலையும் ஞாயிறு ஏதுவாதலின் அக் கீழ்த்திசைக் கதிரொளி கடவுட்டன்மையுடையதென்பது அறிவுறுத்துதற்கே அதற்குக் 'கொடிநிலை' என்னுஞ் சொல்லைப் பேரறிவு மிக்க ஆசிரியன் வழங்குவானுயினன். ஞாயிறு என்னும் வழக்குச்சொல் கீழ்த்திசை மேற்றிசை இரண்டினும் நிற்குங் கதிரொளிக்குப் பொதுப்பெயராகலானும், மேற்றிசைச்சென்ற ஞாயிறு விரைவில் மறைந்து புறவிருள் அகவிருள்களை வருவித்தலின் அது கடவுட்டன்மையுடையதாகாமையானுங், கடவுட்டன்மை யுடையதென வைத்து வாழ்த்துதற்கு ஏற்புடையது கீழ்த்திசை ஞாயிறே யென்பதனை வலியுறுத்துவான் வேண்டி அப்பொருள் பயக்குங் 'கொடிநிலை' என்னுஞ்சொல்லை ஆசிரியன் அதற்கு விதந்தெடுத்துக் கூறினனென்பது. இதனுனன்றே, ஆசிரியர் நக்கீரனர்,

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு" என்று திரு முருகாற்றுப்படையிலும், ஆசிரியர் இளங்கோவடிகள்,
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் திகிரி போற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்" என்று சிலப்பதிகார முகத்திலுங் கீழ்த்திசை எழூஉஞ் செங்கதிர்ச் செல்வனை வாழ்த்துவாராயினர் என்க.

இனி, மேலது போலவே தீ, நெருப்பு, அழல், தழல் முதலான சொற்கள் மக்கள் எல்லாரானும் வழங்கப்படுதல் நோக்கி, அவை அதன் கடவுட் டன்மையினை உணர்த்தா வென்றறிந்த ஆசிரியன், அதன் கடவுட் டன்மையினை யுணர்த்துதற் கேற்ற 'கந்தழி' என்னுஞ் சொல்லால் அதனைக் குறிப்பானாயினன். தனக்கொரு பற்றுக்கோ டின்றித் தான் எல்லாவற்றிற்கும் ஒரு பற்றுக் கோடாய் நிற்பதூஉங், தான்பற்றிய உயிரின் பருப் பொருளறிவினை யழித்து அவ் வறிவினை நுண்ணிதாக்கி அதனைத் தன்றன்மையாய் நிற்கச் செய்வதூஉங், தான் எதனானும் பற்றப்படாத அருவுமாய்க் கட்புலனாயினுங் தொடப்படுவதல்லாத உருவுமாய் இவ்வாறு இருதிறமும் விராய அருவுருவாய் நின்று திகழ்வதூஉம் எல்லாம்வல்ல இறைவ னியல்பாதல் போலத், தீப்பிழம்புந் தானிருத்தற்கு ஒருபற்றுக்கோடு வேண்டுமென்பது இன்றாய் எல்லா உயிர்ப்பொருள்களி னிருப்புக்குந் தானொரு பற்றுக்கோடாய் அவற்றினுள்ளும் ஏனைப் பொருள்களினுள்ளும் விரவி நிற்றலானுந், தான் பற்றிக்கொண்டு தோன்றும் விறகு திரி நெய் முதலியவற்றின் பருப்பொருட்டன்மையை அழித்து அவற்றை நுண்பொருளாக்குவதுடன் தான்பற்றி எரியுங்காறும் அவற்றைத் தன் நிறமாக வயங்கச் செய்தலானுந், தான் புலப்பட்டுத் தோன்றுவழி எங்கு முள்ள அருவாய் விளக்கு விறகு முதலியவற்றிற் புலப்பட்டுத் தோன்றிய வழியும் எவரானும் பிடிக்கப்படுவ தல்லாத உருவுமாய் இவ்வாறு அரு

வும் உருவுமாம் இருதிறமும் ஒருங்கு கலந்த இயல்பிற்று ஆக லானுந் தீ கடவுட்டன்மை யுடையதாதல் துணியப்படும். இப் பெற்றித்தாந் தீப் பிழம்பின் இலக்கணத்தை உணர்த்துதற்கு வாய்ப்புடைத்தாதல் பற்றியே ஆசிரியன் 'கந்தழி' என்னுஞ் சொற் கொண்டு அதனையுங் கடவுள் வாழ்த்தின்பாற் படுப்பா னாயினன் என்க. இனி, ஞாயிறு திங்கள் என்னும் இருமண் டிலங்களுங்கூடத் தீத் திரளைகளே யாகலானும், தீ யொன்றமே அவற்றின் விளக்கத்திற்கு ஏதுவாகலானுங் 'கொடிநிலை' என் னும் ஞாயிற்றிற்கும், 'வள்ளி' என்னுந் திங்களுக்கும் இடை யே 'கந்தழி' என்னுந் தீப்பிழம்பின் வாழ்த்தை ஆசிரியன் வைத் திட்டானென்பதூஉம் அறியற்பாற்று.

இனித், திங்கள், நிலா, அம்புலி என்னுஞ் சொற்கள் எல் லாரானும் வழங்கப்படுதலின் அவை அவருள்ளத்தே கடவுள் நினைவினைத் தோற்றுவியா எனக்கருதி, அந் நினைவினைத் தோற் றுவித்தற்கு ஏற்ற 'வள்ளி' என்னுஞ் சொல்லால் அதனை ஆசிரி யன் குறிப்பானாயினன். கதிரொளி வெம்மைகலந்த ஆற்றலை* உலகுயிர்களுக்குத் தராநிற்ப, நிலவொளி தண்மை கலந்த ஆற் றலை† அவற்றிற்கு வழங்கி அவற்றைப் பேணி வளர்த்தலின் 'வள்ளி' எனப்படுவதாயிற்று. அற்றேற், கதிரவனும் வெம்மை கலந்த ஆற்றலை வழங்கும் வண்மை (ஈகை) யுடையனாகலின் அவனையும் 'வள்ளி' எனக்கூறல் வேண்டுபோம் பிறவெனின்; அற்றன்று; கொடுமையொடு கொடுக்குங் கொடையினைக் கொடை என்று எவரும் உயர்த்துக்கூறார், அஃது இன்றியமை யாக் கொடையேயாயினும். மற்று, அகங்கனிந்து முகம்மலர்ந்து குளிர்ப்பக்கூறிக் கொடுக்குங் கொடையினையே எவரும் மகிழ்ந் து புகழாநிற்பர். அங்ஙனமே, ஞாயிறு கொடுக்கும் மின்னாற்றல் இன்றியமையாததொன்றேயாயினும், அது வெம்மையொடுகூடி யிருத்தலின் அதனை 'வண்மை' என ஆசிரியன் கொண்டிலன்; மற்றுத் திங்கள்வழங்குந் தண்மைகலந்த மின்னொளி எவரானும்

---

* Positive electricity. † Negative electricity.

விரும்பி ஏற்கப்படுங் குளிர்ச்சியுடைமையின் அதனையே ஆசிரியன் 'வண்மை' என வேண்டினான். அதுவேயுமன்றிக், கதிரொளி வெய்யதாகலின், அஃது ஆண்டன்மைப்பாற்படும்; நிலவொளி தண்ணிதாகலின் அது பெண்டன்மைப்பாற்படும்*. அப்பெண்பாற் றன்மையினை 'வள்ளி' என்னுஞ் சொல் இகரவிகுதியால் நன்குணர்த்துதலின், அது திங்கண்மண்டிலத்தின் வண்மைத் தன்மையினை அறிவிக்கும் பெயராதற்குப் பெரிதும் ஏற்புடைத்தாதல் காண்க. ஈண்டுக் காட்டிய இவ் வியல்புகள் "ஞாயிறு நெருப்பின் றன்மையும் ஆண்டன்மையும் உடைமையானும், திங்கள் நீரின்றன்மையும் பெண்டன்மையும் உடைமையானுமென்பது. அல்லதூஉம், வெண்கதிர் அமிர்தந் தேவர்க்கு வழங்கலானும் 'வள்ளி' என்பதுமாம்" என்று நச்சினார்க்கினியர் கூறியவுரையானும் புலனாதல் கண்டுகொள்க†. இறைவன் ஒருபால் ஆண்டன்மையனாயிருந்து அழித்தற் றொழிலினையும், மற்றொருபாற் பெண்டன்மையனாயிருந்து படைத்தல் காத்தல் களையுஞ் செய்கின்றனனாகலின், அவன்றன் ஆண்கூற்றின்பாற்பட்ட 'கொடிநிலை' போல, ஈண்டு 'வள்ளி' என்பது அவன்றன் பெண்கூற்றின்பாற்பட்டு நிற்றலும் நுணுகியுணர்ந்துகொள்க.

இவ்வாறாகக், காணவுங் கருதவும்படாத முதல்வன் இயல்பினை நம்மனோர் காணவுங் கருதவும் எளிதாம்படி வைத்து விளங்கக்காட்டும் விழுப்பம்பற்றியே "கொடிநிலைகந்தழிவள்ளி" என்னும் மூன்றும் அம் முதல்வனோடொப்ப வைத்து வாழ்த்தப்படுமென்று முற்றுணர்வுடைய ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிச்செய்தனர். இன்னும், இறைவன் தீ வடிவினன் ஆதலும் தீவடிவில் விளங்கித் தோன்றி நம்மனோர்க்கு அருள்வழங்கலும் மேலே **மாணிக்கவாசகர் வரலாறு** 94-ஆம் பக்கம்முதல் 98-ஆம் பக்கம்வரையில் வைத்து விரித்து விளக்கியிருக்கின்றேம். ஞாயிறுந் திங்களுந் தீ வடிவேயாகலின், அவ் விரண்டொடுங்

---

* சதபதபிராமணம், க, க, க, உ0. † தொல்காப்பியம், புறத்திணை இயல், ௩௩-ஆஞ் சூத்திரவுரை.

கூட்டத் தீ மூவகைத்தாதல் கண்டுகொள்க. ஏனை உலகுயிர்களில் விரவி நிற்குங்கால் இறைவன் கட்புலனாகா அருவனாய் இருத்தலின், தன்னை உயிர்கள் கட்புலனாற் கண்டு வணங்க மாட்டாவென இரங்கியே, அவர்தங் கண்கட்குப் புலனாகும் இவ் வொளியுடைப் பொருள்கள் மூன்றையுந் தோற்றுவித்து, அவற்றின்கட் டனது அருளொளி யுருவினைக் காட்டி அவர் தமக்குத் தன் அருளமிழ்தம் வழங்கிவராநிற்கின்றான் என்பது. இங்ஙனமாக இறைவன்றன் அருளொளி விளக்கத்திற்கு ஓர் உறையுளாயிருந்து உயிர்கட்கு உதவுதல் குறித்தே ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றுங் கடவுளோடொப்ப வைத்து வணங்குதலும் வாழ்த்துதலுஞ் செய்யப்படும். தமிழ்நாட்டு அந்தணர் மிகப் பழையகாலந் தொட்டே இறைவனைத் தீ வடிவில்வைத்து வணங்கிவந்தனரென்பதும், அத்தீத்தான் ஞாயிறு திங்கள் தீ என முத்திறப்படுதலின் அவற்றிற்கு அடையாளமாக ஞாயிற்றை யொத்த வட்டவடிவிலும் பிறையை யொத்த வில்வடிவிலுந் தீயையொத்த முக்கோண வடிவிலுங் குழிகள் வெட்டுவித்து அவற்றின்கண் தீ வளர்த்து அதனை வழிபட்டு வரலாயின ரென்பதும் அறியற்பாலன. தலைச்சங்கத் திருந்த **முரஞ்சியூர் முடிநாகராயர்** காலத்திலேயே பொதியமலைமுதல் இமயமலைகாறும் பரவியிருந்த தமிழ்நாட்டு அந்தணர் முத்தீ வேட்டமை,

> "சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
> அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
> முத்தீ விளக்கிற் றுஞ்சும்
> பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே"

(புறநானூறு, உ) என்று அவர் பாடியவாற்றான் அறியப்படும். இம் முத்தீயை வளர்க்கும் வேள்விக் குண்டங்களுள் ஒன்று வட்டமாய் அமைக்கப்படுதல் **சதபதப்பிராமணம்** ஏழாங்காண்டம் முதல் அத்தியாயம் முதற் பிராமணத்துள்ளும், மற்றிரண்டும் வில்வடிவும் முக்கோண வடிவுமாய் அமைக்கப்படுதல் "மூன்று

வகைக் குறித்த முத்தீச்செல்வத்து" என்னுந் 'திருமுருகாற்றுப் படை'யடிக்கு **நச்சினார்க்கினியர்** கூறிய உரையுள்ளுங் கண்டு கொள்க. பண்டைக்காலத்திருந்த தண்டமிழ்ச் சான்றோர் தாம் ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீயை வணங்குதற்கு அறி குறியாக அம்மூன்றின் வடிவுபோன்ற குண்டங்கள் நிலத்தின் கண் வெட்டுவித்து அவற்றின்கண் வேள்விவேட்ட நுட்பம் அறியாத பிற்காலத்தார் இக் குண்டங்களில் ஒன்றன் வடிவை நாற்கோணமாக்கிப் பிழைபட்டார். அதுகிடக்க.

இனி, இம்முத்தீயினையும் வடநூலார் 'ஆகவநீயம்,' 'காருக பத்தியம்,' 'தக்ஷிணாக்கினி' என வழங்கினரேனும், அவற்றுள் ஆகவநீயங் காருகபத்தியம் என்னும் இரண்டுமே சதபதபிரா மணம் முதலான பழைய வடநூல்களுட் காணப்படுகின்றன; ஏனைத் 'தக்ஷிணாக்கினி' என்னும் பெயர் அவற்றின்கட் காணப் படுகின்றிலது. இருக்குவேதத்திலுங் (௨, ௩௬, ௪; ௩, ௨௦, ௨) தீக் கடவுளுக்கு மூன்றிருப்பிடங்கள் மட்டுஞ் சொல்லப்பட் டிருக்கின்றனவே யல்லாமல், அம் மூன்றின் பெயர்களாதல் 'தக்ஷிணாக்கினி' என்னும் பெயராதல் ஆண்டுச் சொல்லப்பட வில்லை. மற்றுப், புறநானூற்று உரையாசிரியரோ தக்ஷிணாக் கினியைத் 'தென்றிசையங்கி' என்றுரைக்கின்றார்; தென்றிசை யங்கி என்பது தென்றிசைக் கண்ணதாகிய தமிழ்நாட்டிலே வேட்கப்படுந் தீ என்று பொருள்படுவதாகும். தீயானது எல் லாத்திசைகளில் உள்ள எல்லா நாடுகளுக்கும் உரித்தாகவும், அதனைத் தென்றிசைக் கண்ணதாகிய தமிழ்நாட்டுக்கேவரைந்து வைத்துத் 'தக்ஷிணாக்கினி' அல்லது 'தென்றிசையங்கி' எனக் கூறியதென்னை? என நுணுகிநோக்கவல்லார்க்கு, எல்லாம்வல்ல முழுமுதற்கடவுள் தீ வடிவின்கட் புலப்பட்டுத்தோன்றி விளங் குதலை முதன்முதலுணர்ந்து, அதற்கேற்றபரிசால் தீயினை வழி படும் முறைகளைக் கண்டறிந்து, அவ் வழிபாட்டினைச் செய்து வந்தோரும் வருவோருந் தென்றமிழ்நாட்டி லுள்ள தமிழ்ச் சான்றோர்களே யென்பது இனிது புலனாகாநிற்கும். மேலே

479-ஆம்பக்கத்திற் 'சத்தியவிரதன்' என்னும் **மநு** தமிழ்முனிவனேயாதலை உயர்ந்த பலமேற்கோள்கள்கொண்டு விளக்கினும்.

"ஓ அக்நியே, நின்னை மநுமுனிவன் மக்களெல்லார்க்கும் ஓர் ஒளிப்பொருளாய் ஏற்படுத்தினான்" (க, ௩௬, ௧௯) எனவும்,

"ஓ ஆதித்தியர்களே, மநுமுனிவன் தீ வளர்த்தகாலையில், முதல் அவியை எழுஹோத்திரிக் குருமார்களோடும் வேண்டு கோளுரையோடும் நுமக்கே சேர்ப்பித்தான்" (௧0, ௬௩, எ) எனவும்,

"இறைவனை அழைப்பவனும் மநுமுனிவன் மரபினர்பாற் குடிகொண் டிருப்பவனுமான அக்நியே இச் செல்வங்களுக் கெல்லாந் தலைவனாவான்" (க, ௬அ) எனவும்,

"அறிவனும் இல்லத்திற்கு இளையதலைவனு மான அக்நி ஐந்து மரபினரின் இல்லங்கடோறுங் குடிகொண் டிருக்கின்றான்" (எ, ௧௫, உ) எனவும்,

"ஓ இந்திராக்நியே, நீ **யதுக்கள், துருவசர்கள், துருகியர்கள், அணுக்கள், பூருக்கள்** என்னும் இவ்வைவகையினரிடங் குடிகொண்டிருத்தலால்" (க, ௧0அ, அ)எனவும் இருக்கு வேதங் கூறுமாற்றானும்,

"இவ் வைந்து நாடுகளும், இவ் வைந்து மரபினர்களும் மநுவினிடத்திருந்தே தோன்றினர்" (௩, உ௪, உ) என அதர்வ வேதங் கூறுமாற்றானும், இவற்றோடு இணங்கவே ஆசிரியர் திருமூலருந் "தமிழ் மண்டலம் ஐந்துந் தாவிய ஞானம்" எனக் கூறுமாற்றானுந், தமிழ்முனிவ ராகிய மநுவும், அவர்வழித் தோன்றி ஐந்து நாடுகளிற் குடியிருந்த 'பஞ்ச திராவிடர்' எனப்படும் பண்டைத் தமிழ் மரபினருமே, முழுமுதற்கடவுள் தீ வடிவில் விளங்கித் தோன்றுதலை முதன்முதற் கண்டறிந்து அத் தீயின் கண் அவனை வழிபடும் முறைகளை வகுத்தனரென்னும் அரிய பெரிய உண்மை தெளியப்படும். இவ் வைவகைத் தமிழ்மர பினர்க்குந் தலைவராய் இருந்து அந்நாளில் அரசுபுரிந்தவர்கள்

பரதன் என்னுந் தமிழ்வேந்தன் வழியில் வந்தவரான **பரதர்களே** யாவர்.

"பாரத மரபினரான தேவசிரவர், தேவவாதர் என்னும் இருவரும் பயன்மிகுந்த அக்நியை மிக்க வலிமையொடுந் தேய்த்து உயிர்ப்பித்தனர்" (ங, உங, உ) எனவும்,

"ஓ அக்நியே, வலிய படைவீரர்களையுடைய **பழைய பரதர்கள்** தமக்குப் பேரின்பம் வேண்டி நின்னையே இரந்தனர்" (சு, கசு, ச) எனவும், "ஓ பரதர்களுக்கு உரிய அக்நியே" (சு, கசு, சரு) எனவும் இருக்குவேதம் இங்ஙனமே இன்னும் பலவிடங்களில் வற்புறுத்து ஓதுதல்கொண்டு, பண்டைத் தமிழ்மக்கட்குத் தலைவரான பரதர்களே இறைவனைத் தீ வடிவிற்கண்டு வழிபடும் நுட்பத்தை முதன்முதற் கண்டுணர்ந்தன ரென்பதும், தீப்பிழம்பின் வடிவுபோல்வதாகிய திரண்டு நீண்டு குவிந்த சிவலிங்க அருட்குறிகளும் அவற்றிற்கு உறையுளாகக் கூடகோபுரமோங்கிய திருக்கோயில்களுந் தெற்கே பொதியம்முதல் வடக்கே இமயமலைகாறும் அவர் தம்மால் ஆங்காங்கு அமைக்கப்படலாயின வென்பதும் நன்கு தெளியப்படும். தீப்பிழம்பு இறைவனருளொளியோடு ஒற்றித்து விளங்கும் இவ் வரும்பேருண்மையினைப் பரதர் என்னும் பண்டைத் தமிழ்த்தலைவர் முதன்முதற் கண்டறிந்த சிறப்புப்பற்றியே "அக்நியானது பாரதன்" எனப் பெயர்பெறலானமை இருக்குவேத இரண்டாம் மண்டிலத்து ஏழாம் பதிகத்தானும், அதன் முதன்மண்டிலத்து நாற்பத்து நான்காம் பதிகத்தாற் றெளியக்கிடந்தபடி அக்நிக்கு உயிராவான் 'பகன்' என்னும் பெயருடைய சிவபிரானேயாம் உண்மையைத் தெளியக்கண்டவர் பரதரேயாம் சிறப்புப் பற்றியே உருத்திரப்பெருமானுங்கூடப் 'பரதன்' எனப் பெயர்பெற்றமை அதன் இரண்டாம் மண்டிலத்து முப்பத்தாறும் பதிகத்தானும் இனிதுணரக்கிடக்கின்றன. 'அக்நி' யின் உண்மைத்தன்மையும், அதன் வழியே எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைக் கண்டு வழிபடுமாறுந் தென்றமிழ் நாட்டவர்க்கு உரியவாதல்

பற்றியே அக்கி வட நூல்களில் 'தக்ஷிணாக்நி' எனப்பெயர் பெற லாயிற்று. விளக்கொளியிற் சிவவொளியைக் கண்டு தொழுங் கார்த்திகைத்திருவிழாத் தமிழ்நாட்டகத்துக் கொண்டாடப் படுமாறுபோலப், பிறநாடுகளிற் கொண்டாடப் படாமையுங் கருத்திற் பதிக்கற் பாற்று*.

இங்ஙனமாக இறைவனை நெருப்பொளியிற் கண்டு வணங் கும் முறையுணர்ந்த 'பரதர்' பண்டைநாளில் இவ் விந்திய நாடு முழுதும் ஒருங்கு செங்கோல் ஓச்சினராகலின், அவர்பெயரால் இது **பரதகண்டம்** எனப் பெயர்பெறுவ தாயிற்று. இப் பரதர் கள் முதன்முதற் கடல்சார்ந்த நெய்தல் நிலத்தின்கட் குடியேறி, அதன்கட் பட்டினங்கள் அமைத்து நாகரிகத்திற் சிறந்து வாழ்ந் தனராகலின், அந் நெய்தல் நிலத்துமக்கள் 'பரதர்,' 'பரத்தியர்' எனப்பெயர் பெறலாயினர்†. வடக்கிருந்துவந்து இந்தியநாட் டின் வடமேற் கெல்லையிற் குடியேறிய ஆரியர் நாகரிகம் இல்லா தவராய், உயிர்க்கொலை புரிந்து வரைதுறையின்றி ஊனுண்டுங் கட் குடித்தும் மகளிர்ப் புணர்ந்தும் நாகரிகமுடைய தமிழ்மக் கள் அருவருக்குமாறு ஒழுகினமையின் அவர்கள் இந்நாட்டுள் நுழையாதபடி அக்காலையில் அவர்களை விபாஸ் சுதுத்ரீ என்னும் ஆற்றங்கரையின் அப்பால் இப் பரதர்கள் எதிர்த்து நின்றமை யும், பின்னர் அவர்கள் அவ்வாறுகளை இடையூறின்றிக் கடந்து இப்பால் இனிது சேரும்படி, அப் பரதமரபினர்க்குக் குருவான விசுவாமித்திரர் அவ் யாறுகளை வேண்டி வழுத்தினமையும் இருக்குவேத மூன்றும்மண்டிலத்தின் ௩௩-ஆம்பதிகத்தில் நன் கெடுத்து மொழியப்படுதல் காண்க. *திரித்சுக்கள்* என்னும் ஆரியவகுப்பினர் *சுதாஸ்* என்பவனைத் தலைவனுப்க் கொண்டு வந்தஞான்று, மேலெடுத்துக் காட்டிய ஐவகைத் தமிழ்மரபின ரில் துருவசர்களும் துருகியர்களும் அனுக்களும் பூருக்களும்

---

* தற்செயலாய் இப்பகுதி இவ்வாண்டின் கார்த்திகைத் திருநா ளன்றே எம்மால் எழுதப்படலாயிற்று.

† இறையனாகப்பொருள் முதற்சூத்திர உரை.

ஒன்றுகூடி அவர்களைத் தடுத்துநின்று போர்புரிந்தமையும், அத் தமிழ் அரசவகுப்பினர்க்குதவியாகப் **பக்தர்கள், பலாநர்கள், அலிநர்கள், சிவர்கள், விஷாநியர்கள்** என்னும் வேறு ஐவகைத் தமிழ்க் குடியினர் ஒருங்குநின்று திரித்சுக்கள் என்னும் அவ்வாரியரோடு போராடினமையும் இருக்குவேத ஏழாம் மண்டிலத்தின் கஅ-ஆம் பதிகத்தில் விளக்கமாகக் கூறப்படுதல் காண்க. இப் பதிகத்தின் கங-ஆஞ் செய்யுளிற் 'பூருக்கள்' ஆரியரால் மிக இழித்துப் பேசப்படுதலும் நினைவிற் பதிக்கற்பாற்று. வசிட்டரைக் குருவாய்க்கொண்ட ஆரியத் திரித்சுக்களுக்கும், விசுவாமித்திரரைக் குருவாய்க்கொண்ட **பரதர்** முதலான தமிழ்மரபினர் பதின்மர்க்கும் நிகழ்ந்தபோரில், ஆரியர்க்குத் தெய்வமான இந்திரன் பரதர்களைச் செயலற்றிருக்கச் செய்தனன் என்று இருக்குவேத ஏழாம்மண்டிலத்து ங௩-ஆம் பதிகத்தைச் செய்த வசிட்டக்குடியினர் தமக்குரிய அவ்விந்திர தெய்வத்தைப் புகழ்ந்து பேசிக்கொள்கின்றனர். பரதர்கள் அப் போரில் தோல்வி பெற்றிலராயினும், ஆரியர் செய்த சூழ்ச்சியினாலும் அச் சூழ்ச்சிக்கு உதவியாய் நின்ற தமிழரிலேயே ஒரு வகுப்பாரின் படிற்றொழுக்கத்தினாலும் அப் போரில் தமிழ் மரபினர்க்குத் தலைவராய்நின்ற பரதர்க்குப் பேரிடுக்கண்கள் நேர்ந்தன என்பது மட்டும் புலனாகின்றது. இங்ஙனம் பரதர்க்குப் பேரிடுக்கண் நேருமாறு ஆரியர்க்கு உதவிசெய்த தமிழ்வகுப்பினர், முன்னெல்லாம் அப் பரதர்க்கு நெருங்கிய உறவினருந் துணைவருமாய் நின்ற 'பூருக்கள்' என்பவரேயாவர். இஞ்ஞான்றைத் தமிழரிற் சிலர் ஆரியர் கட்டிய சூழ்ச்சியில் அகப்பட்டுத் தம்மினத்தவராகிய தமிழரை அவ் வாரியர் இழிபு படுத்துதற்குக் கருவியாய் முன்னின் றுதவுதல்போல, அஞ்ஞான்றைத் தமிழ் வகுப்பினராகிய பூருக்களுந், தம்மவர்க்கு இரண்டகமாய் நடந்து ஆரியர்க்கு மறைந் துதவிபுரிந்தமையும், அதுகண்டு பரதர்க்கே உரியதான தீக் கடவுள் ஆரியரோடு உடன்கூட்டி அப் பூருக்களைப் போரிற் றொலைத்தமையும் இருக்குவேத ஏழாம்

மண்டிலத்து அ-ஆம் பதிகத்திற் சொல்லப்படுதலும் நினைவுகூரற் பாற்று.

எனவே, அக்காலத்து ஆரியர் தமிழரைப் போரில் வென்று இந் நாடுகளைக் கைப்பற்றின ரென்பாருரை பொருந்தாமையும், அவர் தமிழரிலேயே சிலவகுப்பாரைத் தம் வயப்படுத்தி அவர் தம் இரண்டகச்செயலின் உதவியால் இந்நாடுகளை மெல்ல மெல்லக் கைப்பற்றிக்கொண்டமையுந் தாமே பெறப்படும். தமிழ் நூல்களைப் பயின்றறியாமையின் தமிழரின் நாகரிக உயர்ச்சியை நன்கு உணரப்பெறாத ஐரோப்பிய ஆசிரியரான ராகோசின் என்னும் நுண்ணறிவினர், தமிழரைவிட ஆரியரையே உயர்த்துப் பேசுங் குறிப்பினராயினும், இருக்குவேதப் பாட்டுகளை நடுநிலை திறம்பாமல் தாம் ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடிபாக, ஆரியர் தமிழரைப் போரில் வென்று அவர் தம் நாடுகளைக் கைப்பற்றினவர் அல்லரென்னும் எமது கருத்தினையே தாம் அரிது ஆராய்ந்தெழுதிய 'வேத இந்தியா' என்னும் நூலில் விளக்கமாகக் கூறியிருக்கின்றார். "ஆரியர் தென்றமிழ்நாடு புகுந்தது படையெடுப்பினால் அன்று, மெல்லமெல்ல முன் ஊர்ந்து சென்றதனாலேயாம். ஆண்மையும் விடாப்பிடியும் வலுவாய் ஒழுங்கு படுத்தப்பட்ட படையமைப்புங் குடிநெருக்கமும் உடைய தமிழர்களைத், தொகையில் மிகக் குறைந்த ஒருகூட்டத்தார் எதிர்த்துச் செல்வதென்றால் அஃது எத்துணை இடர்ப்பாடுடையதாய் இருக்கவேண்டு மென்பது நாம் எளிதில் உணரக்கூடிய தொன்றேயாம். தமிழர்கள் இப்போதும் அத்தன்மையராகவே இருக்கின்றனர்; விந்தியமலைக்குத் தெற்கே இருநூற்றெண்பது இலட்சம்பேர்க்குமேல் உளர்; அவர்கள் தமது தேயத்தின்மேல்வைத்த அன்பினால் ஆரியரை எதிர்த்து நின்ற அம் மிகப் பழையகாலத்திலும் அவர்கள் அங்ஙனமே பெருந் தொகையினராய் இருந்தனரென்பதை ஐயுறுதற்கு ஏதோர் இயைபும் இல்லை"* என

* "It was not so much an invasion as an advance, and we can easily imagine that it must have been an achievement

வும், "இந்திய நாட்டுக்குள் குடியேறிய ஆரியர் தமக்கு முற்பட்டே அந் நாட்டுக்கு உரியராகத் தாம் கண்ட இனத்தாரின் மரபினரோடும் அவ் வினத்தார்க்கு ஈடானாரோடும் அவ் வாரியரை ஒப்பிட்டுக் காணுமளவில் அவ்வாரியரது தொகை அவர்க்குச் சிறிதும் ஒவ்வாது மிகச் சிறிதாயிருத்தல் பலர்க்கும் வியப்பினைத் தோற்றுவியாநிற்கும். இவ் விருதிறத்தாரின் தொகையில் ஏற்றத் தாழ்வுகள் அம் மிகப் பழையகாலத்தே இன்னும் மிகுதியாய் இருந்ததாகல் வேண்டும்; ஆகவே, வெறுவல்லாண்மையினாலும் வெற்றியினாலுமே ஆரியரது தலைமைப்பாடு இந் நாட்டின்கண் நிலைபெறலாயிற்றென்னுங் கொள்கை பெரிதும் பொருத்தமற்றதென உறுதிப் படுத்துதற்கு ஈதொன்றுமே போதும்."*

இங்ஙனமெல்லாம் பண்டைக்கால ஆரியர்க்குந் தமிழர்க்கும் இடைநிகழ்ந்த பெரும்போராட்டமும், தமிழரின் பேராண்மையினையும் பெருநாகரிகத்தினையும் நன்குணர்ந்த ஆரியர் அவரோடு எதிர்த்துநின்று அவரை வெல்லுதல் இயலாமை கண்ட

---

of no small difficulty for a body of men necessarily very inferior in numbers, in the face of a compact population, brave, stubborn, and strongly organized. Such the Dravidians are now, when they number over twentyeight millions south of the Vindhya, and there is not the slightest reason to doubt that such, in the main, they were at the early time of their long patriotic struggle" Vedic India, p. 293.

* "It will be a surprise to many that the Aryan population of the Indian continent should be so out of all proportion small when compared to the descendants and representatives of those races which the Aryan immigrants found in possession. The same difference must have existed on a still greater scale in those earliest times—and would alone suffice to stamp as irrational the theory of Aryan supremacy having been established by sheer conquest and force." Ibid, p. 314.

வளவானே அவர் தம்மில் வலியராயினாரைப் பல்வகைச் சூழ்ச்சி
களால் தமக்குத் துணையாய்க்கொண்டு அவ் வழியால் இப்பரத
நாட்டுள் மெல்லமெல்லப் புகுந்து ஆங்காங்குக் குடியேறலான
மையும் இருக்குவேதப் பாட்டுகளைக் கருத்தூன்றி ஆராய்வார்க்
கெல்லாந் தெற்றெனப் புலனாகாநிற்கும். தமிழரிற் பரத மர
பினர்க்குக் குலகுருவான விசுவாமித்திரருங் கூட ஒருகால்
ஆரியர்செய்த சூழலில் அகப்பட்டு, ஆரிய அரசனான சுதாஸ்
என்பவனுக்கு வேள்வியாசிரியராய்ச் சென்று, ஆரியர்க்குத்
தெய்வமான இந்திரனை வணங்கி வழுத்திக், கீகடர் என்னுந்
தமிழ்வகுப்பாரின் அரசனான **பிரமகந்தனின்** பெருஞ்செல்வ
மெல்லாம் அவ்வாரிய அரசன் சுதாஸ் என்பவனுக்கு வந்து
சேருமாறு வேண்டவே, அங்ஙனம் இரண்டகஞ் செய்த அவ்
விசுவாமித்திரரின் நாவானது சிவபிரான்றன் சீற்றத்தால் மந்தி
ரஞ் சொல்லும் வன்மை யிழந்து இயங்காது அவரை ஊமை
ஆக்க, அவரும் அப்போது செயலற்றிருந்தனர். அது கண்டு
உருத்திரரைத் தீவடிவிற் கண்டு வணங்குவோரும், விசுவாமித்
திரர்க்கு உறவினருமான ஜமதக்கினிகள், (இருக்கு, ௧௦, ௧௫,
௭, ௪) என்னுந் தமிழ்க்குருமார் அவரது செயலறவினைக் கண்டு
இரங்கி, ஞாயிற்றின்கட் புலனாய்த் தோன்றுஞ் சிவபிரான் பக்
கல் அமர்ந்த **சசர்பரீ** என்னும் உமைப்பிராட்டியை வேண்டி
வழுத்த அவளது அருட்கடைக்கண் நோக்கால், விசுவாமித்தி
ரர்க்குப் பெயர்த்தும் நாவன்மை உண்டாகவே, அவர் தாம்
செய்த பிழையினை உணர்ந்து, தம்மைச்சேர்ந்த ஐவகைத் தமிழ்
வகுப்பினர்க்கும் அவ் வகுப்பினர்க்குத் தலைவரான பரதர்க்கும்
நன்மை விளையுமாறு வேண்டி, ஆரிய அரசன் சுதாஸ் என்பவ
னது வேள்விக்களத்தைவிட்டு அகலாநிற்ப, அது கண்டு அவ்
வாரிய அரசனின் குலகுருவான வசிட்டர் அவரையுந் தமிழ
ரையும் பகைத்து இகழ்ந்துரைப்ப, அதனால் விசுவாமித்திரரும்
பெருஞ்சீற்றங் கொண்டு அவ் வசிட்டரையும் ஆரியரையும்
வைதுரைத்துத், தாம் தம் தமிழ்மரபினரோடுஞ் சென்றமையும்

இருக்குவேத மூன்றும் மண்டிலத்து ௫௩-ஆம் பதிகத்தில் நன்கெடுத்து ஓதப்பட்டமை காண்க. இப்பதிகப்பொருளை ஆழ்ந்தாராய்ந்த ராகொசின் என்னும் ஐரோப்பிய ஆசிரியர் தமது வேத இந்தியா என்னும் நூலில் அதுபற்றி எழுதிய ஈடுநிலை வழா உரை தமிழ் நன்மக்களாவார் கருத்திற் பதிக்கற்பால தொன்றாகலின் அதனை இங்கே மொழிபெயர்த்தெழுதுவாம்:

* "இருக்குவேதத்தினாலேயே அறியக்கிடக்குஞ் செய்தியினளவில் தனிநின்று நோக்குங்கால், வசிட்டர் என்பார் தனி ஆரியத் தலைவரான திரித்சுக்களுக்குக் குரவராதலும், விசுவாமித்திரர் என்பார் அவ் வாரியர்க்குப் பெரும் பகைவரும் உள்நாட்டுக் குடிமக்களுள் ஆண்மையில் மிகச் சிறந்தாரும் ஆன பரதர்க்குக் குரவராதலும் பெறப்படாநிற்கும். விசுவாமித்திரர் ஒருகாலத்தில் திரித்சுக்களிடம் போய்ச் சேர்ந்திருந்தனர். பின்னர் எதனாலோ—ஒருகால் பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்தினாலோ, அவர் அவர்களை விட்டுச் சென்றனர்; ஆரியர் முன்னேறி வருகையினையும் அவர்க்கு வரவர மிகும் வலிவினையுந் தடை செய்யத், தம்மினத்தவர் தம்மிற் கூடிச் செய்த கட்டுப்பாட்டில் அவர் முதல்வராய் நின்றனர். இருக்குவேத மூன்றும் மண்டிலத்தில் (தீக் கடவுண்மேலும் எனை ஆரியச் சிற

* "To keep strictly within the information supplied by the Rig-Veda itself—Vasishtha was the bard of the *Tritsu*, the leading and purest Aryan tribe, and *Visvamitra* was the bard of the *Bharatas*, their great enemies and one of the most powerful native tribes. He at one time had been with the Tritsu, and for whatever cause he left them—not improbably personal revenge—he played a conspicuous part in the confederacy which attempted to check the Aryan advance and increasing power. There is a hymn (53), in Book III., that of the Visvamitra family, which evidently alludes to this very thing. In the first part of the hymn it is said that when Visvamitra conducted King Sudas' sacrifices, Indra was

தெய்வங்கண்மேலும்) விசுவாமித்திரக் குடியினர் இயற்றிய பதிகங்களுள் ருக-ஆம் பதிகமானது மேற்காட்டிய நிகழ்ச்சியினையே (தமிழர் ஆரியரோடு போராடி அவரைத் தடுத்து நின்ற செய்தினையே) குறிப்பிடுகின்றது. சுதாஸ் என்னும் அரசனின் வேள்விகளை விசுவாமித்திரர் நடத்தியபோது இந்திரன் அம்முனிவர் பொருட்டு அவனுக்கு அருள்புரிந்து அவன் எடுத்துச் செல்லும் படையெடுப்பினையும் அவன்றன் போர்க் குதிரையினையும் அவனையும் வாழ்த்தி வரங்கொடுத்தனனென அப் பதிகத்தின் முதற்பகுதியானது மொழியா நிற்கின்றது. அதன்பிற் சடுதியிலே விசுவாமித்திரர் தம் வேண்டுகோளுரைகள் பரத வகுப்பினரைக் காக்கவெனக் கட்டுரைத்தார் எனக் கழறுகின்றது; அப் பதிகத்தின் ஈற்றில் நிற்கும் நான்கு செய்யுட்கள் பகைவரைக் கெடுகவென வைதுரைக்கின்றன; இங்ஙனம் வைதுரைக்கப் பட்ட பகைவர் இன்னரென்பது அவற்றின்கட் சொல்லப்படவில்லையாயினும், அப்பகைவர் வசிட்டரும் அவர் தங் குடியினருமேயாவரெனவும், அதனால் அவ்வசிட்டக்குடியினைச் சேர்ந்த பிற்காலத்துக் குருக்கண்மார்களுங் கூட அந் நான்கு செய்யுட்களையுந் தம் வாயால் ஒருபோதுஞ் சொல்லாமையோடு, மற்றைப் பார்ப்பன வகுப்பினர் அவற்றை ஓதுங்கால் அவைதம்மைச் செவிகொடுத்துக் கேளாதிருக்கவும் முயன்

---

gracious to him for the Rishi's sake, and a great blessing is pronounced on the king, and his war-steed and the expedition on which he starts. Then, quite suddenly, Visvamitra is made to declare, in his own person, that his prayers protect the tribes of the Bharatas, and the hymn ends with four verses of imprecations against enemies who are not named, but whom tradition so positively identified with Vasishtha and his family, that the priests of this house in later times never uttered these four verses, and tried not to hear them when spoken by other Brahmans. It is most probable that the Visvamitras resented some distinction conferred upon the

றனரெனவுந் தொன்றுதொட்டு வரும் வரலாறு நுவல்கின்றது. வசிட்டக் குடியினர்க்குத் தனிச்சிறப்புக் கொடுக்கப்பட்டமை கண்டு (இது திரித்சுக்கள் என்னும் அரச குடும்பத்தார்க்கு அவர்கள் புரோகிதராக ஏற்படுத்தப்பட்டமையா யிருக்கலாம்), விசுவாமித்திரர் செற்றங் கொண்டு, அத் திரித்சுக்களுக்குப் பெரும் பகைவரும் வலியருமான **பூருக்களும் பரதர்களும்** என்பார்பாற் போய்ச் சேர்ந்தனர். திரித்சுக்களும் அவர்களோ டுடன் சேர்ந்தவர்களும் பின்நிகழ்ந்த 'அரசர் பதின்மரின்போர்' எனப்படுஞ் சண்டையில் வெற்றி பெற்றனர். இருதிறத்தாரை யுஞ் சேர்ந்த பாவலர் அச் சண்டையைப் பற்றியும், பருஷிநீ யாற்றங் கரையில் முடிவாக நடந்த போரைப் பற்றியுந் தாம் பாடிய கிளர்ச்சியான பதிகங்களில் (இருக்குவேதப் பதிகத்திரட்டில் இப்பதிகங்கள் உண்மை நிகழ்ச்சிகளை அறிவிப்பன என்பதிற் சிறிதும் ஐயுறவுக்கு இடமில்லை) விளக்கமாகச் சொல்லி யிருக்கின்றார்கள். பிற்பட்டகாலத்தில் வசிட்டரைச் சார்ந்தோரும் அவர்வழியில் வந்தோரும், உயிரற்ற விதிகள் பொருளற்ற சடங்குகள் ஆசாரங்கள் என்பவற்றை ஓர் எள்ளளவு கூட விடாமல் உன்னித்துச் செய்யும் புல்லிய தன்மையிலும், ஆரிய ரது முறையிற் சேராத எதனையுங் கண்டு மனந் தாங்காமையி லும், மற்றை வகுப்பாரொடு கூடாமற் பிரிந்துநிற்குங் கொடுமை

---

Vasishthas, possibly their appointment as *purohitas* to the Tritsu royal family, and went over to their most powerful enemies, the Purus and Bharatas. The Tritsu and their allies were victorious in the ensuing struggle, known as "the War of the Ten Kings," and both the bards have left descriptions of it and of the final battle on the banks of the Parushni, in some spirited hymns, the most undoubtedly historical of the collection. At a later period the followers of Vasishtha and his descendants represent the narrowly orthodox Brahminic school, with its petty punctilliousness in the matter of forms, rites, observances, its intolerance of everything un-Aryan, its

யிலும் முதிர்ந்து குறுகிய நோக்கமுடையராய் வருஞ் சரியான பார்ப்பன இனத்தின் றன்மையினைக் காட்டுவோராவரென்பது அறியற்பாற்று. இம் மரபினரே நமது காலம் வரையிற் சாதி வேற்றுமையினை நெடுகக் காத்துவந்தவராவர்; அவ்வேற்றுமை யினை முதன்முதல் உண்டாக்கினவரும் அவரேயாதல் கூடும். பாப்பனக் குருமார்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள், அவர் களே உலகினை ஆளுதற்கு உரியர், அவர்களே உலகிலுள்ள எல் லாப் பொருள்களுக்கும் உரிமையாளர், அவர்களே உலகின்கண் நடைபெறும் இயற்கை நிகழ்ச்சிகளை யெல்லாந் தாம் வேண்டு மாறு நடப்பிக்கவல்ல கடவுட்டன்மையுடையர், வேள்வியாற் றுதலானுந் தவவொழுக்கங்களானும் இன்னும் இவைபோல்வன பிறவாலும் அவர்களே கடவுளரையும் ஏவல்கொள வல்லவர், எனப் பார்ப்பன ருரிமைகளை அளவுக் கடங்காமற் பாரித்துப் பேசி, அவற்றை விடாப்பிடியாய்க்கொண்டு முன்னேற்றிவைத்த வர்கள் இவ்வசிட்ட மரபினரே யாவர். மற்று, விசுவாமித்திர ரைச் சார்ந்தாரும் அவர் வழிவந்தாருமோ, விரிந்த நோக்கமும் மேன்மேற் பெருகும் ஆக்கமும் எல்லாரோடும் உறவுபாராட்டும் இயற்கையும் எல்லாரோடும் அளவளாவும் வாழ்க்கையும்வாய்ந்த குடிமக்களின் றன்மையினைக் காட்டுவோராவ ரென்பதூஉம் அறியற்பாற்று" எனவும், "சிவர் என்பாருடன் சேர்த்துச்சொல்

---

rigid separatism. This school it was which stood guard through all these ages, and up to our day, the champion–and possibly orginally the institutor, of caste; who advanced and upheld all the exaggerated claims of the Brahman priesthood, to divinity, to the rule of the world, and ownership of all it holds, to supernatural compelling powers over nature and the gods themselves through sacrifice and ascetic practices, and the like. The followers of Visvamitra and his descendants, on the other hand, represented the school of liberalism and progress, of conciliation and amalgamation." Vedic India, pp. 318–320.

லப்பட்ட விஷாநியர் என்பார், மிகப் பழைய தமிழ்மக்களுள் ஒரு வகுப்பினரான துக்ரரேயாவரெனக் கருதப்படுகின்றனர்; இவர்களையே "நாகரின் மக்கள்" எனக் குறிப்பிட்டு ஆரியர் இகழ்ந்துரைத்தனர்; இவர்களே சைவர் எனப் பெயர் பூண்டு, நாகத்தின் வடிவின்கீழ் அல்லதொரு நாகத்தின் தன்மையில் வைத்துச் சிவவழிபாட்டினை உண்டாக்கினோராதல்வேண்டும்."* எனவும் அவர் மொழிந்தமை காண்க. உண்மையாராய்ச்சியில் வல்ல இவ் வைரோப்பிய ஆசிரியர் இருக்குவேதப் பதிகங்களை நடுநின்று நுண்ணிதின் ஆராய்ந்துரைத்த இவ்வுரைகளால், வசிட்டரும் அவரைக் குருவாய்க்கொண்ட ஆரியரும், விசுவாமித்திரர்க்கும் அவரைக் குருவாய்க்கொண்ட பரதர் முதலான தமிழ்க் குடியினர்க்கும் அத் தமிழ்க்குடியினர் தீ வடிவில் வைத்து வழிபடுஞ் சிவவழிபாட்டுக்கும் முற்றும் மாறாய் நின்றமை நன்கு புலனாகின்றதன்றோ? தீத்திரளையான ஞாயிற்றினையும், அஞ் ஞாயிற்றினை ஓர் உடம்பாய்க்கொண்டு 'பர்க்கன்' எனப் பெயர் பூண்டு விளங்குஞ் சிவபெருமானையும் வழுத்துங் காயத்திரி மந்திரமானது, விசுவாமித்திரனும் அவர்தங் குடியினரையும் ஆசிரியராய்க்கொண்ட இருக்குவேத மூன்றாம் மண்டிலத்தின் இறுதிக் கண்ணதான ௬௨-ஆம் பதிகத்தின் ௧0-வது செய்யுளாய் அமைந்திருத்தலையும், இம் மூன்றாம்மண்டிலத் தொடக்கத்திலுள்ள பதிகங்களும் அதன் இடையிடையேயுள்ள பதிகங்களுந் தீக்கடவுண் மேலானவாயிருத்தலையும், தீக்கடவுண் மேலனவாய் இம் மூன்றும் மண்டிலத்தினும் ஏனை மண்டிலங்களினும் பாடப்பட்டுக் கிடக்கும் பதிகங்கள் பெரும்பாலனவற்

* "The Vishanin bracketed with the Siva, which is thought to be a name of the Tugra, one of the oldest aboriginal Dravidian peoples, whom the Aryas had specially nicknamed 'Sons of the Serpent,' and who, under the religious designation of Siva, were very probably the originators of the worship of Siva under the form or with the attribute of a snake." Ibid, p. 328.

றின் மட்டுமே 'பரதர்' என்னுந் தமிழ்க்குடியினர் பெயர் எடுத்துக் கூறப்படுதலையும், இருக்குவேதத்தில் தீக்கடவுண்மேலும் உருத்திரர்மேலும் பாடப்பட்டிருக்கும் பதிகங்களின் ஆசிரியர் பெரும்பாலும் விசுவாமித்திரக் குடியினைச் சேர்ந்த முனிவரரா யிருத்தலையும் உற்றுநோக்க வல்லார்க்குத், தீக்கடவுளையுஞ் சிவ பிரானையும் பாடிய அம் முனிவரரெல்லாரும் பண்டைத் தமிழ் வகுப்பினரேயாதல் தெற்றென விளங்காநிற்கும். இதனாலன்றோ வசிட்ட மரபினரும் விசுவாமித்திர மரபினரும் ஒருவரை யொருவர் மிகப் பகைத்து வைதுரைக்கும் பாட்டுகள் இருக்கு வேதத்தின்கட் காணப்படுவவாயின. இவர் தம்மிற்றும் இகலி நின்றதொன்றின் மட்டின் அமையாது வசிட்டக் குடியினர் விசுவாமித்திரக் குடியினர் வணங்கிய முழுமுதற் றெய்வமாகிய சிவபெருமானையுங் கூடச் 'சூத்திரதெய்வம்,' 'சிசிநதேவதை' எனப் பெரிதும் இகழ்ந்துபேசலாயினர். இங்ஙனம் வசிட்ட ரைக் குருவாய்க்கொண்ட ஆரியர், விசுவாமித்திரரைக் குரு வாய்க் கொண்ட தமிழரிடத்தும், அவர் வணங்கிய தமிழ்த் தெய்வமாகிய ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிப்பிழம்புக ளிடத்தும் அப் பிழம்புகளினுட் கட்புலனாய் விளங்கித் தோன் றும் உருத்திரரிடத்தும் வரைகடந்த பகைமைகொண்டமையா லன்றோ, பிற்காலத்தில் அவ்வாரிய வசிட்ட மரபினரின் வழித் தோன்றிய பார்ப்பனர் ஆக்கிய 'வசிட்ட ஸ்மிருதி' முதல் அத்தி யாயத்தில், "சதுர்வேதீ ச யோவிப்ரோ வாசுதேவம் நவிந்ததி" என்று தொடங்குஞ் செய்யுண் முதல் ஐந்து செய்யுட்கள், "நான்கு வேதங்களிலும் வல்லவனாயிருப்பினும், வாசுதேவனை யறியாத ஒரு பார்ப்பனன், வேதமாகிய ஒரு பெருஞ் சுமை யைத் தாங்கி நடுங்கிக்கொண்டிருக்கும் ஒரு பார்ப்பனக் கழு தையே யாவன். ஆதலால், வைஷ்ணவனாயிருந்தாலன்றி ஒரு வன் பார்ப்பனத்தன்மையை இழந்துவிடுவன்; வைஷ்ணவனா யிருப்பதால் ஒருவனுக்கு முழுமுதற்றன்மை உண்டாகின்ற தென்பதிற் சிறிதும் ஐயம் இல்லை. ஏனென்றால் நாராயணனே

பரப்பிரமம்; அவனே பார்ப்பனர்களுக்குத் தெய்வமாவன்; திங்களும் ஞாயிறும் மற்றையவும் க்ஷத்திரியர்க்கும் வைசியர்க்குந் தெய்வங்களாகும்; உருத்திரனும் அவனையொத்த தெய்வங்களுஞ் சூத்திரர்களாலேயே இடைவிடாது வணங்கற்பாலன. புராணங்களினும் ஸ்மிருதிகளினும் உருத்திர வணக்கஞ் செய்கவெனக் கட்டளையிடும் இடங்கள் பார்ப்பனரைக் குறிப்பன அல்ல; இவ்வாறு பிரஜாபதி வற்புறுத்திக் கூறினர். புராணங்களில் விதந்து சொல்லப்படும் உருத்திரவழிபாடும் மூன்று கீற்றுகத் திருநீறு இடுதலும், க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் இனத்தாரை நோக்கிச் சொல்லப்பட்டனவே யல்லாமல், மற்றையோரை நோக்கின அல்ல. ஆகையாற், சிறந்த முனிவர்களே, பார்ப்பனர்கள் திரிபுண்டரம் அணிதல் ஆகாது."* என்று வற்புறுத்தி, ஆரியப் பார்ப்பனர் தமிழ்த்தெய்வமாகிய உருத்திரரை வணங்காவாறும், தீயினை வழிபட்டு அதன் தூய அடையாளமாகத் தமிழர் இடுந் திருநீற்றை அவ்ஆரியர் தாமும் அணியாவாறுந் தடைசெய்வவாயின. இங்ஙனமாகப் பண்டுதொட்டு ஆரியர் தமிழரையுந் தமிழ்த்தெய்வ மாகிய சிவபிரானையும் பகைத்து இகழ்ந்துவருதல் பற்றியே, அவ்வாரிய இனத்திற் றம்மைச் சேர்த்துக்கொண்டு வடமொழியையும் வடநூல்களையுமே தமக்குரியன வென்று தழீஇத், தம்மைப் பார்ப்பன ரென்று சொல்லிக்கொள்ளும் இஞ்ஞான்றை மக்களெல்லாரும், சிவபிரானைச் சூத்திரதெய்வமென்றுந் தேவார திருவாசகத் தமிழ்மறைகளைச் சூத்திரப்பாட்டென்றும் இழித்துரைத்துத், திருமாலின் அவதாரங்களாகத் தாம் பிழைபடக்கொண்ட இராமன் கண்ணன் என்பாரை மட்டும் வணங்கி வடநூல்களையே ஒருவரைதுறையின்றிப் பாராட்டி வருகின்றனர். இவ்வாறு தொன்றுதொட்டு இன்றுகாறும் நடைபெற்றுவரும் ஆரியர் ஒழுகலாற்

* See the great vedic scholar Prof. Max Muller's 'A History of Ancient Sanscrit Literature,' Panini office publication, p. 29.

றினை நடுநின்று நன்காய்ந்து காணும் நுண்ணறிவாளர் எவர்க்கும், இருக்குவேதத்திற் 'பரதர்' முதலிய பெயர்களால் வழங்கப்பட்ட பண்டைத் தமிழ் நன்மக்களே ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீவடிவில் வைத்து முழுமுதற்கடவுளான சிவபிரானை வழிபடும் நுட்பமுறையைக் கண்டோராவர் என்னும் அரும்பேருண்மை தெற்றெனை விளங்காநிற்கும்.

பரதகண்டமாகிய இத் தமிழ்நாட்டுட் புகுந்து பல்வகைச் சூழ்ச்சிகளால் தமிழரது உறவைப்பெற்று ஆங்காங்குக் குடியேறி நிலைபெற்ற ஆரியர், தமக்கு முன்னே நாகரிகத்தில் மிகச் சிறந்தாராய்த் திகழ்ந்த தமிழ்மக்கள் செய்து போதரும் முத்தீ வேள்வியினைக் கண்டு, அதைப்போற் றாமும் வேள்வி வேட்கத் தலைப்பட்டனர். இருக்குவேதகாலத்தில் தமிழ்ச்சான்றோர்களே முத்தீ வேள்விகள் வேட்டனரன்றி, ஆரியக்குருமார் அவற்றை வேட்டனரல்ல ரென்பதூஉம், எஜுர்வேத சாமவேத காலங்களிலேதாம் அவர்கள் தமிழாசிரியரது துணைகொண்டு அவற்றை வேட்கலாயின ரென்பதூஉம் ஐரோப்பிய ஆசிரியரான **மாக்ஸ்மூலர்** விளக்கியவாற்றானும் நன்குணரப்படும்*. ஆரியர் தாம் வேள்விவேட்கத் தெரியாத காலங்களினெல்லாம் 'விசுவாமித்திரர்,' 'ஜமதக்கினிகள்' முதலான தமிழ்க் குருமார்களைத் தம்பால் வருவித்துத் தமக்குரிய இந்திரதெய்வத்திற்கு வேள்வி வேட்டமையும், அவ்வாற்றால் தாமும் வேள்விவேட்கத் தெரிந்துகொண்டபின் அத் தமிழ்க்குருமாரை விலக்கித் தமக்குக் குரவர்களான வசிட்டர் முதலாயினரைக்கொண்டு அவ்வாரியர்கள் வேள்விவேட்கலானமையும், இங்ஙனஞ் செய்துபோந்த ஆரியரது படிற்றொழுக்கத்தால் இருதிறத்துக் குருமார்களுக்குட் பகைமையும் அதுவாயிலாக அவ்விருதிறத்தாரின் அரசர்க்குட் போரும் அடுத்தடுத்து நிகழலானமையும் இருக்குவேதப்பாட்டுகளைக் கருத்தூன்றி யாராய்வார்க்கு இனிது புலனாகாநிற்கும். தமிழர் வேட்கும் முத்தீ வேள்வியைப்போல், ஆரியரும் வேட்கத்

* Ibid, pp. 236–238.

தொடங்கி வேள்விச் சடங்குகளை அளவிறப்பப் பெருக்கிப் 'பிராமணங்கள்' வரைந்து, தமிழரசர்களை ஏமாற்றி அவர்பாற் பெற்ற பெரும் பொருட்டிரள்கொண்டு, தாம் ஊனுண்டு கட் குடிக்கும் ஒழுகலாறு உடையராகலின், அதற்கேற்பக் கொலை யுங் குடியும் மலிந்த வேள்விகளைப் பல்லாயிரக் கணக்காக வேட்டுவந்தனரேனும், அவர்கள் அவ்வேள்விகளிற் சிவபெரு மானை வணங்கினவர் அல்லர். தமிழ்ச் சான்றோர்கள் வேட்டு வந்த வேள்விகள் அத்துணையுங் கொலையுங் குடியும் இல்லாதன வாய்ச் சிவபிரான் ஒருவனை மட்டுமே வணங்குதற் பொருட்டு வேட்கப்பட்டன; ஆரியர் வேட்ட வேள்விகளோ பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்றுந் தொட்டி தொட்டியாகச் சோமப்பூண்டில் இறக்கிய கள்ளை யுண்டும் இந்திரன் வருணன் முதலான சிறுதேவதைகளை வணங்குதற் பொருட்டாகவே வேட்கப்பட்டன. தமிழர் தீயினையும் ஞாயிறு திங்களினையும் வழிபடுங்கால் அவை முழுமுதற் கடவுளோடொப்ப ஒளிவடி வினவாய் விளங்கும் நட்பம் உணர்ந்து, அவற்றை இறைவற்கு உடம்பாகவும் இறைவனை அவற்றிற்கு ஓர் உயிராகவுங்கொண்டு அவ் வொளிவடிவுகளைச் சிறந்தெடுத்துப் பாராட்டி வழிபட்ட னர்; ஆரியரோ, தாம் படைக்கும் ஊனையுங் கள்ளையும் ஏற்று அவற்றை இந்திரன் முதலான சிறுதெய்வங்கட்குச் சேர்ப்பிக் கும் ஓர் ஏவலனுக இழிந்த நிலைமைக்கண் வைத்துத் தீக்கட வுளை வணங்கலாயினர். இவ்வாறு தமிழர் வேட்ட வேள்வி கட்கும் ஆரியர் வேட்ட வேள்விகட்கும் உள்ள பெரியதொரு வேறுபாட்டினைத் தெரித்தற்பொருட்டே சைவசமயாசிரியரான திருநாவுக்கரசு நாயனார்,

"எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கம தாவது உணர்கிலார்,
அரிஅயற்கு அரியானை அயர்த்துப்போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே" (பொது) எனவும்,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனோ?
இருக்கு நான்மறை ஈசனையே தொழுங்
கருத்தினை நினையார் கன்மனவரே" (பொது) எனவும் அருளிச்செய்திட்டார். தீயும் ஞாயிறுஞ் சிவபெருமான்றன் றிருவுருவங்களாதலை உணரப்பெறாத ஆரியப் பார்ப்பனரை "நரி விருத்தமதாகுவர்," "கன்மனவர்" என்று ஆசிரியர் இரங்கி இகழ்ந்துரைத்தமை நினைவிற் பதிக்கற்பாற்று. அவ்வாரியர் முழு முதற்கடவுளாகிய சிவபெருமானை வணங்குதல் விட்டு, அரி பிரமன் இந்திரன் என்னுஞ் செத்துப்பிறக்குஞ் சிறுதெய்வங்களை வழிபடுதல் கண்டன்றோ இரங்கி மனங்கொதித்துப் பின்னும் அப் பெருந்தவ ஆசிரியர்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட்கு ஏறுமோ?
அத்தன் என்று அரியோடு பிரமனுந்
துத்தியஞ் செயநின்ற நற்சோதியே" (பொது) எனவும்,
"நூறுகோடி பிரமர்கள் நொங்கினர்,
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே,
ஏறுகங்கை மணல்எண்ணில் இந்திரர்,
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே" (பொது) எனவும் நிரம்பக் கடுத்த சொல்லில் எடுத்து இடித்தறிவுறுத்தருளினர். இவரைப் போலவே சைவசமய முதலாசிரியரான மாணிக்கவாசகப் பெருமானும்,

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொ டல்லால் நரகம் புகினும்
எள்ளேன் றிருவருளாலே இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன்பிறதெய்வம்உன்னையல்லாதெங்கள்உத்தமனே"
(திருச்சதகம், உ) என்றும்,

"புற்றில்வா ளரவும்அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும்அஞ்சேன், கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம்

நண்ணி, மற்றும்ஓர் தெய்வந்தன்னை உண்டென நினைந்து எம்பெம்மாற், கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே" (அச்சப்பத்து, ௧) என்றுந் திருவாசகத்தில் அருளிச்செய்திருத்தல் காண்க.

இவ்வாறு பிறப்பு இறப்பு இல்லாச் சிவபெருமானே முழுமுதற்கடவுளாதல் தெரித்து, ஏனைச் சிறு தெய்வங்களெல்லாம் பிறப்பு இறப்புக்களுட் கிடந்து அவன் ஆணைவழியுழலுஞ் சிற்றுயிர்களாதலுங் காட்டிச் சைவசமயாசிரியர்களெல்லாரும் ஒரே முகமாய் அச் சிறுதெய்வ வணக்கத்தை மறுத்து விலக்கிய செந்தமிழ் அருளுரைகள் வெள்ளிடைமலைபோல் விளங்கிக் கிடப்பவும், இஞ்ஞான்று தம்மைச் சைவரெனவுங் கூறிக் கொள்வார் சிலர், ஆரியரது சூழ்ச்சியில் வீழ்ந்து ஆரிய வேதங்கள் சிவபிரான் அருளிச்செய்தனவேயா மென்னும் ஒரு பொருந்தாக் கொள்கையினை நாட்டுதற்குப் புகுந்து, இறைவன்றன் திருவுருவ வழிபாட்டினை இகழ்ந்து மறுத்துத் தம் வாழ்நாள் எல்லையளவுஞ் சைவசமயத்துக்கு மாறாய் நின்ற 'தயாநந்த சரஸ்வதி' என்னும் வடநாட்டு முனிவரரின் கொள்கையைத் தழீஇ, இருக்குவேதத்திற் சொல்லப்பட்ட இந்திரன் மித்திரன் வருணன் முதலான பல தெய்வப் பெயர்களெல்லாம் ஒரு தெய்வத்தின் மேலனவேயாமென்றும், ஆரியவேதங்களின்படி வேட்கப்பட்ட வேள்விகளில் உயிர்க்கொலைநிகழவில்லையென்றும், உயிர்க்கொலை செய்கவென ஏவுஞ் சொற்றொடர்கட்கெல்லாம் வேறு பொருள்கள் உளவென்றுந் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் பேசி, இலக்கண இலக்கிய அளவை நூல் வரம்புகளைக் கடந்துந், தொன்றுதொட்டு வரும் ஆரியர்தம் ஒழுகலாற்றுக்கும், வேதங்கள் பிராமணங்கள் தரும சூத்திரங்கள் முதலான ஆரிய நூல்களில் மிக விரிவாகவும் விளக்கமாகவுஞ் சொல்லப்பட் டிருக்கும் உயிர்க்கொலை வேள்வி முறைகட்கும் முற்றும் மாறானதொரு கோட்பாட்டினைக் கிளப்பியும் பெரியதோர் ஆரவாரம் புரிவாராயினர்.

இந்திரன் முதலிய பெயர்கள் முழுமுதற் கடவுளையே குறிப்பது உண்மையாயின், அப் பெயர்களால் உணர்த்தப்படும் அத் தெய்வங்கள் முழுமுதற்கடவுட் குரிய இலக்கணங்கள் உடையவாய் இருத்தல் வேண்டுமன்றே? இந்திரன் சோமன் என்பார் பிரஜாபதியாற் படைக்கப்பட்டவர் எனச் 'சதபதபிராமணங்' (கக, க, சு) கூறுதலானும், மித்திரன், வருணன், தாத்ரி, அர்யமான், அம்சன், பகன், விவஸ்வதன், ஆதித்யன் என்னும் எண்மரும் அதிதியின் புதல்வரென அஃது அங்ஙனமே எடுத்துச் சொல்லுதலானும், கட்குடியும் விலங்குகளின் கொலையால் வரும் ஊன் உணவும் அவ் இந்திரன் முதலியோர் கைக்கொண்டமையுந் தந்தையைக் கொல்லல் மகளைப் புணர்தல் முதலான மிக இழிந்த செயல்களை அவர் புரிந்தமையும் மேலே 206-ஆம் பக்கம் முதல் 214-ஆம் பக்கம் வரையில் எம்மால் எடுத்துக் காட்டப்பட்டிருத்தலானும், இத் தேவர்கள் பகைவராற் பலகாலுந் தோல்வியுற்று வருந்திவந்தமையின் தாம் சாவாதிருத்தற்கு மருந்துவேண்டி முயன்றகாலத்தில் அவரைக் கொல்லும் நஞ்சு ஒன்று எழ அதனைச் சிவபிரான் உட்கொண்டு அத் தேவர்களைக் காத்தமை "கேஸி விஷஸ்ய பாத்ரேண யத் ருத்ரேணாபிபத் சஹா" என இருக்குவேதத்தின்கண் (க0, கருசு, எ) நன்கெடுத்துக் கூறப்பட்டிருத்தலானும் அத் தேவரெல்லாரும் மக்களோடொத்த சிற்றுயிர்களேயாவ ரல்லது முழுமுதற்கடவுளராதல் செல்லாது. மற்றுச், சிவபிரானோ உயிர்கட்குள்ள இக் குற்றங்கள் சிறிதும் அணுகப் பெறுதவனுகலின் அவன் ஒருவனே எல்லா முதன்மையும் உடைய முழுமுதற்கடவுளாதலும் மேலே விளக்கப்பட்டது. இன்னும் இதன் விரிவைத் **தமிழர் நாகரிகம்** என்னும் எமது நூலிற் கண்டுகொள்க.

ஆரியர் உயிர்களை ஏராளமாய்க் கொன்று தாம் வணங்கி வந்த சிறுதெய்வங்களுக்கு அவற்றின் இறைச்சியைப் படைத்துத் தாமும் அயின்றுவந்தமை இருக்குவேதத்திலேயே பற்பல இடங்களிலுந் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன்

65

முதன்மண்டிலத்து, ககசு-ஆம் பதிகத்தின் எ-வது செய்யுளில் அசுவினி தேவர்கள் கக்ஷீவானுக்கு நூறு சாடிச் சாராயங் கொடுத்தமையும், 16-வது செய்யுளில் 'ரிஜிராசுவன்' அசுவினி தேவர்களின் ஊர்தியான கழுதையின்பொருட்டு விதையடித்த நூறு செம்மறியாடுகளை வெட்டி அவற்றின் ஊனை உணவாகப் படைத்தமையுஞ் சொல்லப்பட் டிருக்கின்றன; கசுஉ, கசுங-ஆம்பதிகங்களில் வெள்ளாட்டினையுங் குதிரையையுங் கொன்று அவற்றின் ஊனைச் சமைத்துப் 'பூஷன்' 'இந்திரன்' என்னுந் தெய்வங்கட்குப் படைத்தமை விரிவாகக் கூறப்பட்டிருக்கின் றது; அதன் ஐந்தாம்மண்டிலத்து உகூ-ஆம் பதிகத்தின் எ-வது செய்யுளில் முந்நூறு எருமைமாடுகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை நெருப்பில் வாட்டிப் பதப்படுத்தி அதனை மூன்று பெரிய தொட்டிச் சோமச் சாராயத்துடன் இந்திரனுக்குப் பலியூட்டினமை வெளிப்படையாக நுவலப்பட் டிருக்கின்றது; அதன் ஆறும்மண்டிலத்து கஎ-ஆம் பதிகத்தின் கக-வது செய் யுளிலும் அங்ஙனமே நூறு எருமைமாடுகளைக் கொன்று தீயிற் பதப்படுத்தி அவ்வூனை மூன்று பெரிய தொட்டிக் கள்ளுடன் இந்திரனுக்குப் படைத்தமை தெளிவாக மொழியப்பட் டிருக் கின்றது; அதன் பத்தாம் மண்டிலத்து கசு-ஆம் பதிகத்தின் ச-வது செய்யுளில் ஆரியர் தம்முள் இறந்துபோன ஒருவனைச் சுடுகாட்டின் விறகின்மேல் வைத்துக் கொளுத்தப் போகையில் ஓர் ஆட்டைக் கொன்று அதன் உறுப்புகள் ஒவ்வொன்றனை யும் பிணமாய்க் கிடப்பவன் உறுப்புகளின்மேல் வைத்து அவ னைக் கொளுத்தினமை கூறப்பட்டிருக்கின்றது; அம்மண்டிலத் து அரு-ஆம் பதிகத்தின் கங-வது செய்யுளில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் மணம் நடத்துதற்குமுன் மகமீன்நாளிற் காளை மாடுகளைக் கொன்று பகலவனுக்குப் பலியூட்டி, அதன்பிற் பங் குனிநாளில் மணம் நடத்தும் முறை பகரப்பட்டிருக்கின்றது; அம்மண்டிலத்து அகூ-ஆம் பதிகத்தின் கச-வது செய்யுளில் ஆரியர் பதினைந்து எருமைமாடுகளைக் கொன்று இந்திரனுக்குப்

படைக்க, அவன் அவற்றின் கொழுப்பை ஆரத்தின்று வயிறு நிறைந்தடைந்த மகிழ்ச்சி எடுத்துரைக்கப்பட் டிருக்கின்றது; அம்மண்டிலத்து கூக-ஆம்பதிகத்தின் கச-வது செய்யுளிற் குதிரைகளையும் எருதுகளையும் ஆக்களையும் வறட்டு ஆக்களையும் செம்மறி யாடுகளையுங் கொன்று ஆரியர் வேள்வி வேட்டமை விளக்கமாக விளம்பப்பட் டிருக்கின்றது. இருக்குவேதத்திற்குப் பின்எழுந்த 'பிராமணங்கள்,' 'ஸ்மிருதிகள்' என்பவற்றில் விரிவாகச் சொல்லப்பட் டிருக்கும் உயிர்க்கொலை வேள்விகள் தாம் இருக்குவேத காலத்திற்குப்பின் உண்டாயின வென்று கூறத்துணிபவர், இருக்குவேதத்திலேயே ஒருகாலன்றிப் பலகாலும் இங்ஙனம் விளக்கமாக நுவலப்பட்டிருக்குங் குடி கொலை மலிந்த வெறியாட்டு வேள்விகளை நிகழவில்லையென்றலும், அவை தமக்கு வேறுபொருள்கள் உளவென்றலும் 'முழுப் பூசனிக் காயைச் சிறுசோற்றில் மறைப்பதற்கே' ஒப்பாய் ஆராய்ச்சியறிவுடையாரால் நகையாடி விடுக்கற்பாலனவாய் ஒழியும் என்க. இவை தமக்கெல்லாம் வேறுபொருள்கள் உளவென்பார் கூற்றுத், 'தவவொழுக்க மென்பது ஏதோர் உயிரையுங் கொன்று அதன் ஊனை உண்ணுமையே யாம்' என்று வற்புறுத்தி ஔவைப்பிராட்டியார் மொழிந்த "நோன்பென்பது கொன்றுதின்னுமை" என்னும் அறிவுரைத் தொடரைத் தன் கருத்துக்கு இணங்குமாறு பொருள்படுத்த வேண்டினுன் ஓர் ஊன்தின்னி, 'தின்னுமை' என்னும் ஒருசொல்லைத் 'தின் ஆமை' என இரண்டு சொல்லாகவுந், 'தின் ஆ மை' என மூன்றுசொல்லாகவும் பிரித்து 'ஆமை இறைச்சியைத் தின்னல்' எனவும், 'மாடு ஆடு என்பவற்றின் இறைச்சியைத் தின்னல்' எனவும் பொருளுரைத்து, ஆகவே 'தவவொழுக்க மென்பது ஆமை மாடு ஆடு என்பவற்றின் ஊனை யுணவாகக் கொள்ளுதலேயாம்' என்று அவ் வறிவுரைக்குப் பொருள்கூறி ஆரவாரம் புரிதலோடு ஒப்பதாமன்றிப் பிறிதென்னை? ஒரு நூலின் போக்கையும் அதனை இயற்றிய ஆசிரியர் கருத்தையும் பிறழ்த்தித், தாம் வேண்டியவாறெல்

லாம் உரையுரைப்பதும் மெய்யுரையாகுமா? எனவே, தென்னாட்டுச் சைவமுனிவரர் எவரது அருளுரையுந் தமது மருளுரைக்கு இடந்தந்து உதவிசெய்யாமையின், அத் தெய்வமுனிவரரைத் தமக்கு மேற்கோளாகக் கொள்ளுதல் ஆகாமைகண்ட இந் நாட்டுப் போலிச்சைவர் சிலரும் மாயாவாத வேதாந்திகள் பலருந் தமது போலிக்கொள்கைக்கு இசைந்த வடநாட்டு முனிவரர் தயாநந்த சரஸ்வதியை அடைக்கலம்புக்கது சாலப்பொருத்தமேயாம். புக்கும் என்! அவர் கைக்கொண்ட இருக்குவேதமே அவரது கோட்பாட்டின் பொய்ம்மைகாட்டி அவரைக் கைவிட்டதாயின், தயாநந்த சரஸ்வதி அவர்க் கெங்ஙனம் உதவி செயவல்லார்!

அற்றேல் அஃதாக, ஆரியமொழி நூல்களாகிய 'இருக்கு,' 'எசுர்' முதலியவற்றில் தமிழ்ச் சான்றோர்தங் கோட்பாடுகள் புகுந்தவாறு என்னையெனிற் கூறுதும்: ஆரியர் நல்லுணவும் நல்லுறைவிடமும் பெறுதற்குத் தேடியலைந்து தமிழ்நிலமாகிய இப் பரதநாட்டிற்புகுந்தகாலத்துப் பெரும்பாலும் போர் மேற்கொண்டே போந்தனர்; அப்போது தமிழர்கள் நாகரிகத்தின் மிக்காராய், ஆங்காங்கு நகரங்களும், அந்நகரங்களில் அரசியல்களும் அமைத்துப் பொருள்வலியும் படைவலியும் போர்வலியும் மிகப் படைத்தவர்களாய் வாழ்ந்துவந்தமையின், பசித்துவந்த வறியராகிய ஆரியர் பண்டைத் தமிழ்மக்களை எதிர்த்து வெல்லுதல் இயலாதாயிற்று. இயலாதாகவே, பலவகையாலுந் தமிழர்தம் நட்பையும் உறவையும் பெறுதற்குச் சூழ்ச்சிசெய்து, தாம் 'உத்தர குரு' வென்னுந் தேவநாட்டிலிருந்து வந்த தேவர்களேயென்றுந், தாம் பேசும்மொழி தேவமொழியே யென்றுந், தம்மைப் பகைத்தலுந் தமக்கு இடர்செய்தலும் அங்ஙனஞ் செய்வாரை மீளா நரகிற்கு ஆளாக்கு மென்றுந், தம்மை வணங்கித் தாம் ஏவிய செய்தொழுகுவார்க்கு இம்மையில் எல்லா நலங்களும் பெருகுவ தன்றி மறுமையிலும் பிதிரர்களால் உவந்தேற்று உயர்ந்த இன்ப உலகங்களில் வைக்கப்படுவதுங் கைகூடுமென்

றுஞ் சொல்லித் தமிழரிற் பெரும்பாலாரை ஆரியர் தம்வயப் படுத்திவிட்டார். அஞ்ஞான்றை ஆரியரிற் பெரும்பாலார் வடக்கே பனிமிகுந்த நாடுகளிலிருந்து வந்தவர்களாதலின் அழகிய வெண்ணிறமுள்ள உடம்பும் நீல விழிகளும் வாய்ந்தவர்களாயிருந்தனர். அவர்களது அழகிய தோற்றத்தைக்கண்ட அஞ்ஞான்றைத் தமிழரிற் பலர், அவ்வாரியர் சொல்லை மெய்யென நம்பி அவர்களைத் தம்மினும் உயர்ந்த தேவர்களாகவே எண்ணிக் கொண்டாடி அவர்க்குப் பணிந்தொழுகலாயினர். இவ்வளவுக்குத் தமிழரைத் தங் கீழ்ப்படுத்த இடம் பெற்ற ஆரியர்க்கு இனி இங்கு ஆகாதது என்உளது! ஆரியர் கடவுளராகவும், அவர் கொணர்ந்த ஆரியமொழி கடவுளர்மொழியாகவும், அம்மொழியில் அவர் பாடியபாட்டுகள் 'இருக்கு,' 'எசுர்,' 'சாமம்' என்னும் வடிவிற் புருஷமேதத்தில் (ஆண்மகனைக்கொன்று வேட்ட வேள்வியில்) தோன்றியனவாகவும் (இவ்வாறு இருக்கு வேத புருடசூத்த மந்திரத்தில் எழுதிவைக்கப்பட் டிருக்கின்றது), பின்னுஞ் சிலகாலங் கழிந்தபின் இவ்வேதங்கள் சிவபிரானாலேயே அருளிச் செய்யப்பட்டனவாகவும் வைத்துத் தமிழர் கொண்டாடும்படி செய்துவிட்டனர். இவ்வளவில் அமையாது, ஆரியமொழி யல்லாத தமிழ் முதலியன மக்களால் ஆக்கப்பட்டனவாகலின் அவற்றின்கண் வரையப்பட்ட நூல்கள் ஆரியரால் ஏற்கற்பாலன அல்லவெனவும், ஆரியமொழியில் உள்ள நூல்களை தலைமேற்கொண்டு ஏற்றற்குரியன வெனவும், ஆரிய இனத்தவரல்லாத தமிழரும் பிறரும் ஆரியமொழி நூல்களை ஓதுதற் குரிமையுடையரல்ல ரெனவும், தமிழரும் பிறரும் ஆரியர் ஏவிய பணிசெய்து ஒழுகுதல் ஒன்றற்கே உரியரெனவும் மொழிந்து நாட் செல்லச்செல்லத் தமது முதன்மையினை நாட்டுதற்கு வேண்டும் ஏற்பாடுகளையெல்லாம் ஆரியர் ஒரே கட்டுப்பாடாயிருந்து திறமாய்ச் செய்துகொண்டனர். தமிழரில் வலியராயுள்ள அரசர்களையுஞ் செல்வவாழ்க்கையிற் சிறந்த வணிகர்களையுந் தாம் வகுத்த இக் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கி

னால் தமது முதன்மை நிலைபெறுதெனக் கண்டு, அரசரையும் வணிகரையும் மட்டுந் தமக்குக் கீழ் ஒருபடி இரண்டுபடி மட்டில் இறக்கி, அவர்களுக்கு 'க்ஷத்திரியர்,' 'வைசியர்' என்னும் பெயர்களைச் சிறப்பாகத் தருவதுபோற் றந்து, அவர்கள் மகளிரோடு தாம் கலக்கலாம், ஆனால் அவர்கள் தம் மகளிரொடுகலக்கலாகாதென்றும், அங்ஙனங் கலப்பராயின் அவர் பெருந் தீவினைக்கு ஆளாகுவரென்றும், தமக்குக்கீழ் இவ் விருவகுப்பினர் மட்டுந் தம்முடைய ஆரிய நூல்களை ஓதுதற்கு உரிமையுடையரென்றுஞ் சொல்லி அவ் விருவகுப்பினரையுந் தம் மினத்தவராக்கி, அவ்வாற்றால் தமது முதன்மை அவர் தமக்குள்ளும் நிலைபெறுதற்கு இடஞ்செய்துகொண்டனர். இங்ஙனமாக ஆரியரது சூழ்ச்சியாற் பழந்தமிழ் மக்களுக்குட் பெரியதொரு மாறுதல் நிகழ்ந்து பரவவே, ஆரியரால் உயர்ந்தவராகப் பாராட்டப்படுதலும், ஆரியமொழியைக் கற்பதும், ஆரியநூல்வழி யொழுகுதலும், தமிழையுந் தமிழ்வழங்கும் ஏழைமக்களையும் இழிந்த நிலைமைக்கட் படுத்துப் பேசுதலுந் தமக்குச் சிறப்புத் தருவனவாகத் தமிழரிலேயே கற்றவருஞ் செல்வருமாயுள்ளார் கருதுவாராயினர். அதனால், தமிழரில் அரச வகுப்பினரும் பிறரும் ஆரியமொழியை விரும்பிக் கற்று, அதன்கண் உரையாடுதலும் நூல் எழுதுதலுஞ் செய்வாராயினர். இங்ஙனந் தமிழர்க்குள் ஆரியமொழியும் ஆரியர்தம் வழக்கவொழுக்கங்களும் பரவவே, அவ்வாரிய வழக்குகளுக்கு ஒருவாற்றால் உடன்பட் டிருப்பினும், அவற்றின் சிறுமையும் தமிழ் வழக்குகளின் பெருமையும் புடைபட ஒற்றி ஆராய்ந்தளந் துணர்ந்து உண்மை கண்ட 'ஜனகன்,' 'அஜாதசத்துரு,' அஸ்வபதிகைகேயன்,' 'பிரவாகணஜைவலி' முதலான தமிழ்வேந்தர்கள், அமயம் நேர்ந்துழியெல்லாம் ஆரிய முனிவர்க்குத் தமிழ்ச்சான்றோர் நுணுகி யறிந்த மெய்ப்பொருள்களை அவர்க்குரிய ஆரியமொழியிலேயே யெடுத்துத் தெருட்டி, அவர்க்கு மெய்யறிவு கொளுத்தி, அவர் தம் ஆரியக் கோட்பாடுகள் பயனிலவாதன் மேலுந் தீவினைப் பால

வாதலுங் காட்டி வரலாயினர். இவ்வாறு தமிழ்வேந்தர்கள் ஆரியர்க்கு அறிவுறுத்தி வந்த மெய்யுரைத்திரட்டுகளே 'உப நிடதங்கள்' எனப் பெயர்பெறுவவாயின. இத் தமிழ்வேந்தர் களின் பெயர்கள் ஆரியச் சொற்களாயிருத்தல் கொண்டு அவ ரெல்லாம் ஆரியர் போலுமென மயங்கிவிடற்க. சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணத்தி லுள்ள சிவனடியாரின் தனித்தமிழ் இயற்பெயர்கள் பலவற்றை வடநூலார் தமது வட மொழியில் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டவாறு போல, அவ் வேந்தர்களின் பண்டைத் தனித்தமிழ்ப் பெயர்களும் அவ் வாறு ஆரியமொழியில் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டன வென்று உணர்ந்துகொள்க. இன்னுந் தமிழரச வகுப்பினின் றுந் துறவுபுகுந்த 'விசுவாமித்திரர்,' 'தேவாபி' முதலான முனி வரர்களும் ஆரிய மொழியைக் கற்று அதிற் பெரும்புலமை மிக்கு, ஆரியர் கைக்கொண்டு போதருஞ் சிறுதெய்வ வணக்கத் தையும் உயிர்க்கொலை வெறியாட்டு வேள்விகளையுந் தொலைப் பான் வேண்டியே ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிவடிவுகண் மேலும், அவற்றின்கண் ணெல்லாம் அருளொளி வடிவினராய் விளங்குஞ் சிவபிரான்மேலும் பற்பல பதிகங்களை ஆரியர்க்கு மாறாய் அவர்தம் ஆரிய மொழியிலேயே இயற்றி, அவை தம் மைத் தாம் முழுமுதற்கடவுளை வழிபடுங் காலங்களிற் பயன் படுத்தி வந்தனர். இவ்வாறு விசுவாமித்திரர் முதலாயினூர் ஆரிய மொழியிற் பதிகங்களும் நூல்களும் இயற்றினும் அவரெல்லாந் தமிழ்வகுப்பினராதலை யுணர்ந்தன்றே மநுமிருதியும் (க0, சரு),

> "இருபிறப்பாள ரல்லாத மற்றை எல்லா வகுப்பினரும் மிலேச்சர்தம் மொழியைப் பேசினும் அல்லது ஆரியர்தம் மொழியைப் பேசினும் அவரெல்லாந் தஸ்யுக்களேயாவர்"

எனக் கூறுவதாயிற்று. இதனுல் ஆரியரல்லாத தமிழரும் பிற ரும் அக்காலத்தில் ஆரியமொழியைப் பேசினரென்பது பெறப் படுகின்றதன்றே?

தஸ்யுக்களெனப்பட்ட தமிழரில், அரசராயினாரையும் அவருட் டுறவுநிலை புக்காரையுஞ் செல்வவள முடையாரையும் வேறு போக்கின்மையாலே க்ஷத்திரிய வைசிய வகுப்பின்கட் சேர்த்துக்கொண்ட ஆரியர், அங்ஙனஞ் சேர்க்கப்பட்ட அவர்கள் தமக்கு மாறுன தஸ்யுக்களே என்பதனை அமயம் வாய்த்துழியெல்லாம் வெளிப்படையாகச் சொல்லியே வந்திருக்கின்றனர். 'அஜீகர்த்தன்' என்னும் ஆரியப் பார்ப்பனன், தன் மகன் 'சுநஸ்ஸேபனை' வேள்விக்களத்தில் வெட்டி வருணனுக்குப் பலியூட்டவேண்டிக் கேட்ட 'ரோகிதன்' என்பவன்பால் நூறு கறவைமாடுகளை வாங்கிக்கொண்டு அவனை அவனுக்கு விற்றுவிட்டதுமன்றி, வேள்விக்களத்திற் கொணரப்பட்ட தன் மகனைக் கழுத்தறுப்பதற்கு வேறு யாருந் துணியாராய்ப் பின் வாங்கிநிற்றல் கண்டு, தனக்கு இன்னும் இருநூறு கறவைகள் கொடுத்தால் தானே தன் மகன் கழுத்தை வெட்டுவதாகச்சொல்லி, அங்ஙனமே இருநூறு கறவைகள் கொடுக்கப் பெற்றுக் கொண்டு அவ்விளைஞன் கழுத்தைக் கத்திகொண்டு அரியப் போகையில், அம்மகன் தன்தந்தையின் கொடுஞ்செயலைக்கண்டு அலறிக் கடவுளரை வேண்டி அழாநிற்ப, அதுகண்டு பெரிதும் நெஞ்சங்கரைந்தவிசுவாமித்திரர் அச் சுநஸ்ஸேபனை அக்கொலைக்குத் தப்புவித்து, அவனைத் தம் மக்கள் எல்லார்க்கும் மூத்த தலைமகனாக ஏற்றுச் சிறப்புச்செய்தமையும், அந்நேரத்தில் அச் சுநஸ்ஸேபன் விசுவாமித்திரரை நோக்கி "ஓ பரதர்களுக்குத் தலைவரே" என்று விளித்து "நுங்கள் புதல்வர்கள் இசைந்தால், எனக்கு நன்மையுண்டாமாறும் யான் தங்கட்கு மகனுந் தன்மையடையுமாறும் அவர்கள் என்பால் நேயமாய்இருக்கக் கற்பியுங்கள்" என்று வேண்ட, அவரும் அதற்கு ஒருப்பட்டுத் தம் மக்கள் நூறுபேர்க்குந் தம் துணிபு தெரிவிக்க, அவருள் 'மதுச்சந்தர்' எனப்படும் இளைஞர் ஐம்பதின்மர்க்கு மூத்த ஐம்பதின்மர் மட்டும் அதற்கு உடன்படாராக, அதனுல் விசுவாமித்திரர் அவர்மேற் சினங்கொண்டு "நும் வழியில்வருவார் இந்நாட்டை

ஓம்

# மனிதவசியம்

அல்லது

## உலகியல் ஒழுக்கம்

இது
பல்லாவரம்
பொதுநிலைக் கழக ஆசிரியர்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும்
மறைமலையடிகளால்
இயற்றப்பட்டுப்

பல்லாவரம்
பொதுநிலைக்கழகம் என்னும்
சமரச சன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிடப்பட்டது.

February, 1927.

All Rights Reserved.

இதன்விலை இரண்டரை ரூபா.

ஓம்

# முகவுரை

'மணிதவசியம்' என்னும் இந்நூல், இற்றைக்குப் பதினேழு ஆண்டுகளுக்குமுன் கி-பி 1910-இல் அதாவது சௌமிய ஆண்டு மார்கழித்திங்களில் எமது ஞானசாகர ஐந்தாம்பதுமத்தின் ௬-வது இதழில் துவக்கஞ்செய்யப்பட்டது. அப்போது யாம் 'சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்' உயர் வகுப்பு மாணவர்க்குத் தமிழாசிரியரா யிருந்ததுடன், சைவசித்தாந்த மகாசமாஜம் என்னும் ஒரு மாப்பெருங் கழகத்தைத் தோற்றுவித்து அதனையும் நடைபெறுவித்துக் கொண்டு வந்தேம். அப் பெருங்கழகத்திற்கு உறுப்புகளாகப் பற்பல அவைகளைப் பற்பல ஊர்களிலும் நகரங்களிலுந் தோற்றுவித்தற்கும், முன்னரே யிருந்தும் உயிர்ப்புக் குறைந்திருந்தவைகளை உயிர்ப்பித்து நடைபெறுவித்தற்குமாக யாம் ஓயாது ஊர் ஊர் சென்று விரிவுரைகள் நிகழ்த்தி வந்தமையால், எமது ஞானசாகர இதழ்களை அஞ்ஞான்று உரிய காலங்களில் வெளியிடக்கூடாத நிலையில் இருந்தேம். அந் நாட்களில் வெளிவந்த ஞானசாகர இதழ்களில் ஒரு பொருள் நுதலும் ஒருநூலே வெளிவராமற், பலர்க்கும் பயன்படுமாறு பலபொருள் நுதலிய பல பல நூல்கள் பகுதி பகுதியாக வெளிவந்தன. அதனால், 'மணிதவசியம்' என்னும் நூலிலும் ௩௨-பக்கங்களே ஐந்தாம் பதும இதழ்களில் அப்போது வெளிவரலாயின. அதன்பின் கி-பி 1911-ஆம் ஆண்டு வேனிற்காலத்தில் யாம் கிறித்துவகல்லூரி ஆசிரியர் அலுவலைவிட்டு விலகிச், 'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும் பொதுநிலைக் கழகம் ஒன்று நிறுவிப், பல்லாவரத்தை யிருப்பிடமாக்கித், துறவுநிலை புகுந்து, ஞானசாகர ஆறாம் பதுமத்தை நடத்தத் துவங்கினேம். அது துவங்கிய சில நாட்களி னெல்லாம், நடுநாடு தென்னாடுகளிற் பற்பல சிறந்த நகர்களிலும் விரிவுரைகள் நிகழ்த்தும் பொருட்டுச் செல்லலானமையாலும், அதன்பின் வடநாட்டிற் கல்கத்தா, காசி, அரத்துவாரம், துரோணாசிரமம், டில்லி, மதுரா, பம்பாய், சிகந்தராபாத்து முதலான பற்பல நகர்களிலுஞ் சென்று அங்ஙனமே விரிவுரைகள் நிகழ்த்தல்வேண்டினமையாலும், அப்பதும இதழ்கள் இடையிடையே பெரிதுங் காலந் தாழ்த்து வெளிவந்து இரண்டரை யாண்டுகளில் முற்றுப்பெற்றன; அதனால், இந்நூலில் ௩௩ முதல் ௪௦ வரையிலுள்ள பக்கங்களே அதன்கண் வெளிவந்தன. அதன்பின் 'பொதுநிலைக்கழகத்'திற்கென்று பல்லாவரத்தில் ஒரு மாளிகையும் அச்சுக்கூடமும் அமைக்கும் முயற்சியில் நடுநாடு தென்னாடு இலங்கை முதலான இடங்கட்குச் சென்று விரிவுரைகள் நிகழ்த்தவேண்டி வந்தமையின், இடையே இரண்டரை யாண்டுகள்விட்டு எழாம்பதுமந் துவங்கலாயிற்று; அப்பதுமத்திலும் இந்நூலின் ௪௧ முதல் ௫௬ பக்கங்களே வெளிவந்தன. எமது கழகத்திற் கொருமாளிகையும் அச்சுக்கூடமும் எற்பட்டபின்னும், அச்சுக்கூடத்தை நடத்துதற்குத்தக்க அளவு பொருளில்லாக் குறையால் அக் குறை தீரும்பொருட்டு மீண்டும் யாம் தென்னாட்டில் திருச்சிராப்பள்ளிமுதல் ஆரவாய்மொழி வரையிலும், அதன்பிற் கொழும்பிலுஞ் சென்று விரிவுரைகள் நிகழ்த்தவேண்டுவதாயிற்று. அதனால் எட்டாம்பதுமந் துவங்குதற்குப் பின்னும் எறக்குறைய இரண்டாண்டுகள் கழிந்தன. 1917-இல் துவங்கிய ௮-ஆம்பதுமம், அச்சுக்கூடத்தைச் செவ்வனே நடத்துதற்குரிய முற்பழக்கம் எமக்கு இன்மையாலும், செவ்வனே நடத்தத்தக்க வேலையாட்கள் அமையாமையா

லும், பொருள் முட்டுப்பாட்டாலும் இடையிடையே நேர்ந்த இடர்களை நீக்கி அச்சிட்டு முடிவுபெறுதற்கு இரண்டாண்டுகட்குமேற் சென்றன; அப்பதுமத்தில் இந்நூலின் ௫௭-ஆம் பக்கம்முதல் ௮௮-ஆம்பக்கம் வரையிலுமே வெளிவந்தன. 1920-ஆம் ஆண்டு 3-ஆந் திங்களில் ஒன்பதாம் பதுமந் துவங்கியதுமுதல் வெளியூர்கட்குச்சென்று விரிவுரைகள் நிகழ்த்துவதை நிறுத்திக்கொண்டேமாயினும், அஞ்ஞான்று நமக்கு அணுக்கராயிருந்த ஓர் அன்பரின் நன்மைக்காகவும், மாணிக்கவாசகப்பெருமான்பால் யாம் வைத்த அன்பின் பெருக்கைத் தமிழுலகமும் பெறுதற்பொருட்டாகவுந் திருவாசகத்திற்கு விரிவுரை ஒன்றெழுதலானேம். அவ்வுரையின்பொருட்டு மிக ஆழ்ந்தகன்ற நுட்ப ஆராய்ச்சிகள் யாம் இடையறாது செய்து வந்தமையாலும், ஊடேஊடே ஒன்பதாம் பதுமத்தில் வெளிவரும் பிறநூல்களையும் எழுத நேர்ந்தமையாலும், இந் நூலின் ௮௯-ஆம் பக்கம்முதல் ௯௯-ஆம்பக்கம் வரையிலுமே அப்பதுமத்தில் வெளிவந்தன. இவற்றிடையே 'திருவாசகவிரிவுரை'யை மிக விரைந்தெழுதுமாறு யாம் பெரிதும் நெருக்கப்பட்டு, அதனை இரவிலுஞ் சில கிழமைகள் எழுதிவரவே, அதனாற் பிணிப்பட்டு ஒரு திங்கட்குமேல் மயக்கநோயாய்க் கிடந்து, பின் திருவருட்டுணையாற் பிழைத்தெழுந்தேம். அதன்பின் யாழ்ப்பாணத்துள்ள அன்பர்களின் வேண்டுகோட் கிசைந்து அங்கே சென்று ஒரு திங்கள் வரையில் விரிவுரைகள் நிகழ்த்தி மீண்டுவந்து 1922-இன் 3-ஆந் திங்களில் ௧௦-ஆம் பதுமத்தைத் துவங்கி அதில் இந்நூலைமுடித்துவிடுதற்கு உறுதிகொண்டு, இதன் ௧௫௨-ஆம்பக்கம்வரையில் வெளியிட்டுவிட்டேம். அந்நேரத்தில் வேளாளர் நாகரிகம் என்னும் ஒரு சிறு நூலும், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் ஒரு பெருநூலும் எழுதிவெளியிடவேண்டுவது இன்றியமையாததாயிற்று. மாணிக்கவாசகரைப் பற்றிய பெருநூல் மிக விரிந்த நுணுகிய உண்மையாராய்ச்சிக்கு இடஞ்செய்து, சென்ற நான்காண்டுகளாக எமது கருத்தை ஈர்த்து நின்றமையின், இந்நூல் முடிவுபடுந் தறுவாயில் வந்தும் முடிக்கப்படாமலே நின்றுபோயிற்று. இப்போது மாணிக்கவாசகரைப் பற்றிய அந்நூல் முடிவுபெறும் பதத்தில் வந்திருத்தலானும், 'மனிதவசியம்' என்னும் இந்நூலை விரும்பிக் கேட்பார்தொகை நாளுக்குநாட் பெருகி வருதலானும் ஒரே தீர்மானமாய் நின்று, ௧௭-ஆண்டுகளுக்குப்பின் திருவருளுதவியால் இப்போதிதனை எழுதி முடித்திட்டேம்.

வசியமுறைகள், 'திருக்குறள்' 'திருமந்திரத்'தினும் ஏனைச் சித்தர் நூல்களினும் இலைமறைகாய்போல் அருமையாகச் சொல்லப்பட்டிருப்பினும், அவை எல்லாரும் அறிந்து பழகத்தக்க எளிய விரிவான உரைநடையில் இல்லை. இம்முறைகளை உணராமையால் தமிழ்நாட்டவர் வறுமையிலும் நோயிலும் அறியாமையிலுங் கிடந்து துன்புறுதலைக்கண்டு இரங்கியே, இதனைத் தொடர்புடைய உரைநூலாகத் தமிழில் இயற்றினேம். இதனை யொப்பதோர் உரைநூல் இதுகாறும் வேறெவரானும் எழுதப்படாமையால், இதனருமையுணர்ந்து இதனை எல்லாரும் பயின்று நலம் பெறுவாராக!

பல்லாவரம் பொதுநிலைக்கழகம், 10—2—1927. } மறைமலையடிகள்.

கொள்வோர் அதன்கண் மனம் ஒன்றுபட்டு நெடுக நிலைபெறார்; அவர் எவ்வளவுதான் தமது மனத்தை ஒருக்கி நிற்பினும், அவ் வின்பவேட்கை தன்னளவின்மிகப் பெருகி அவரைக் குற்றமான சிற்றின்பத் துறைகளில் இறக்கிவிடும். ஆகவே, அந் நுகர்ச்சியின் இனிமையை முன்னறிந்தோர் பின்னர்த் தம் மகளிரோடிருந்து துறவு நடாத்துதலே சிறந்த நெறியாம் என்க.

அஃதொக்குமேனும், மனைவிமக்களோடொருங்கிருந்துகொண்டே தவவொழுக்கத்தை மேற்கொள்ளல், இருவகை யறமும் ஒன்றாக நடப்பித்தற்குவேண்டிய பொருள்வருவாய் இல்லாக் குறையானும், அதன் வாயிலாகவரும் பலகவலைகளானும் இடர்களானும் துன்புறுதற்கு இடஞ்செய்யுமாகலிற் சிற்றின்பவேட்கை முற்றும் அவிந்த முதுமைக்காலத்தே தனித்துறவு பூண்டு அவ் வொழுக்கத்தில் நிற்றலே நலமுடைத்தாமெனின்; அற்றன்று, தவவொழுக்கத்தில் நிற்போர் அவ் வொழுக்கத்திற் கேற்றபடி பிறர்க்கு அறிவு நூற்பொருள் உணர்த்தும் பல வழிகளால், அவ்விழுப் பொருளுணர்த்தப் பெறும் நல்லார் சிலரேயாயினும் அவர் மனம் உவந்து தரும் நற்பொருள் கொண்டு அவ் விருவகையறமும் இனிது நடத்துதல் கூடுமாகலானும், முதுமைக்காலம்வரையில் உயிரோடிருத்தல் உறுதியின்மையின் அது வரும்பொழுது தவத்தைச் செய்வேமென்றல் பேதைமையே யாகலானும், கருவிகள் வலிமைகுன்றித் தத்தஞ் செயல்களைச் செவ்வனே செய்யமாட்டா அம் முதுமைப் பொழுதில் அரிய பெரிய தவவொழுக்கத்தை மேற்கொண்டு புரிதல் இயலாமையானும், கருவிகள் சிறிதும் வலிகுறையாத முதியோரும் உளராலெனின் அத் தகையோர்க்குச் சிற்றின்பவேட்கை தணியாதாகலானும் முதுமைவந்தபின் தவத்தை மேற்கொள்வேமென்றல் ஒருவாற்றானுங் கைகூடாதென்க. இளமைக் காலந் தொட்டே அதனைத் தமக்கினிய மகளிர்மக்களோடு உடனிருந்து நடாத்தி அவரையும்முன்னேற்றித் தம்மையும் முன்னேற்றும் அரும்பேறு உடையார்க்கே முதுமையிலும் அஃது இனிதுநடைபெறுவதாகுமென்றுணர்ந்து கொள்க.

இனி, மேற்காட்டியவாறு மாதரை முழுதும் அருவருத்து அகலாமலும் அவரை அடுத்தடுத்து மருவி உடம்பின் வலியசாற்றை வீணே செலவிடாமலும் இரண்டுக்கும் நடுப்பட்ட நிலைமையிலிருந்து ஒழுகவே, விந்துவானது இறுகி உடம்பின் அகப்புற உறுப்புகளை வலிவுறச்செய்யும். உடம்பு வலிவேறித் தூயதாகவே, அதனோடு இசைந்துநடக்கும் மனமும் அதன்வழிச் செல்லும் நினைவும் ஆற்றல் மிக்குத் தூயவாய்த் திகழும். ஆதலால், மந்திரங்களும் வசியமுறைகளுங் கைகூடுதற்கு விந்துவை வலி தாக்கல் இன்றியமையாததாகும். விந்துவுக்கு வலிவேற்றினாருங்கூட மாதரைப் புணர்ந்த நாட்களிலும் அதனை அடுத்த நாட்களிலும் மந்திரம்

உருவேற்றுதலும் வசியமுறைகளைச் செய்தலும் ஆகா. ஏனென்றால், புணர்ச்சியில் விந்து கழிந்தபின் உடம்பும் மனமும் வலிவுகுன்றி நிற்கும்; ஆகையால், அப்பொழுது செய்யும் மந்திர வசிய முயற்சிகள் பயன்றரா. அதுவேயுமன்றி, வலிகுன்றிய அந் நிலையிற் செய்யுங் கடு முயற்சிகள் எவையாயிருப்பினும் அவை உடம்புக்கு நிலைக்களனான மூளையைப் பழுது படுத்தி நோயையும் வருவிக்கும்; இவ் வுயர்ந்த முயற்சிகளையே யன்றி, உலகிய லொழுக்கத்தின் பொருட்டுத் தொடங்கும் புதியமுயற்சிகளையுங் கூட அந் நாட்களில் தொடங்குதல் ஆகாது; அன்றித் தொடங்கினால் அவை கருதிய பயனைத் தராமையோடு கருதியதற்கு மாறான தொன்றை விளைத்துத் துன்பத்தைத் தரினுந்தரும். ஆதலால், விந்து கழிந்த நாளி லும் அதற் கடுத்த நாளிலும் வசிய முறைகளைப் பழகுதலுஞ் செய்தலும் விட்டு ஓய்ந்திருந்து, மறுபடியும் விந்து ஊறி உடம்பு வலிவேறிய மூன் றாம் நாளிலிருந்து அவற்றைப் பழகுதற்குஞ் செய்தற்கும் புகுக.

மேலும் மேலும் விந்துவை இறுகச் செய்தலிற் கருத்தை நிலைபெற ஊன்றுதல் வேண்டும். நினைவை உயர்ந்த பொருள்களில் ஒருவழி நிறுத் துதலும், மூச்சை ஒடுக்குதலும் விந்துவை இறுகச்செய்தற்குரிய முறைக ளாகும். அடுத்தடுத்துக் காம இன்பத்தை நினைந்துகொண் டிருப்பார்க்கு விந்து நீர்த்துப் போகும். அதனை நினையாமல், முழுமுதற் கடவுளின் நிலைகளையும், உயிர் இறைவனைக் கூடுதலால் விளையும் பேரின்பப் பேறு களையும், சான்றோர் ஆழ்ந் தாராய்ந்து வரைந்த அறிவுநூற் பொருள்களை யும், உலகத்திற்குத் தாஞ்செய்யவேண்டிய உயர்ந்த கடமைகளையுந் தொடர் பாக நினைந்துவருதலால் விந்து முத்துமணிபோல் இறுகும். இவற்றோடு, மனம் ஒருவழி நிற்றற்குப் பெரிதும் உதவி செய்வதாகிய மூச்சு ஓட்டத் தைச் சிறிதுசிறிதாகக் குறைத்து, அம் மூச்சை உள்ளே ஒடுக்கிவருதலும் வேண்டும். இவ் இருவகை அக முயற்சிகளுக்குந் துணையாகப், புறத் திருந்து உட்கொள்ளும் உணவைத் தூயதாகத் தெரிந்தெடுத்து உட் கொள்ளும் புற முயற்சியும் அவற்றிற்கு அடுத்தநிலையிற் சிறந்ததாகும். காரமும் புளிப்பும் நிரம்பச் சேர்ந்த உணவு விந்துவின் ஆற்றலைக் கெடுக் கும் நீர்மைய தாகலின், அத் தகைய வுணவை மெல்லமெல்ல விலக்கி வருதல்வேண்டும்; உயிர்க்கொலையால் வரும் எவ் வகையான ஊன் உண வையுந் தொடுதலும் ஆகாது; கொலைத்தொழிலானது இறைவனது இரக்க இயல்புக்கு முற்றும் மாறான தொன்றாகலானும், அத் தொழிலைச் செய் வாரைக் கண்டு எல்லா உயிர்களும் உளம் நடுங்குதலானும் அதனால் வரும் ஊனை உண்பார்க்கு வசிய ஆற்றல் உளதாகாது; ஏனென்றாற்,

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்று ஊக்காது ஒன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்" என்று தெய்வத் திருவள்ளுவர் அரு ளிச் செய்தபடி, ஊனுண்பாரது எண்ணம் பிற உயிர்களின் துன்பத்

றையும் நன்மையையுங் கருதிப் பாராதாகலின், அவர்க் கெழும் நினைவானது நினைவு வெளியில் நடுக்கத்துக்கு ஏதுவான அதிர்ச்சியைத் தோற்றுவித்து, அந் நினைவு வெளியில் தொடர்புபட்டு நிற்கும் எல்லாஉயிர்களின் உள்ளத்திலும் அச்சத்தை விளைவிக்கும். அதனால் அவ்வச்சத்துட்பட்ட உயிர்கள் தம்முயிர் பிழைக்க அவரை அகன்று ஒழுகும் நினைவிலும் முயற்சியிலுமே ஈடுபட்டு முனைந்து நிற்கும்; அங்ஙனம் நிற்கவே, ஊன் உண்பார் கொள்ளும் வசிய நினைவு அவ்வுயிர்களின் உள்ளத்தை அணுக மாட்டாதாய்த் திரும்பித், தன்னையுடையார்பாற் சென்று அவரையே துன்புறுத்தும். மற்று, ஊனுணவு கொள்ளாத அருள்நினைவுடையாரைக்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்" என்ற அருளுரைப்படி, எல்லா உயிர்களும் எளிதிற் றெரிந்து அவர்பால் அன்பு மீதூரப் பெறுமாகலின், அவர் நினைந்தபடி யெல்லாம் அவை அவர்க்கு வயமாகி நடக்கும். முன்னே நமக்குப் பழக்கமில்லாத சிலரை நாம் புதிதாய்க் காண நேருங்கால், அவருட் சிலரை நாம் விரும்புகின்றனம் வேறு சிலரை நாம் வெறுக்கின்றனம் அல்லமோ? அவ்வாறு நம்மை யறியாமலே நாம் புதியராய் வந்தார் சிலரை விரும்புதலும் மற்றுஞ் சிலரை வெறுத்தலும் என்னையென்று நுணுகி நோக்குங்கால், அறிவும் அன்பும் அருளும் வாய்ந்தாரது உள்ளம் தன்னை உடையாரது முகத்தில் ஒருவகை இனிய கவர்ச்சியினைத் தோற்றுவித்தலால், அக் கவர்ச்சியுடையார் சிலரைக் கண்டவளவானே ஏதோர் ஏதுவும் இன்றி நாம் அவரை விரும்புகின்றேம்; மற்று அத்தகைய உயர்ந்த இயல்புகள் வாயாதாரது உள்ளங் கொடுந் தன்மைகளுக்கும் அறியாமைக்கும் இடனாய் இருத்தலால் அஃது அவரது முகத்தில் அருவருப்பான சாயலினைக் காட்டும்; காட்டவே அவ்வியல்பினரைக் கண்ட நாம் கண்டபொழுதே ஏதோர் இயைபும் இன்றி அவர்பால் வெறுப்புக்கொள்கின்றேம். அதுவேயுமன்றி, மேலே விளக்கியபடி ஒவ்வொருவர் நினைவுகளும் நினைவுவெளியிற் பரந்து செல்லுதலால், உயர்ந்த இயல்புவாய்ந்தார் தம் நினைவு தன்னோடொத்த உயர்ந்த நினைவுகளுடன் மட்டுமே இனிது இயைந்து நிற்கும்; அங்ஙனம் நிற்கவே, அவ்விழுமிய நினைவுகளையுடையாரெல்லாரும் ஒருங்கு இழுக்கப்பட்டு, ஒருவர்பால் ஒருவர் உண்மையன்பு மீதூரப் பெறுவர். இங்ஙனமாகவே, மக்களினுந் தாழ்ந்த எல்லாச் சிற்றுயிர்களும் மக்களைப்போலவே உணர்வுள்ள உயிர்ப்பொருள்களாதலால், நினைவுவெளியில் தொடர்புபட்டு நிற்கும் அவைகளின் உணர்வும், ஊன் உண்ணுங் கொலைகாரர்தம் எண்ணத்தினையும் ஊன் உண்ணா அருளாளர் தம் எண்ணத்தினையும் எளிதிலே உணர்ந்து, முன்னையோரைக் கண்டு அஞ்சியோடுதலிலும், பின்னையோரைக்கண்டு விரும்பி நெருங்கி யொழுகுதலிலுங் கருத்துள்ளனவாய் இருக்கின்றன. ஆகவே, உயிர்களைக்

கொல்லாமலுங், கொல்லப்பட்ட உயிர்களின் ஊனைத் தின்னாமலும் அன்பும் அருளும் நிரம்பிய உள்ளத்தனாய் இருப்பவனை எல்லா உயிர்களுந் தொழும் என்ற ஆசிரியர் திருவள்ளுவனார் உரை எட்டுணையும் பொய்யாகாத மெய்யுரையேயாம். அவ்வியல்பினானுக்கு எல்லா உயிர்களும் எளிதிலே வயமாதல் சொல்லவேண்டா.

இன்னுங், கொழுப்பான உணவுகளை இடையறாது மிகுதியாய் உண்பார்க்கு உடலிற் கொழுப்புங் குருதியும் மிகுந்து விந்துவைப் பெருக்குவதோடு, உடம்பும் வரவரப் பெருத்துப் பெருஞ்சுமையாய்விடும். ஆதலாற், கொழுப்பான உணவுப்பண்டங்களை அளவில் மிகக் குறைத்துண்பதுடன் இடையிடையே அவைகளை உட்கொள்ளாமலும் மறுத்துவிடல் வேண்டும். உணாப் பொருள்களின் வகைகளையும் அவற்றின் இயல்புகளையும் 'மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி?' என்னும் நூலில் விரித்து விளக்கி இருக்கின்றேம். அதனைக் கருத்தூன்றிக் கற்று அதன்படி ஒழுகுதல், வசிய ஆற்றலைப் பெறவேண்டுவார் இன்றியமையாது செயற்பாலதாகும். கொழுமையான பண்டங்களை அடுத்தடுத்து உண்ணாமல் மறுத்தல் ஒன்றுமே போதாது. ஒருநாளிற் பலகால் உணவெடுத்தலையும் விடுதல் வேண்டும். பகற்காலத்தில் உச்சிப்பொழுதில் மட்டும் வயிறு நிறையச் சாப்பிடலாம். காலைப்பொழுது மாலைப்பொழுது இராப்பொழுதுகளில் அவ்வாறு நிறையச் சாப்பிடுதல் ஆகாது. அப் பொழுதுகளில் நீர்த்த கஞ்சியேனும், பசி மிகுதியாயிருந்தால் இசைவான சில பழங்களேனும் உட்கொள்ளுதலே நன்று; இராக்காலத்திற் கோதுமைக் கஞ்சி, கோதுமையடை என்பவற்றைச் சிறிது ஆவின் பாலுடன் சேர்த்துண்டலே நலமுடைத்து.

இனி, நண்பகற்காலத்தும் உணவு எடாமல் ஒரு திங்களிற் சிலநாட்கள் பட்டினிகிடந்து நோன்பு நோற்றல், உடம்பைத் தூய்தாக்கி அதனோடு ஒற்றுமைப்பட்டியங்கும் நமது மனவுணர்வையும் ஒளிபெறச் செய்தற்குச் சிறந்த வழியாகும். பட்டினிகிடப்பவர் பசித்துன்பத்தை உணரல் ஆகாது; பசியை உணர்குவராயிற் பட்டினிகிடத்தலாற் பயன் இன்றாம்; அதுபற்றியே தெய்வத் திருவள்ளுவர் "ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்" என்று அருளிச்செய்தார். ஈதென்னை? பசி மிகும்போது அதன் வருத்தத்தை உணராமல் இருத்தல் யாங்ஙனங் கூடுமெனின், நினைவை உயர்ந்த பொருள்களிற் பதியவைத்தலாற் கூடுமென உணர்ந்துகொள்க. மிக விரைந்து முடிக்கவேண்டியதொரு கணக்கை முடிக்கும் முயற்சியிலோ, சிக்கலான ஓர் ஆராய்ச்சித்துறையில் இறங்கி ஆங்குள்ள பொருள்களை ஆழ்ந்தாராய்ந்து சிக்கு விடுவிக்கும் முயற்சியிலோ, பல பின்னலாய் உள்ள உயர்ந்த இயந்திரங்களைப் (பொறிகளைப்) பிழைபடாமல் இயக்கும் முயற்சியிலோ தமது கருத்து முற்றும் ஈர்க்கப்பட்டு நிற்பார்க்கு அம்

முயற்சிகள் முடியும் வரையிற் பசியும் விடாயுந் தோன்றாமை நாம் கண்கூடாய் அறியக்கிடந்த தொன்றன்றோ? அங்ஙனமே அடியாரின் வரலாறுகளையும், கடவுள் அவர்கட்குச் செய்த அருட்டிறங்களையும், அன்பராயினர் ஒருவர்க்கொருவர் ஆற்றிய உதவிகளையும், சிற்றுயிர்த் தொகைகளின் அமைப்புகள் செயல்களையும், பலதிறப் புற்பூண்டு மரஞ் செடி கொடிகளின் வகை வகையான அமைப்பின் அழகுகளையும், இயற்கைப் பொருட்டோற்றங்களையும், இன்னும் இவைபோல்வனவற்றையும் ஆழ்ந்தாழ்ந்து நினைந்து வியக்கும் முகத்தாற் பசித்துன்பத்தை உணராமலிருக்கலாம். அது சிறிதுகாலம் வரையிற் கூடுமேனும், நாட் செல்லச் செல்லப் பசித்துன்பமானது நாம் தாங்கும் அளவைக் கடந்து மிகுமாதலின், அப்போதும் அதனை உணராமலிருத்தல் யாங்ஙனமெனிற்; காலமெல்லாம் பட்டினிகிடத்தல் வேண்டுமென்பது எமது கருத்தன்று; ஒவ்வோர் உயர்ந்த நோக்கத்தை மேற்கொண்டவர் அந் நோக்கம் ஈடேறும்பொருட்டுக், கிழமைக்கு ஒரு நாளோ மூன்று நாளோ, ஒரு திங்களுக்கு ஒரு கிழமையோ இரண்டு கிழமையோ, ஓர் யாண்டுக்கு முப்பது நாளோ நாற்பது நாளோ பட்டினிகிடந்தால் அவ்வளவே போதும். அங்ஙனம் பட்டினி கிடக்குமிடத்தும், ஒன்று அல்லது மூன்றுநாள் வரையில் நோன்பியற்றுவோர் காலையில் தூய வெறுந் தண்ணீரையேனும், உச்சிப்பகலில் ஓர் உழக்கு ஆவின்பாலையேனும் பருகிவிட்டு நினைவைத் தாங்கருதிய உயர்ந்த நோக்கத்திற் பதித்திருக்கலாம். மூன்று நாட்களுக்குமேல் ஒரு கிழமை எழுநாள் வரையில் நோன்பு நோற்போர், காலைப்பொழுதில் தூய தண்ணீரும், உச்சிப்பொழுதில் ஓர் உழக்கு ஆவின்பாலும் பேயன் அல்லது செவ்வாழை குடகு நாரத்தை என்னும் இவற்றின் சில பழங்களும், மாலைப்பொழுதிற் கற்கண்டுஇட்டுச் சிறிது காய்ச்சிய ஓர் ஆழாக்கு ஆவின் பாலும் உட்கொள்ளலாம். ஒரு கிழமைக்குமேல் இரண்டுகிழமை நோன்பு இயற்றுவோர் காலையிற் சிறிது தூய தண்ணீரும், நண்பகலில் ஒருழக்கு ஆவின்பாலில் அரைத்துக் குழைத்த சில வாதுமைப் பருப்பும் பேயன் செவ்வாழை நாரத்தையின் கனிகள் சிலவும், மாலையில் கற்கண்டும் வாதுமைப் பருப்புச் சிலவும் அரைத்துச் சேர்த்த ஓராழாக்கு ஆவின்பாலும் அருந்தலாம். இவற்றிற்குமேல் வலுவான உணவுகளை உட்கொள்ளுதல் பட்டினிகிடந்து நோன்புநோற்றல் ஆகமாட்டாது. முழுநிலாக் காலத்தும் மறைநிலாக் காலத்தும் ஏனைச் சில சிறப்புநாட்களிலும் பட்டினி கிடந்து நோன்பு இயற்றுவேம் எனப் புகும் இக்காலத்தார் பலரும், மற்றை நாட்களில் உண்ணும் உணவைவிடப் பன்மடங்கு வலுவாகச் சமைத்த கொழுவிய பண்டங்களை விலாப்புடைக்கத் தின்று, கற்கண்டும் வாதுமைப்பருப்புங் கொடிமுந்திரிப் பழமும் நிரம்பப்பெய்து வற்றக்காய்ச்சிய ஒருபடி திரட்டுப்பாலையோ அல்லது அதனோடொத்த தேனீரையோ

வயிற்றில் இடம் இல்லாதவரையிற் பருகிவிட்டு இவ்வளவு பேருணவுக்குஞ், 'சிற்றுண்டி' அல்லது 'பலகாரம்' எனப் பெயரிட்டு 'இன்றைக்கு எமக்கு நோன்புநா ளாகையாற் பலகாரந்தான் பண்ணினேம்' என்று பெருமைபேசிக் கொள்கின்றார்கள்! 'பலகாரம்' என்னுஞ் சொல்லோ 'பலாகாரம்' என்னுஞ் சொல்லின் திரிபாகும். பலாகாரம் என்பது 'பல' 'ஆகாரம்' என்னும் இரண்டு சொற்களாய்ப் பிரிந்து 'பழமாகிய உணவு' எனப் பொருள்படும். சான்றோர்கள் தாம் பட்டினிகிடக்கும் நாட்களிற் பசியின் கொடுமை தணித்தற்குச் சில பழங்களை மட்டும் அயின்று வந்தமையால், நோன்புநாட்களிற் கொள்ளும் அவ்வுணவு 'பலாகாரம்' எனப் பெயர்பெறலாயிற்று. ஆனல், இக் காலத்துப் பேருண் அடைக்கும் மாந்தர்களோ, மற்றை நாட்களைவிட நோன்பு நாட்களில் நெய் சொட்டச் சொட்டச் செய்த இலட்டுகம் வாதுமைக் கொழும்பாகு உப்புமா உழுந்துவடை கடலைஉருண்டை உருளைக்கிழங்குத் தோய்ப்பு வாதுமை நொய்ப்பொங்கல் இட்டிலி தோசை முதலிய மிகக் கொழுமையான உணப் பண்டங்களுக்குப் 'பலகாரம்' எனப் பெயர் வைத்துக்கொண்டு அவற்றை நிரம்பத் தின்கின்றார்கள். இவ்வாறு அளவுக்கு மிஞ்சித் தின்பதனலேயே இவர்கள் இங்ஙனம் நோன்புநோற்கும் நாட்களுக்குப்பின் நாட்களில் வயிறுகெட்டுப் பலவகை நோய்களுக்கு ஆளாகின்றார்கள். இந் நாட்டிலுள்ள மக்கள் நோய்ப்படும் நாட்களையும், அந் நாட்களுக்குமுன் நாட்களில் நிகழும் நிகழ்ச்சிகளையும் நன்காராய்ந்து பார்ப்பவர்க்கு யாங் கூறுவதன் உண்மை இனிது புலனும். எனவே, பட்டினிகிடக்கும் நாட்களிற் சில பழங்களையும் பாலையுந் தவிர வேறு வலுவான பண்டங்களை உட்கொள்ளுதல் ஆகாதென்பது விளங்கற்பாலதாம். இம் முறைக்கு மாறாக நடப்பவர்க்கு வசிய ஆற்றல் உண்டாகாமையோடு நோயும் வரும். ஆதலால், வசியமுறையைக் கைப்பற்றி ஒழுகும் நாட்களிற் பாலையும் பழம் வாதுமைப்பருப்பு முதலான சிறிது சிற்றுண்டிகளையும் அன்றி, வேறு எவற்றின்மேலும் நினைவைச் செல்லவிடற்க.

இவ்வாறு வசியத்தின்பொருட்டு நோன்பியற்றும் நாட்களில் நிரம்பவுங் கருத்திற் பதித்துச் செயற்பால தொன்றுண்டு. அஃது என்னையென்றால், உடம்பின் அகத்தையும் புறத்தையும் வெந்நீர் கொண்டு கழுவித் தூய்துசெய்தலே யாம். உடம்பின் புறத்தைத்தான் நீரிற் குளிப்பித்துத் துப்புரவு செய்யலாம்; அதன் அகத்தையும் அவ்வாறு துப்புரவு செய்தல் யாங்ஙனமெனின்; நீரேற்றி (எநிமா) என்னுங் கருவிகொண்டு மலக்குடருக்கு ஒருபடி வெந்நீரை உட்செலுத்தி அதனை நாடோறுந் துப்புரவு செய்தலே உடம்பின் அகத்துள்ள அழுக்கைக் கழுவிவிடுதலாகும். இங்ஙனம் மலக்குடலைக் கழுவிவிடும்முறையினை 'மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி?' என்னும் எமது நூலில் விளக்கிக்காட்டியிருக்கின்

நேரம்; அதனை அங்கே கண்டுகொள்க. அகத்துள்ள மலஅழுக்கைக் கழுவி விடாமல், உடம்பின் மேற்புறத்தை மட்டும் எத்தனை முறைதான் தண்ணீர்விட்டுக் கழுவினாலும், உடம்பு தூய்தாகாது. மலக்குடரிலுஞ் சிறுநீர்ப்பையிலும் ஒவ்வொருநாளுஞ் சேரும் அழுக்கைவிட அருவருக்கற்பாலதும் நஞ்சாவதும் ஆன அழுக்கு வேறு யாண்டும் இல்லை. ஆதலால், முடைநாற்றம் நிறைந்த நஞ்சாகிய அம் மலஅழுக்கை நாடோறுங் கழுவித் துப்புரவு செய்துவந்தால், உடம்பின் மேற்புறத்தை அடுத்தடுத்துக் கழுவாதுவிடினுங் குற்றமில்லை. நாடோறும் நீராடத்தக்க உடம்பின் நலம் இசையாதவர்களுக்கு, ஒரு சிற்றுடையை வெந்நீரிற் றோய்த்துப் பிழிந்து மேலே தேய்ப்பின் உடம்பின் மேற்புறந் துப்புரவாகும். ஆனால், உள்ளுள்ள மல அழுக்கைக் கழுவாதவர்க்கோ, உடம்பின் புறத்தை நாள் ஒன்றுக்கு எத்தனைமுறைதான் தேய்த்துக் கழுவினாலுந், தூய்மை உண்டாகாது. மலம்நிறைந்த ஒரு மட்குடத்தை மூடியிட்டு வாய்மறைத்து, அதன் மேற்புறத்தைக் கழுவி மஞ்சட் பூசிப் பொட்டிட்டுப் பூச்சூட்டி எவ்வளவுதான் ஒப்பனை செய்யினும் அதற்குத் தூயதன்மை உண்டாகுமோ? அதுபோலவே, உடம்பின் அகத்தைத் துப்புரவு செய்யாதார்க்குந் தூய்மை யுண்டாகாதாகலின், வசியத்தின் பொருட்டு நோன்பியற்றுவோர் முதலில் அகத்தைக் கழுவித் துப்புரவு செய்தலை வழுவாமற் கைக்கொண்டு ஒழுகுக.

இப் பழக்கத்தை முறையாகச் செய்துவருதல் போலவே, மனத்தையும் மொழியையுந் துப்புரவாக வைத்தல் வேண்டும். பிறர்க்குத் தீங்கு பயப்பதான எதனையும் மனத்தின்கண் நினைத்தல் ஆகாது. தீய எண்ணங்கள் உள்ளத்தைப் பாழாக்கி மலினமாக்கும். நல்லெண்ணங்கள் அதனை வலிவாக்கித் தூய்மைசெய்யும். ஆதலால், தீய நினைவுகள் உள்ளத்தின்கட் புகுதற்குச் சிறிதும் இடங்கொடாமல், அவற்றிற்கு எதிரிடையான நினைவுகளைக் கீழே குறிப்பிட்ட மந்திரமொழிகளின் உதவியால் அடுத்தடுத் துள்ளத்தின்கண் வருவித்திடுக:

"ஓம் அன்பும் அருளும் இரக்கமும் ஓங்குக!"

"ஓம் இன்பமும் மகிழ்ச்சியும் எங்குந் தங்குக!"

என்னும் இம் மந்திரமொழிகளை நினைவில் உருவேற்றுக. இந் நினைவுகள் உள்ளத்திற் பதியப்பதிய அவ்வுள்ளந் தூயதாகி அளவிறந்த ஆற்றலுடையதாகும்.

இங்ஙனம் உள்ளத்தைத் தூய்தாக்கும் பழக்கத்திற்கு ஏற்பவே, மொழியினையுந் தூய்தாக்கும் பழக்கத்தைக் கருத்தாய்ச் செய்துவருக. தெய்வத் திருவள்ளுவர்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு" என்று அருளிச்செய்த அறி

வுரையைமட்டும் ஒவ்வொருவருந் தம் உள்ளத்தின்கண் நிலைபெறவைத்து ஒழுகுவராயின் இம்மண்ணுலகு விண்ணுலகினும் மேற்பட்டதாய் விளங்கும். நடவாத பொய்யைச் சொல்லிப் பிறனை ஏமாற்றி அவரைத் துன்பத்திற்கு உள்ளாக்குதலும், எந்நேரமும் பிறருடைய குற்றங்களை எடுத்துப் பேசுதலும், ஒருவரை அவரது முகத்தெதிரே புகழ்ந்துபேசி அவரில்லாதபோது இகழ்ந்து தூற்றுதலும், பயனில்லாத சொற்களை வீணே விரித்து உரையாடுதலும், ஒருவரிடத்து இல்லாத நலங்களை இருப்பனவாக வைத்துப் பொய்யே புகழ்தலும், தாங் கூறும் பொருள்களை முன் பின் ஆராய்ந்துபாராமல் ஒன்றோடொன்று முரணச் சொல்லுதலும், பிறர் சொல்வனவற்றை யெல்லாம் மறுத்துமறுத்துக் கூறுதலும், எந்நேரமும் நகைப்புக்கு இடமானவைகளையே நொடித்தலும், தன்னை எப்போதும் பெருமைப்படுத்தி இறுமாந்து இயம்புதலும் இன்னும் இவை போன்ற உரையாட்டுகளுந் தம்மிடத்து நிகழாமல் தம் சொற்களை நிரம்பவுங் கருத்தாய்ப் பாதுகாத்து வழங்கல்வேண்டும். ஆயிரம் பொன் வருவதாயிருந்தாலும் பிறர்க்குத் தீமையை விளைக்கும் பொய்ச் சொற்களைச் சிறிதுஞ் சொல்லலாகாது. பிறருடைய குற்றங்களை மகிழ்ந்து பேசுதற்கு இடம் வாய்க்கும்போதெல்லாந், தமதெண்ணத்தை உறுதியாக நிறுத்தி வாயைப் பூட்டிட்டு அதனைத் தடைசெய்து, வேறு நல்லவழிகளில் நினைவைத் திருப்புதல்வேண்டும். ஒருவரை அவர்க்கு நேரில் உயர்த்துப் பேசுதலைப் பார்க்கினும் அவரில்லாதபோது அவரைப் பன்மடங்கு மேலாக உயர்த்துப் பேசுதலே செயற்பாலது; நேரே ஒருவரை உயர்த்துப் பேசாவிடினும் விடுக; அவரில்லாதபோது அவர்தம் நலங்களை எடுத்துப் பேசுவிரேல் நும்மை உலகமெல்லாந் தலைவணங்கும். எதனைப் பேசினாலும் பிறர்க்குப் பயன்படுவனவற்றையும் நுமது அறிவுவளர்ச்சிக்கு இடஞ்செய்வனவற்றையுமே பேசுக. பொன்னையும் மணிகளையும் வாரி வாரிச் சொரிபவரே யாயினும் ஒருவரிடத்தில்லாத நலங்களைப் பேசுதல் விட்டு, அவரிடத்துள்ள நலங்களைமட்டும் எடுத்துப் புகழவேண்டும் அளவு புகழ்க. முன் சொன்னதும் எழுதியதும் இதுவென்பதை நன்கு நினைவில் இருத்திப், பின்சொல்வது அதற்கு மாறுபடாமற் பேசுக; முன்னே கைக்கொண்டிருந்த ஒரு பொருளுக்குப் பின்னே மாறுபட்டுப் பேசும்படி ஒன்று நேருமாயின் அதற்குரிய ஏதுக்களைத் தெளிவாய் எடுத்துக்கூறுக. பிறர் சொல்வனவற்றில் மறுக்கத்தக்க திருந்தாலுங்கூட அதனை மறாமல் நெகிழவிடுதலும், அவர் தாங் கூறும் பொருளைக்குறித்து நுமது கருத்தறியவேண்டி வற்புறுத்திக் கேட்பராயின் அப்போதும் அதனை வெட்டென மறாமல் 'இவ்விவ்வேதுவால் எமது கருத்து இது' என நயமாய் மொழிதலும் இன்றியமையாதன; ஒருவரைச் சில பயன் கருதி எழுத்தில் வெட்டென மறுத்துரைப்பினும், நேர்முகமாயிருந்து உரையாடுங்

கால் அங்ஙனம் வெட்டெனமறுத்து உரையாடற்க. பிறர்க்கு நகையை விளக்குஞ் சொற்களை அடுத்தடுத்துச் சொல்லிப் பகடிசெய்வோன், தன்னுடைய பெருந் தன்மைகளைத் தானே குறைத்துத் தன்னை இழிபுபடுத்திக்கொண்டாலன்றி அங்ஙனம் பிறரை விலாவிறச் சிரிக்கவைத்தல் இயலாதாகலின், அவ் வியல்பினனை அறிவுடையோர் பாராட்டார்; மற்றையோரும் அவன்பால் மைத்துனக்கிழமை கொள்வர்; ஆதலாற், பெரும்பாலும் அடக்கமான நிலையிலேயே தான் சொல்வனவற்றைப் பெருந்தன்மையோடு எடுத்துரைப்போன் எல்லாரானும் தெய்வமேபோற் பணியப்படுவன். இனி, இன்றியமையாது தம்மைச் சிறிதுயர்த்திப் பேசவேண்டும் ஒரோவொருகாலன்றி, மற்றை எக்காலங்களினும் தம்மைத்தாமே உயர்த்துக் கூறுதல் அக் கூற்றினைக் கேட்பார்க்கெல்லாம் பெரியதோர் அருவருப்பினை உண்டாக்கும். ஆகவே, இக் குற்றங்கள் அணுகாமல் தன் சொற்களை நயம்பட உரைப்பானுக்கு இவ் வுலகின்கண் ஆகாதது ஒன்றுமில்லை.

இவ்வாறாக உடம்பின் அகப்புறக் கருவிகளையும் மனமொழிகளையுந் தூயவாய் வைத்துக்கொண்டு பட்டினிகிடந்து நோன்பு இயற்றுவானுக்குத் தன் தகுதிக்கேற்ப நினைத்தவைகள் நினைத்தபடியே கைகூடும். தன் தகுதிக்கு ஏலாதனவகளைப் பெறுதற்கு விழைந்து, நீண்டகாலம் பட்டினி கிடந்து நோன்பியற்றிவருந்தற்க. ஏழைக்குடியிற் பிறந்தான் ஒருவன் தனது நிலையை எண்ணிப் பாராமல் தான் ஒரு நாட்டுக்கு அரசனாகித் திரண்ட செல்வவாழ்க்கையில் அமரல் வேண்டுமென விரும்பி எத்தனை நாட்கள் பட்டினிகிடந்து நோற்றானாயினும் அஃதவனுக்கு இப் பிறவியில் வாய்க்குமோ? அவன் அங்ஙனம் மிகப் பெரியதொரு பேற்றை அவாவுதல் விட்டுத், தனது நிலைமைக்கேற்பத் தனக்குள்ள வறுமை தீர்தல் வேண்டுமென்றும், தான் செய்தற்கேற்ற ஓர் அலுவல் கிடைக்கவேண்டுமென்றும், தன்னையுந் தன்னைச் சேர்ந்தாரையும் இடர்ப்பாடின்றி இனிது வாழ்விக்கப் போதுமான பொருள் வேண்டுமென்றுங் கேட்டு நோற்பானாயின், அவன் கொண்ட அந் நோக்கம் விரைவிலே நிறைவேறும். அற்றேல், தவஞ்செய்தவர்களே அரசவாழ்க்கையைப் பெறுவர் என்று அறிவுடையோர் விளம்புவ தென்னையென்றால்; மிகவும் நல்கூர்ந்த நிலையில் உள்ளார் அரச நிலையைப் பெறல்வேண்டி நோன்பு இயற்றப் புகுந்தால், அந் நோன்பு அவர்தம் வாழ்நாள் முடியும் மட்டும் நடைபெறுவதாகல் வேண்டும்; அங்ஙனம் நடைபெற்று அவர்தம் வாழ்நாள் முடிந்தபின், அடுத்த பிறவியில் அவர் ஓர் அரச குடும்பத்திற் பிறந்து அரசவாழ்க்கையில் அமர்வ ரென்பதே அறிஞர் கூறும் அவ் வுரையின் கருத்தாவதாம். ஆகவே, தமதளவுக்கு நிரம்பவும் மேற்பட்ட அரியபெரிய நோக்கங்களைப் பெற விழைந்து நோற்பவர் இப்பிறவியிலேயே அந்நோக்கங்கள் கைகூடப்

பெறுவரென்றல் இயலாது. இப்பிறவியிலேயே தாம் நோற்கும் நோன்பின் பயனை எய்த விரும்புவோர், தாம் இருக்கும் நிலைமைக்குந் தமது திறமைக்கும் இசைந்த நோக்கங்களைப் பெறுங் கருத்தோடு தமது நோன்பினைக் கடைப்பிடித்துச் செய்குவராயின், அந் நோக்கங்களின் சிறுமை பெருமைகட் கேற்ப அவை சில நாட்களிலோ, அன்றிச் சில கிழமைகளிலோ, அன்றிச் சில திங்களிலோ, அன்றிச் சில ஆண்டுகளிலோ கைவரப் பெறுவர்.

எனவே, எவ்வகையான நோக்கம் ஈடேற வேண்டினும், உணவின் மீது செல்லும் விருப்பத்தைவிட்டு, அந்நோக்கத்தின் சிறுமை பெருமைகட் கேற்பச் சில நாட்களோ அன்றிப் பல நாட்களோ மேற்சொல்லியவாறு பட்டினிகிடந்து நோன்புநோற்றல் வேண்டும். அங்ஙனம் முறையாகச் செய்துவருவார்க்கு அந் நோக்கங்கள் தம்முடைய வன்மைமென்மைகட்கு ஏற்ற பெற்றியாகப் பல நாட்களிலேனுஞ் சில நாட்களிலேனுங் கட்டாயம் நிறைவேறும். நம் தமிழ்நாட்டுக்குப் புறம்பே தொலைவிலுள்ள அயல்நாட்டவர்களுங் கூடத், தாந்தாங் கருதிய பயனைப் பெறும்பொருட்டுப் பட்டினிகிடந்து நோன்பியற்றித் தம் முயற்சிகள் கைகூடப் பெற்று வருகின்றார்கள். அமெரிக்கா தேயத்தில் நியூயார்க்கு என்னும் நகரத்தில் உள்ள பியூரிண்டன் (Purinton) என்னும் ஓர் இளைஞர் முப்பதுநாள் பட்டினிகிடந்து தமக்கிருந்த தீராப் பெருநோய் தீரப்பெற்றதும், அதனால் தன்னியல்புந் தனக்குள் விளங்கும் இறைவனியல்பும் நன்குணரப் பெற்றதும் அறியுந்தோறும் பெருவியப்பினைத் தருகின்றன. இவ்விளைஞர் தமது பிள்ளைமைக் காலம்முதற் பதினைந்து வகையான நோய்களால் மாறிமாறிப் பற்றப்பட்டுப் பெரிதுந் துன்புற்று வந்தனர். ஒருகால் ஆறு வகையான மருந்துகளை அருந்தினர்; அருந்தியும் பயன்பெற வில்லை. அம்மருந்துகளை உட்கொள்ளும்முன் தம்மை நிறுத்துப்பார்த்துத் தாம் ஐம்பதுவீசை யெடை யிருக்கக்கண்டார்; அவற்றை உட்கொண்ட பிறகோ தாம் முப்பத்தேழு வீசைதான் இருக்கக்கண்டார். பெரும்பாலும் நெருப்பண்டையிலுங் கட்டிலின் மேலுமே இருக்கலானமையின் இனித் தாம் தமக்கும் பிறர்க்கும் பயன்படப்போவதில்லை யென உணர்ந்தார். இவர்தங் குடும்பத்தாரும் நண்பர்களும் மருத்துவர்களும் இவரைக் கைவிட்டார்கள். இவரும் மருந்துண்பதை நிறுத்தி இயற்கை முறைகள் பலவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்துபார்த்தனர்; அவற்றாற் சிற்சில நலங்கள் காணப்பட்டனவே யல்லாமல், முற்றும் நோய்தீர்ந்தபாடில்லை. கடைப்படியாக முப்பதுநாட் பட்டினிகிடக்கும் முறையைத் துணிந்து கைக்கொண்டார். இங்ஙனம் அவர் பட்டினிகிடந்த நாட்களில் வெறுந் தண்ணீரையும் புளிப்பான பழங்களின் சாற்றையும் இடையிடையே பருகினதல்லாமல், வேறு எதும் உட்கொண்டிலர். அம் முப்பது

நாளும் முடிந்து அவர் சிறிது சிறிதாகச் சைவவுணவு ஏற்றி உடம்பை வலுப்படுத்தியபின் அவர் மறுபிறவி யெடுத்தவர்போல் ஆயினர். அவரை இத்தனை காலமாக வருத்திய நோய்களெல்லாம் அவரை முற்றும்விட்டு ஒழிந்தன; அவரது உடம்பெங்குந் தூய செந்நீருந் தூய தசையும நிரம்ப வேண்டும் அளவுக்கு நிரம்பி உடம்பின் புறத்தே ஓரழகிய மினுமினுப்பினைத் தோற்றுவித்தன; அவரது உள்ளந் தெளிவுபெற்று நுண்ணிய அறிவு விளக்கத்திற்கு இடந்தந்து பொலிந்தது. இவ்வாறாக அவர் முப்பதுநாட் பட்டினிகிடந்ததற்குப் பின் தாம் அடைந்த நலங்களையும், அந்நலங்களைப் பிறரும் பெற்று உய்யும்பொருட்டு நோன்புநோற்கும் முறைகளையும் விரித்துப் 'பட்டினி கிடப்பதன் உண்மை ஆராய்ச்சி * என்பதோர் அரியநூலை ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றார். இவரைப்போலவே நீண்டநாட் பட்டினிகிடந்து தம் உயர்ந்த நோக்கங்கள் ஈடேறப் பெற்றார் உலகின்கட் பற்பல இடங்களினும் பற்பலர் உளர். ஆதலால், உலகத்திலுள்ள மக்களைத் தம்வயப் படுத்தித், தாங் கொண்ட அரும்பெரு நோக்கங்களை நிறைவேற்ற விரும்புவார் தமது நோக்கத்திற்குத் தக்கவாறு சில பல நாட்கள் பட்டினிகிடந்து நோன்புஇயற்றுதலைத் தவறாது கடைப்பிடித்துச் செய்யக்கடவாராக.

இனி, இவ் வுயர்ந்த வசியமுறைகளைப் பழகி அவற்றில் தேர்ச்சிபெற வேண்டுவோர் இவைகளைத் தனித்திருந்து பழகுதற்கு இசைந்த இனிதான இடத்தைத்தேடி அமைத்துக்கொள்ளல் இன்றியமையாததாகும். மக்கள் மிக நெருங்கியுள்ள நகரங்களில் இருப்பதைவிட, நாட்டுப்புறங்களில் ஆற்றங்கரைகளிலாதல் ஏரிக்கரைகளிலாதல் இறைவன் திருக்கோயில்களுக்கு அணிமையிலுள்ள இடங்களிலாதல் இருக்குஞ் சோலைகள் தோப்புகளின் இடையே இல்லம் வகுத்துக்கோடல் நன்று. ஏனென்றால், நகரங்களில் உள்ள மாந்தர்கள் பெரும்பாலும் பொருள் ஈட்டுவதிலேயே கருத்து இழுக்கப்பட்டுப் பொய்யும் புனைசுருட்டுஞ் செய்பவர்களாய் இருத்தலாலும், ஊனுங், கள் சாராயம் அவின் முதலிய மயக்கப்பொருள்களும், வெறுங் காமவயத்தராய் ஒழுகுவாரும் நகரங்களில் நிறைந்திருத்தலாலும், நகரங்களிற் பரந்திருக்குங் காற்று நஞ்சாயிருப்பதோடு, நினைவுவெளியும் அங்குள்ளாரின் தீயநினைவுகளால் நிரம்பித் தீயஅசைவுகளை யுண்டாக்குவதாய் இருக்கும்; ஆதலால், முதன்முதல் இவ் வுயர்ந்த பழக்கங்களைத் தொடங்குவார்க்கு அத்தகைய நகரக்காற்றும் நினைவுவெளியும் மாறாய் நின்று பலவகை இடையூறுகளை விளைக்கும். இவற்றில் தேர்ச்சிபெற்றவர்க்கோ எங்கிருப்பினுங் குற்றமில்லை. இவற்றில் தேர்ச்சி

* 'The Philosophy of Fasting' by E. A. Purinton, published by Benedict Lust, 124 East 59th Street, New york, U. S. A.

பெறவேண்டுவோர்க்குந், தேர்ச்சிபெற்றவர்க்குங் கூட, நாட்டுப்புறங்களில் மேற்சொல்லிய இடங்களே ஏற்றவையாகுமென்று உணர்ந்துகொள்க.

இத்தகைய இடங்கள் ஒன்றில் ஓர் அழகிய இல்லம் வகுத்து, அதன் கண் ஓர் இனிய அறை அமைத்துக்கொள்க. அவ்வறையுள் தூய நல்ல காற்று உலவுமாறும் வெயில் வெளிச்சம் படுமாறுஞ் சாளரங்கள் இருத்தல் வேண்டும். முருகப்பிரான், சிவபிரான், அம்மை, திருமால், கலைமகள், திருமகள் என்னும் உயர்பெருந் தெய்வங்களின் வடிவு தீட்டப்பட்ட அழகிய ஓவியங்களை அவ் வறையுள் திருத்தமாகத் தொங்கவிடுக. இத்தகைய ஓவியங்களில் 'இரவிவன்மர்' வரைந்தனவே மிகச் சிறந்தவை. ஏனைய பலவற்றில் அவ் வடிவங்களின் உறுப்புகள் செவ்வனே அமைக்கப்படாமல் கைகளுள் ஒன்று பெருத்தும் மற்றொன்று சிறுத்தும் ஒன்று நீண்டும் மற்றொன்று குறுகியும், கால்களுள் நேர்நிற்கவேண்டுவது பக்கத்திற் றிரும்பியும், கால்விரல்கள் இருக்கவேண்டும் வரிசைதப்பி ஒன்றன் மேலொன்றாய்ப் புறந்திரும்பியும், நிழலும் ஒளியும் படவேண்டும் இடங்கள் உன்னிக்கப்படாமலும், மூக்கு முக்கோணமாய்க் கீழ்விரிந்தும், இதழ்கள் பருமனாயும், கட்பார்வையிற் காணப்படும் ஒளிப்புள்ளிகள் இல்லாமலும், செவிகள் பெருத்தும், நெற்றி அகன்று ஒரே மட்டமாயும், கூந்தல் மைக்குழம்பை வாரியப்பினாற்போல் இழைதெரியாமல் வகிர்ந்தும் பலவாறு பிழைபட வரையப்பட் டிருக்கின்றன. இயற்கைக்கு மாறான அவ் வோவியங்களின் வடிவங்களை உற்றுநோக்குவார்க்கு அவற்றின்கண் உள்ள பிழைபாடுகள் அவர்தம் உள்ளத்திலுந் தோன்றி இனிய நினைவுகளின் இசைவு கெடுத்து ஒன்றுக்கொன்று மாறான எண்ண அசைவுகளைப் பிறப்பிக்குமாதலால், அப் பெற்றிப்பட்ட ஓவியங்களை அவ்வறையுட் கொண்டுவருதல் ஒழிக. இரவிவன்மரைப் போன்ற சிறந்த ஓவிய ஆசிரியர்களால் வரையப்பட்டுத், தேவவடிவங்களும், முனிவரர்கள் சமயகுரவர்கள் அடியவர்கள் புலவர்கள் அரசரில் உயர்ந்தோர்களின் வடிவங்களுந் திருத்தமாய் அமைந்த ஓவியங்களையே தெரிந்தெடுத்து, அவற்றின் தலைப்புறத்தை முன்சாய்த்துச் சுவர்களிற் சூழ நிறுத்துக.

அவ்வறையின் சுவர்களுக்குப் பச்சை அல்லது நீல வண்ணம் முழுதுந் தீற்றிவைத்தல் நன்று. தனிச் சிவப்பு வண்ணந் தீற்றுதல் ஆகாது; ஏனென்றால், தனிச் சிவப்புநிறந் தன்னருகிலிருப்பார்க்கு வெப்பத்தினை உண்டாக்கும். பச்சை நீலங்களோ குளிர்ச்சியினைத் தரும். தனித்திருந்து நினைவை ஒருவழிநிறுத்திப் பழகுவார்க்கு மூளையில் வெப்பம் ஏறுமாதலால், அதனைத் தணிவு செய்தற்குப் பச்சை அல்லது நீலநிறமே ஏற்றதாகும். அன்றி வேண்டுமாயிற் பச்சையுஞ் சிவப்புங் கலந்து குழைத்த வண்ணமும் பூசலாம்.

இவற்றோடு, சான்றோர் ஆக்கிய நூல்களைத் தெரிந்தெடுத்து, அவை தம்மை அழகாகச் சமைத்த நிலைப்பேழைகளில் ஒழுங்காகவைத்தல்வேண்டும். இஃது இன்றியமையாது செயற்பாலது. ஏனெனில், எவ்வாற்றானும் உயர்ந்த சான்றோர்களின் உயர்ந்த கருத்துக்கள் அத்தனையும் அவர் ஆக்கிய நூல்களிற் பொதிந்துவைக்கப்பட் டிருக்கின்றன; இப்போதும் எப்போதும் இவ்வுலகத்தை ஆள்வன அவ்வுயர்ந்தோரின் உயர்ந்த கருத்துகளேயாகும். இவ் வுயர்ந்த கருத்துகள்மட்டும் பரவாதிருந்தால், இந்நிலவுலகம் முற்றும் புலியுங் கரடியும் ஓநாயும் முள்ளம்பன்றியும் அரிமாவும் மலைப்பாம்புகளும் நிறைந்த கொடுங்காடுகளைவிடக் கேடுகெட்ட நிலையை அடைந்திருக்கும். கண்காட்சி காட்டுந் திறமையுடையோன் ஒருவனாற் பழக்கி அமைதிப்படுத்தப்பட்ட அக் கொடுவிலங்குகளைப் போலவே, அச் சான்றோரின் விழுமிய கருத்துக்களால் தங் கொடிய எண்ணங்களின் கொந்தளிப்புகள் தணிக்கப்பெற்று இம்மக்களெல்லாரும் ஒற்றுமையுடையராய் ஒருவரோடொருவர் ஒருமித்திருந்து உயிர்வாழ்கின்றனர். ஆகவே, சான்றோரின் கருத்துகளுக்கு உள்ள ஆற்றல் அளவிடற்பாலதன்றென உணர்ந்துகொண்மின்கள்! அத்துணை ஆற்றல் வாய்ந்த அம்மேலோரின் கருத்துகள் பொதிந்துவைக்கப்பட்ட நூல்களின் அருமைபெருமைகளை எவர்தாம் அளந்துரைக்கவல்லார்! மேலே 'சேர்க்கைப்பொருள் வசியத்'தைப் பிடித்துப் பேசியவழி, ஒருவர்க்கும் அவரொடு நெருங்கிய தொடர்புடைய பொருள்கட்கும் உள்ள இயைபினையும், அப்பொருள்கள் அவரைப் பிரிந்து எத்தனையோ ஆயிர ஆண்டுகளாயினும் அல்லது எத்தனையோ கல் தொலைவிலுள்ள இடங்கட்குச் செல்லினும், அகக்கண்காட்சியும் நுண்ணுணர்வும் வாய்ந்த சிலர் கையிற்படின் அவை தமக்கு உரியாரின் வடிவு இயல்பு செயல்களை விளங்கக்காட்டும் வகையினையும் மேலே விளக்கிப்போந்தாம். இவ்வாறு ஒருவரோடு நெருங்கிய தொடர்புடைய பொருள்களில், அவர்தம் விழுமிய கருத்துகள் பொதிந்து வைக்கப்பட்ட நூல்களினுஞ் சிறந்தது பிறிதில்லை. உயர்ந்த நூல்களைக் கற்றற்குரிய பெருந்தவம் இல்லாதவனுங்கூட அந்நூல்களை வாங்கி வணங்கி வாழ்த்தி அவற்றின் பக்கத்தேயிருந்து உயிர்வாழ்ந்து வருகுவனாயின், நினைவுவெளியிலே சுடர்விரிந்து நுட்பமாய் இயங்கிக்கொண்டிருக்கும் அந் நூற்கருத்துகள் அருகிருக்கும் அவனது உள்ளத்திலும் அவனையறியாமலே பாய்ந்து அவனைப் புனிதமாக்கும். கல்லாதவனே அந்நூல்களின் பக்கத்திருப்பின் அத்தனை யுயர்ந்த நலங்களை அடைகுவனாயின், அந்நூல்களை ஆவலோடு திறந்து அங்கு நிரம்பித்துளும்பும் அழியாக் கல்விப்பெருந் தேனைச் சுவைத்துச்சுவைத்து ஆராமல் இரவும் பகலும் அருந்திக்கொண் டிருக்குங் கலைவல்லான்றன் பெருந்தவச் சிறப்பினையும் அவற்குளதாம் புனித அறிவுப்பெரு விளக்கத்தின் பொலிவினையும் எவரே எடுத்துரைக்கவல்லார்!

அத்துணைச் சிறந்த நூல்களை வசியத்தின்பொருட்டுத் தாம் நோற்கும் அறையில் வைக்க விரும்புவோர், இக்காலத்திற் கடல்போல் விரிந்து கிடக்கும் நூற்பரப்பில் இன்னவைதாஞ் சிறந்தவை யென்று தெரிந்தெடுக்கமாட்டாமல் திகைப்பராகலின், அவர் பொருட்டு அவ்வறையுள் வைக்கற்பாலனவாம் நூல்களிற் சிலவற்றை இங்கெடுத்து மொழிகின்ரும். உலகவழக்கின்கண் மக்களாற் பேசப்படாமல் இறந்துபட்ட ஆரியம் இலத்தீன் முதலான மொழிகளில் உள்ள நூல்களைவிட, உலகவழக்கின்கண் நாடோறும் பேசப்படுகின்ற மொழிகளில் உயர்ந்தபொருள்கள் அடக்கித் திருத்தமாக இயற்றப்பட்ட நூல்களே சிறந்தனவாகும். இனி உலகவழக்கி னுள்ளுஞ் சில நூற்ருண்டுகளாகத் தோன்றி வழங்கும் மொழிகளில் ஆக்கப்பட்ட நூல்களைவிடப், பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே தோன்றி இன்றுகாறும் இறவாமற் புத்திளமையோடு நடைபெறும் மொழிகளில் அரும்பொருள் துறுமப் பெருஞ்சுவை குழும ஆக்கப்பட்ட நூல்களே எல்லாவற்றினுஞ் சிறந்தனவாகும். அங்ஙனஞ் சிறந்த நூல்களுள்ளுங் கடவுளை நேரேகண்டு அவன்றன் அருளை ஆரப் பருகி அருள்வடிவாய்த் திகழ்ந்தோர் அருளிச்செய்த நூல்களே சாலச் சிறந்தனவாகும். என்னென்ருல், உலகவழக்கி லில்லாது இறந்துபட்ட ஆரியம் இலத்தீன் முதலான மொழிகளில் உள்ள நூல்களின் சொற்பொருள்கள் எல்லார்க்கும் விளங்குவன அல்லாமையால், மிகவும் நாட்பட்டுப்போய் நினைவுவெளியில் மெல்லென இயங்கும் அவற்றின் இயக்கங்கள் எல்லாருள்ளத்தினும் ஊடுருவிச் சென்று நாம் வேண்டிய பயனைத் தருதற்கிசைந்த ஆற்றல் உடையன ஆகா; மேலும், ஆரியமொழியில் உள்ள இருக்குவேதம் முதலான நூல்களில்உள்ள பாட்டுகள், எல்லா உலகிற்கும் முதல்வனை ஒரே முழுமுதற் கடவுளை வழுத்தாமல் நம்மனோரைப்போற் பிறந்து இறந்துபோன சிறுதெய்வங்களை வழுத்துவனவாயிருத்தலாலும், அதன்கண் உள்ள ஏனை 'உபநிடதங்க'ளுஞ் 'சாங்கியம்,' 'யோகம்,' 'நையாயிகம்,' 'வைசேடிகம்,' 'மீமாஸ்சம்,' 'வேதாந்தம்' முதலான ஆராய்ச்சிநூல்களும், மற்றைப் புராணங்களும் முறையே பொருட்டெளிவு இல்லனவாயும், ஒன்றினென்று மாருன கொள்கைகளை எடுத்துரைப்பனவாயுங், கடவுட்டன்மை மக்கட்டன்மைகட்கும் உலக இயற்கைக்கும் மாருன பொய்ப்பொருள்களைப் புனைந்துரைப்பனவாயும் இருத்தலாலும் அப்பெற்றிப்பட்ட அவ்வாரிய நூல்கள் புறத்தே நூல்பயில் இடங்களில் வைக்கற்பாலனவே யன்றி, உயர்ந்த நோக்கம்பற்றி மனித வசியத்தினைநாடி நோன்பியற்றுந் தூயஅறையுள் வைக்கற்பாலனஅல்ல. இனி, உலகவழக்கின்கட் சில நூற்ருண்டுகளாகத்தோன்றி நடைபெறும் இந்தி, வங்காளி முதலான ஆரியஞ் சிதைந்த மொழிகளும், தமிழ்ச்சிதைவான தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான மொழிகளும், பல்

லாயிரக் கணக்கான ஆண்டுகளாக அழியாது நடைபெற்று வருந் தமிழ் மொழியைப்போல் நுண்ணிய பேராற்றல் உடையனவாகா; ஆகவே, அவற்றின்கண் ஆக்கப்பட்ட நூல்களும் நினைவுவெளியில் மிகச் சிறந்த இயக்கங்களை உண்டாக்கி எல்லார் உள்ளங்களையும் அசைக்கவல்லனவாக மாட்டா. இவ்வாறு பல்லாண்டுகளுக்கு முன்னரே இறந்துபோன மொழி நூல்களும், சில்லாண்டுகளாகத் தோன்றி நடைபெறும் மொழிநூல்களும் நோன்பியற்றும் இடங்களில் வைத்தற்கேற்ற தகுதியில்லனவாய் இருப்பப், பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னேதொட்டு இன்றுகாறும் நடைபெறும் பேராற்றல் உடையதாகிய செந்தமிழ்மொழியில் உள்ள பழைய நூல்களோ நினைவுவெளியில் அரும்பேரியக்கங்களை எழுப்பி அவற்றை ஓவாது நடைபெறுவித்து மக்கள் உள்ளங்களை யெல்லாந் தூய்மைசெயுந் தகையவாய்க் காணப்படுதலின், அவைகளே தவமியற்றும் இடங்களில் வைத்தற்கு இன்றியமையாச் சிறப்பினவாகும். அவற்றுள்ளுந் தொல்காப்பியம் என்னும் அருந்தமிழ்நூல் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத் தனிப்பெருந் தமிழ்நூலாகும். இஃது ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்ட மிகப் பழையதொருநூல்; ஒரு மொழியாய்த் தொடர்புபட்டு நிற்கும் ஓசையின் இயல்புகளையும் அவற்றின் இசைவுகளையும் இயற்கையில் உள்ளபடியே நுணுகி ஆராய்ந்து வகுத்து முறைப்படுத்து உணர்த்துவது; சிறப்புவகையால் நோக்குவார்க்கு இது தமிழ்மொழியின் இயற்கையை வகுத்துக் கூறுவதுபோற் காணப்படினும், பொதுவகையால் நுனித்தாராய்வார்க்கு இஃது உலகத்தின்கண் உள்ள எல்லா மொழிகளுக்கும் நிலைக்களனான எழுத்தோசைகளின் பொதுவிலக்கணங்களை யுணர்த்தி எல்லா மொழிகளுக்கும் இஃது ஒப்பற்றதொரு பொது இலக்கணமாதலும் விளங்காநிற்கும்; அதுவேயுமன்றி, இது மக்களின் அகத்தேயுள்ள அகவியற்கைகளையும் அவைபற்றி அவர்க்குப் புறத்தேயுண்டாம் புறநிகழ்ச்சிகளையும், இவ்விரண்டோடுந் தொடர்புபட்டுக் கிடக்கும் இயற்கைப் பொருட்பாகுபாடுகளையுங் கூறுகூறாகப் போழ்ந்து அவற்றின் பரப்பெல்லாந் துழாவி ஆராய்ந்து விளக்குந் தனித்தலைமைப் பெருஞ் சிறப்பினதாயுந் திகழ்கின்றது; இவற்றோடுகூட மக்களியற்கை உலக இயற்கைகளைக் கடந்து நின்றும் அவற்றுக்கு அணுக்கமாய் ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிவிளக்கங்களிற் கட்புலனாய் விளங்கித் தோன்றி எல்லா உயிர்க்குந் தனது அருளொளியைப் பொழியும் முழுமுதற்கடவுளின் பெருமுதற்றன்மையை வழுவற யார்க்கும் வகுத்துக்காட்டி 'இஃது எமக்குரிய நூல், இஃது எமக்குரிய நூல்' என எல்லாச் சமயத்தாரும் மகிழ்ந்தேற்றுத் தமது தலைக்கணியாய்ச் சூடிக்கொள்ளுந் தனிப்பெரு விழுப்பம் வாய்ந்தது; அளக்கலாகா இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய இத் தொல்காப்பிய முழுமுதல்நூல் வசியத்தினையும்

பிற உயர்ந்த பேறுகளையும் வேண்டித் தவங்கிடப்பார் எவராயிருப்பினும் அவர் தமது புனித இல்லத்திற் போற்றி முதல்வைத்து வழிபாடாற்று தற்கு ஏற்றதொன்றுமெனத் தெளிமின்கள்! இதனையடுக்க, இதனைப் போலவே குன்றாச்சிறப்பிற் பொன்றாது மிளிருந் தெய்வத்திருக்குறள் நூல் வைக்கற்பாலதாம். இதனைக் கற்பார் எந்நாட்டவராயினும் எச்சாதியினராயினும் எக்கொள்கையினராயினும் எம்மொழியினராயினும், அவரெல்லாம் இதன்கண் அறிவுறுக்கப்படும் அரும்பொருள் வயத்தராகித், தம் மன மொழி மெய்கள் தூயராய், முன்னே தம்மைப் பற்றியுந் தம் நாடு தமது சாதி தமது கொள்கை தமது மொழிகளைப்பற்றியும் உயர்வாக நினைத்துக்கொண்ட செருக்குகள் முற்றும் அற்றொழிய, எங்கும் வரையின்றி விரிந்த அன்புக்கும் அருளுக்குமே தமதுள்ளம் ஓர் உறையுளாய் அமரப்பெற்று, உலகினைத் தம்ஆணைவழி நிறுத்தித் தாம் வேண்டியனவெல்லாம் வேண்டியாங்கு எய்துவராதலால், இத் திருக்குறள் நூலின் அருமை பெருமையினை மேலும் விரிக்கவேண்டுவது எற்றுக்கு? எத்துணைதான் விரிப்பினும் அவை எஞ் சொல்லளவில் அடங்குமோ! இனி இத் திருக்குறளையடுக்க வைக்கற்பாலன பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து முதலிய பழந்தமிழ்த் தொகைநூல்களும், நாலடியார் முதலான ஏனைப் பதினெண் கீழ்க்கணக்கினுட்பட்ட அறநூல்களுமாம். இவை அறம்பொருள் இன்பம் வீடு என்னும் மக்களுயிர்க்கு உறுதி பயக்கும் நாற்பெரும் பொருள்களையும் இயற்கை வழாமல் உள்ளன உள்ளவாறே யுணர்த்தும் மெய்ந்நூல்களாதலின், இந்நூல்கள் தம்மைப் போற்றுவார்க்கும் ஓதுவார்க்கும் மெய்ப்பயன்கள் எல்லாவற்றையும் அளிக்கவல்லனவாகும். ‘சிலப்பதிகாரம்,’ ‘மணிமேகலை’ என்னும் பொருட்டொடர் நிலைச் செய்யுட்கள் இரண்டும் மேற்காட்டிய நூல்களோடு ஒத்த சிறப்பினவாயினும், அவற்றின்கட் சொல்லப்பட்ட கோவலன் கண்ணகி வரலாறும், மணிமேகலை உதயகுமரன் வரலாறுந் தம்மைப் பயில்வார்க்கு ஆற்றலாகாப் பெருந்துயரத்தை விளக்கும் நீரனவாயிருத்தலின், அவை, வசியத்தின்பொருட்டு வகுத்த அறையுள் வைக்கற்பாலன அல்ல. இனி, மேலேகுறித்த நூல்களையடுக்க வைக்கற்பாலன திருவாசகந், திருச்சிற்றம்பலக்கோவையார் என்பனவாகும். இவற்றை யருளிச்செய்த மாணிக்கவாசகப் பெருமான் முழுமுதற்கடவுளால் நேரே ஆட்கொள்ளப் பெற்ற பெறற்கரும்பேறு உடையராகலானும், அவர் அருளிச்செய்த இந்நூல்கள் தம்மை ஓதுவார் நெஞ்சங் கல்லாயிருப்பினும் அதனை அன்பினாற் கரைந்துருகச்செய்து அவர்தம்மை இறைவன் திருவருட் பெருக்கின்பாற் படிவித்தல் திண்ணமாகலானும் இவை, வசியத்தினை வேண்டித் தவங்கிடப்பாரால் நாளுங் குழைந்து குழைந்து வழி

படற்பாலன வென்பதை யாம் வற்புறுத்துதலும் வேண்டுமோ! இனி, இவற்றையடுக்க வைக்கற்பாலது: திருமூல நாயனார் அருளிச்செய்த திரு மந்திரமே யாகும். இம்மை மறுமைக்குரிய மறைபொருள் நுட்பங்கள் அனையவும் ஒருங்கெடுத்துத் தெளித்துரைப்பதில் இதனையொப்பதொரு முழுநூல் உலகின்கண் வேறெந்த மொழியினும் இல்லை. முடிவான மந்திரங்களும், அவற்றை உருவேற்றும் முறைகளும், அவற்றை அமைக் குஞ் சக்கரங்களும், அம் மந்திரங்களுக்குரிய மாப்பெருந் தெய்வங்களும், அத் தெய்வங்களெல்லாம் ஒரே முழுமுதற்கடவுளான சிவத்தின் ஆணை வழிநின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக் கும்வகைகளும், தவத்தின்பாகுபாடுகளும், அவற்றை மேற்கொண்டு ஒழு குமாறும், அழிவிலாப் பேரின்பப்பேறும் முடிந்தநிலையு மாகிய எல்லாம் இது முற்ற எடுத்து முடியக்கூறும் முழுமுதற் பெருநூலாம். இதனை வறிதேவைத்து அன்பினல் வழிபட்டு வருவார்க்கும் எல்லா மந்திரங்க ளும் எல்லா வசியங்களும் எளிதிலே கைகூடுமென்றால், வேறிதன் பெரு மையை விரித்துரைப்பதேன்! இனி இதனையடுக்க வைக்கற்பாலன: மூன் றாண்டுக்குழந்தையா யிருந்த ஞான்றே இறைவனையும் இறைவியையும் நேரே கண்டு, அவர் குழைத்தூட்டிய ஞானப்பாலுண்டு, முழுமுதற்கட வுள் உண்மையை அக் கடவுளின் சிறப்பு நிகழ்ச்சிகளால் எவர்க்கும் விளங்கக்காட்டி, இத் தமிழ்நாட்டை ஒரு தேவநாடாக்கி, அதற்கொரு தெய்வ முதலாசிரியராய்த் திகழ்ந்த திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த தேவாரப்பதிகங்களும், அங்ஙனமே தெய்வப்பெற்றி யினராய் விளங்கிய திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரப்பதிகங்களும், திருவிசைப்பா, திருப்பல் லாண்டு, பதினோராந்திருமுறை, திருத்தொண்டர் புராணம் என்பன வுமாம். இனி, இவற்றையடுக்க வைக்கற்பாலன: இறைவன் திருவரு ளால் உந்தப்பெற்று முப்பொருளாராய்ச்சியை முதன்முதற்கண்ட மெய் கண்டதேவ நாயனார், தாங்கண்ட அவ் வாராய்ச்சிப் பரப்பெல்லாம் ஒரு வழித் தந்து முறைப்படுத்து அருளிச்செய்த தனிப் பெருந் தமிழ்மெய்ம் முதல்நூலாகிய சிவஞானபோதமும், அதனோடு ஒருங்குவைத்து எண் ணப்படுந் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானசித்தி யார், சிவப்பிரகாசம், இருபாஇருபஃது, உண்மைவிளக்கம், திரு வருட்பயன், வினாவெண்பா, கொடிக்கவி, உண்மைநெறிவிளக் கம், போற்றிப்பஃறொடை, சங்கற்பநிராகரணம், நெஞ்சுவிடுதூது என்னும் பதின்மூன்று மெய்கண்ட நூல்களுமாம். இனி, இவற்றை யடுக்க வைக்கற்பாலன: பிற்காலத்துச் சான்றோரான குமரகுருபர அடி கள், தாயுமான அடிகள் முதலாயினார் அருளிய அருட்செம்பாடல் களுஞ், சிவஞானமுனிவர் அருளிச்செய்த சிவஞானபோதப் பேருரை

யும், இந்நாளில் அரியபெரிய ஆராய்ச்சிகள் செய்து அறிஞர் எழுதும் உரைநூல்களுமாம். இனி, இவற்றையடுக்க வைக்கற்பாலன: கிறித்து சமய வேதமாகிய விவிலியமும், மகமது சமய வேதமாகிய குரானும் ஆகும். புறச்சமய நூலாகிய இவைதம்மை மேற்கூறிய அருந்தமிழ்த் தெய்வ மறைகளோடு உடன் வைத்து வழிபாடாற்றுதல் ஒக்குமோ வெனின்; அறியாது வினுயினுய், வேதங்கள் என நம்மனோர் ஆராயாது கொண்டாடும் இருக்கு முதலான ஆரியமொழி நூல்களைப் பார்க்கிலும், 'விவிலியம்,' 'குரான்' என்பன எத்தனையோ மடங்கு உயர்ந்தனவாய் இருக்கின்றன. இருக்கு முதலிய ஆரியமொழி நூல்கள் நான்கினுந் தமிழராற் செய்து சேர்க்கப்பட்டவை போக, ஏனைப் பதிகங்களெல்லாம் பலப்பல சிறுதெய்வங்களை வணங்குவனவாயும், அத் தெய்வங்களின்பொருட்டு ஆடு மாடு குதிரை மக்சள் என்னும் ஆருயிர்களைக் கொன்றும், சோமப் பூண்டில் இறக்கிய வெறிமிகுந்த கள்ளைக் குடித்துஞ் செய்யப்படும் வெறியாட்டு வேள்விகளை விரித்துரைப்பனவாயும் இருக்கின்றன; மற்று, விவிலியம், குரான் என்னும் நூல்களிலோ ஒரு முழுமுதற்கடவுள் வணக்கமே சொல்லப்பட்டிருக்கின்றது; உயிர்களைக் கொன்று வேட்கும் வெறியாட்டுகள் அவற்றின்கண் வெளிப்படையாக மறுக்கப்பட்டிருக்கின்றன; சிறுதெய்வங்களை வணங்குதலுங் குற்றமாமென்பது அவற்றின்கட் காட்டப்பட்டிருக்கின்றது; இவற்றோடு மக்கள் சைவவுணவையே உட்கொள்ளல் வேண்டுமென்பதும், உயர்ந்த ஒழுக்கங்களையே கடைப்பிடித்து ஒழுகல் வேண்டுமென்பதும், பட்டினிகிடந்து நோன்புநோற்றுந் தவங்கிடந்தும் அன்பினுல் அகங்குழைந்துருகித் தீவடிவிற் புலனுய்த் தோன்றும் முழுமுதற்கடவுளின் திருவடியைத் தலைக்கூடல் வேண்டுமென்பதும் அவற்றின்கண் வலியுறுத்திச் சொல்லப்பட் டிருக்கின்றன; அவற்றின்கட் கூறப்பட்ட இறைவன் 'அம்மையும் அப்பனும் மகனுமாய்' நிற்கும் இயல்பும், 'எல்சடை,' 'சிகோவா,' 'அல்லா' என்னும் இறைவற்கு உரிய பெயர்களும், 'அம்மையப்பனும் முருகனுமாய்' நிற்குந் தமிழ்த்தெய்வ இயல்போடும், 'எல்லவன்,' 'சடையன்,' 'சிவன்' என்னுந் தமிழ்த்தெய்வப் பெயர்களோடும் முழுதொத்து நிற்கக் காண்டலின், ஈபுரு, அராபி என்னும் மொழிகள் வழங்கிய நாடுகளிலிருந்த பண்டை மக்கள் தமிழ்மக்களின் இனத்தவரேயாதலும், அவர் கைக்கொண்டு ஒழுகிய கோட்பாடு சைவக் கோட்பாடேயாதலுந் தெற்றெ்ன விளங்கா நிற்கும். இன்னும் விரிப்பிற் பெருகும். இவற்றின் பரப்பெல்லாம் எமது சிவஞானபோத ஆராய்ச்சியிற் கண்டுகொள்க. எனவே, ஒரு முழுமுதற்றெய்வ வழிபாட்டையும் மேலான ஒழுகலாறுகளையும் அறிவுறுக்கும் விவிலியம் (Bible), குரான் (Koran) என்னும் மறைகளை மேற்குறித்த தமிழ்நூல்களோடு உடன்வைத்தல் சாலப் பொருந்துவதேயா மென்க. மேற்குறித்த

நூல்களில் தொல்காப்பியமும்,'பரிபாடல்,' 'திருமுருகாற்றுப்படை' அல்லாத ஏனைச் சங்க இலக்கிய நூல்களும், எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவான அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பொருள்களை இலக்கண வகையாலுஞ் சுவைமிகுந்த இலக்கிய வகையாலும் வைத்து விரித்து விளக்குதலின், அவை தமிழ்ப்பொதுமறைகள் அல்லது வேதங்கள் என வழங்குதற்கு உரியனவாகும். மற்றப் 'பரிபாடல்,' 'திருமுருகாற்றுப்படை' என்னுஞ் சங்கத்தமிழ் நூல்களுந், திருமந்திரம் அல்லாத திருவாசகந் தேவாரம் முதலான பதினொரு திருமுறைகளும் எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளை முருகன், சிவன், திருமால் என்னுஞ் சிறப்புப் பெயர்களால் வழங்கி அவர் தம்மை வணங்குதலும் வாழ்த்துதலுஞ் செய்கின்றமையின், அவை சைவசமயத்தவர்க்கே யுரிய தமிழ்ச் சிறப்புமறைகள் என வழங்கற்பாலனவாகும். இனித், திருமந்திரமும், சிவஞானபோதம் முதலான மெய்கண்ட நூல்கள் பதினான்குஞ், சிவம், உயிர், மலம் என்னும் முப்பொருளாராய்ச்சிகளும், உயிர் மலப்பற்று நீங்கிச் சிவத்தைச் சென்று தலைக்கூடுமாறும் விரித்துக்காட்டிச் சைவசமயத்தவர்க்கே உரிய சிவாகமங்களா மென்று கடைப்பிடித்தல் வேண்டும். ஏனை விவிலியமுங் குரானுங் கிறித்துவர்க்கும் மகமதியர்க்கும் உரிய வேதங்கள் அல்லது ஆகமங்களாகும். இனி, இவற்றைஅடுக்க வைக்கற்பாலன: பொய்கையாழ்வாரும் பேயாழ்வாருந் திருமாலை வழுத்தி அருளிச்செய்த அருந்தமிழ்ப் பாட்டுகளேயாகும். இவை தம்மைச் சைவசமய நூல்களையடுக்க வையாமல், விவிலியங் குரான் என்னும் நூல்கட்கும் பின்னே வைக்க வென்றதூஉம், ஏனைப் பத்தாழ்வார்களின் பாடல்களைச் சேராமல்விட்டதூஉம் என்னையெனிற் கூறுதும்; பிறப்பு இறப்புக்களில்லா இறைவியின் வடிவாகிய திருமாலுக்குப் பிறப்பு இறப்புக்கள் கூறும் புராணகதைகளைக் தழுவிக் கண்ணன் இராமன் என்பாரையுந் திருமாலோ டொப்பவைத்துப் பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் பாடிய பாட்டுக்களை, முழுமுதற் கடவுளை அங்ஙனம் பிறப்பு இறப்புக்களுட் படுத்து ஓதுதற்குச் சிறிதும் இசையாத சைவசமய நூல்கட்குப் பின்னும், அச் சைவசமய நூல்களைப் போலவே இறைவனுக்குப் பிறப்பு இறப்புக்கள் கூறுதற்கு எட்டுணையும் ஒருப்படாத கிறித்துவ மகமதிய வேதங்களுக்கு முன்னும் வைத்தல் நடுவுநிலையுடையார் செய்கையாகாமையின், அவ்வாழ்வார் இருவரின் பாடல்களைக் குரானுக்கும் பின் வைத்தலே முறையா மென்க. இவ் வாழ்வார் இருவருந் திருமாலோடொப்பக் கண்ணன் இராமன் என்பாரையும் வழுத்தினும், இறைவனாகிய சிவபிரானை இகழாமல் அவனைத் திருமாலோடு ஒருங்கிணைத்துப் பண்டைத் தமிழ்த்தெய்வ மறைகட்கு மாறுகாமற் பாடுதலானுங், கண்ணனை மிகுத்தெடுத்துப் பாடினாற்போல இராமனைப் பாடாமையானும்,

இவர் இருவரும் பண்டைத் தமிழ்மறை உண்மை வழக்கினின்று சிறு பான்மை வழுவினும் ஏனைப் பெரும்பான்மை வழுவாதே செல்லுதலா லும் இவர்தம் பாடல்கட்குரிய தெய்வத்தன்மை முழுதுங் குறைபடா தென்க. இவ்விருவருந், தொண்டரடிப்பொடி, ஆண்டாள், திருப்பாண், மதுரகவி அல்லாத ஏனையாழ்வார்கள் அறுவரும், பொறாமையும் பொய் யும் புரட்டும் மலிந்த பின்றைக்காலத்துப் புராணகதைகளையே பெரிதுந் தழீஇ முழுமுதற் கடவுளாகிய சிவத்தை இகழ்ந்து பாடியிருத்தலின், இவர்கள் பாடிய பாட்டுகள் அமைதியையும் வசியத்தினையும் இறைவ னருட்பேற்றையும் வேண்டித் தவங்கிடக்கும் அறையுள் வைக்கற்பாலன அல்ல. அன்றி வைப்பின், அவை பொய்யும் பொறாமையும் இகழ்ச்சி யுந் தீவினையும் நிறைந்த எண்ணங்களை எழுப்பித் தவம்புரிவாரது உள் ளத்தை அமைதிகெடக் கலக்கி அவர் கொண்ட நோக்கங்களையுஞ் சிதைக் கும். ஆகையாற், பொய்கை பேய் என்னும் முதல் ஆழ்வார்களின் உயர்ந்த செய்யுட்களே ஆண்டுவைக்கற்பாலன எனவும், வேண்டுமாயின் அவற்றை யடுத்துத் தொண்டரடிப்பொடி, ஆண்டாள், திருப்பாண், மதுரகவி என் னும் ஏனையாழ்வார் நால்வரின் செய்யுட்களை மட்டும் வைத்தல் குற்றம் ஆகாதெனவும், ஏனைப் பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ் வார், திருமழிசையாழ்வார், குலசேகர ஆழ்வார், சடகோப ஆழ்வார் என் னும் அறுவரின் பாடல்கள் ஆண்டுவைக்கற்பாலன அல்ல எனவும் உணர்ந் துகொள்க. இனி, மேற்காட்டிய ஆழ்வாரின் பாடல்களுக்குப் பின்னே, இக்காலத்திற் பெரியதோர் அறிவாற்றலுஞ் செயலாற்றலும் உடையதாய் உலகமெங்கும் பரவி வழங்கும் ஆங்கிலமொழியில் அறிவுமிக்க சான்றோர் பலரால் எழுதப்பட்டிருக்கும் நூல்களிற் சிறந்தன பலவற்றைத் தெரிந் தெடுத்து அமைத்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறாக அறிவாற்றல் நிரம்பிய நூல்களை முறைப்பட வரிசைப்படுத்தி வைத்திருக்கும் ஒரு தூய அறையி லிருந்து நோன்பு இயற்றுவார்க்கு, அவர்தந் தகுதிக் கேற்பக் கொண்ட எண்ணங்கள் எண்ணிய பயனைத் தருதல் திண்ணமாம் என்க.

இனி, நோன்பியற்றும் அவ்வறை அமைதியான இனிய மணம் நிறைந்து கமழ்வதாய் இருத்தல்வேண்டும். அகில், சந்தனங், கோட்டம், துருக்கம், தகரம், பச்சைக்கருப்பூரம், புழுகுநெய் முதலான மணப்பண் டங்கள் கலந்த கூட்டுகள் புகைத்தலாலும், மருகு, மருக்கொழுந்து, விலா மிச்சை, வெட்டிவேர் முதலான பூடுகளையும், மகிழ், மல்லிகை, பிச்சி, செங்கழுநீர், சண்பகம், அல்லி, குவளை, தாமரை, முதலான பூக்களையும் அவ்வறையுள் வைத்து வழிபடும் இறைவன் திருவுருவத்திற்கு நாடோ றும் அணிதலாலும் அவ்விடம் என்றும் மணங்கமழ்வதாய் இருக்கும்.

இனி, நோன்புகிடந்து மந்திரம் உருவேற்றுவோர் தாம் அணிந்து கொள்ளும் ஆடைகளை அழகாகவுந் துப்புரவாகவும் வைத்துக்கொள்ளுத

வில் நிரம்பக் கருத்தாய் இருக்கவேண்டும். ஆடு, கவரிமா முதலியவற்றின் மயிர்களால் ஆக்கிய கம்பளி உடுப்புகளை உடுத்தல் ஆகாது. பனி குளிருக்குஅஞ்சி அவற்றை ஒரோவொருகால் உடுக்கவேண்டினும், அவை உடம்பின் தோற்புறத்திற் படும்படி உடுத்தல் ஆகாது. கம்பளியுடைகள் தோல்மேற் படுதலால் உடம்பின் மயிர்ப்புழைகளில் வெளிவரும் அழுக்குகள் வறண்டு கட்டியாகி அவற்றை அடைத்துக்கொள்கின்றன; அதுவேயுமன்றி, வெளியேயுலவுங் காற்றும், அதிற் கலந்துள்ள ஞாயிற்றின் சூடும் உடம்பின்மேற் படாமலும், மயிர்ப்புழைகளின் வழிச்சென்று செந்நீரிற் கலவாமலுந் தடைசெய்யப்படுகின்றன. ஞாயிற்றின் சூடும் நல்ல காற்றும் படாத உடம்புக்குக் கொறுக்குப்புண், சொரிசிரங்கு, கரும்படை முதலான கொடிய நோய்கள் வருதலை இஞ்ஞான்றை மருத்துவப் பேராசிரியர்கள் நன்காராய்ந்து கண்டிருக்கின்றார்கள். ஆதலாற், கம்பலஆடைகளைத் தோன்மேற் படும்படி உடுத்துதல் ஒழிக. பஞ்சுநூலிற் செய்த உடைகளையே இறுக்கமாக உடுத்தாமல் தளர உடுத்துக. மேலும், விலங்குகளின் மயிராற் சமைத்த ஆடைகள் அவ்விலங்குகளுக்கு உரிய இயல்புகள் பொருந்தப்பெற் றிருத்தலால், அவற்றை அணிவார்க்கு அவ்விலங்குகளின் தன்மைகளுந் தொடருமென்பதூஉம் நினைவிற் பதிக்கற்பாற்று. ஆகவே, தூவெண்மையான, அல்லது வேறு அழகிய நிறங்களில் தோய்த்தவான பஞ்சுநூற் பட்டுநூல் உடைகளை நாள் ஒன்றுக்குக் காலைமாலை இரண்டுமுறை களைந்து கழுவி உடுத்துக.

இனி, இவ்வளவு தூய்மையோடும் அங்கு நோற்பவர், யாழ், குழல் முதலான இசைக்கருவிகளோடாவது, அவற்றிற் பழகியிராவிட்டால் தமது தனித்த இனிய மெல்லிய குரலிலாவது 'திருவாசகம்,' 'தேவாரம்' முதலிய தெய்வச் செந்தமிழ்ப்பாடல்களை உள்ளங்குழைந்து இறைவன் திருவடிகளிற் கருத்தையுங் கண்ணையும் இருத்தி இனிதாகப் பாடுதல் வேண்டும். இவ்வாறு பாடுதலால் அவரது மனம் அமைதிபெற்று அன்பின் வயமாகி அதன் உருவாய்த் திகழும். தேவர்களாலும் பெறுதற்கு அரிய பெருமான், மெய்யடியாரின் அன்புக்கும், அன்பினால் அவர் உருகிப்பாடும் இசைப்பாட்டுக்குமே எளிதில் வயமாகி அவர் வேண்டியவெல்லாம் வேண்டியவாறே அளிக்கின்றார். உருக்கத்தோடும் பாடுதற்கேற்ற குரலினிமை வாயாதவர்கள், அங்ஙனம் பாடவல்ல ஒருவரை அவ்வறையினுள் அழைத்துவைத்துப் பாடச்செய்து, அப் பாட்டைக்கேட்டு உருகி இறைவனைத் தொழலாம். ஆனால், அங்ஙனம் அவ் வறையினுள் வந்திருந்து பாடுவோர் தூயராயும், நோன்பு நோற்பவரின் இயல்புக்கும் நோக்கத்திற்கும் ஒத்தவராயும் இருத்தல்வேண்டும். அங்ஙனம் இல்லாத ஒருவரை அவ்வறையினுள் நுழையச்செய்தால், அதன் தூய தன்மை கெட்டு நோற்பவரின் நோக்கங்களையும் பழுதாக்கும். தூயர் அல்லாதார்

ஒருவரின் சேர்க்கை அவ்வறையின் தூய்மையினைக் கெடுத்தல் எங்ஙனம்? அதனைக் கண்ணாற் கண்டிலமாலெனின்; புறக்கண்பார்வை பருப்பொருள்களையே காணவல்லதன்றி, அப் பருப்பொருள்களில் மிக நுண்ணியவற்றையும், அவற்றினும் மிக நுண்ணிய நினைவுவெளியின் இயக்கங்களையுங் காணவல்லதன்று. அகக்கண் பார்வை தெளியப்பெற்றார்க்கே அக்காட்சிகளெல்லாம் நேரே புலனும். ஏனையோர்க்கு நுண்பொருள் இருப்புகளும் நினைவுவெளியின் அசைவுகளும் ஆராய்ந்துபார்க்கும் முகத்தால் மட்டுமே புலனுவனவாகும். ஓர் ஊரில் ஒரு தொற்றுநோய் வந்தால் அஃது அவ்வூரில் உள்ளார் பலரையும் எளிதிற் பற்றிக்கொள்கின்றது; அவ்வூரில் உள்ளவர் அந் நோயின் துன்பத்தைக்கண்டு, அத்தகையதொரு நோய் அங்கு உலவுதலை அறிகின்றனரே யல்லாமல், அந்நோயை யாவது அந்நோய் எங்ஙனம் பரவுகிறதென்றாவது நேரே கண்ணாற் காண்கின்றிலர். தம் கண்கட்குப் புலனுகாத அந்நோயை அதனால்வருந் துன்பத்தையுஞ் சாவினையுங் கொண்டே ஆராய்ந்துணர்கின்றார்கள். ஆனல், மருத்துநூ லாசிரியரோ, நங் கண்கட்குப் புலனுகாத மிக நுண்ணிய அணுக்களையும் பருக்கச்செய்து விளங்கக்காட்டும் பெருக்கக்கண்ணாடியின் உதவிகொண்டு, அத் தொற்றுநோயை அங்கு உண்டாக்கினவை இடைவெளியில் வந்து நிறைந்த மிக நுண்ணிய நச்சுப் புழுக்களேயென்றும், அப்புழுக்கள் நீரிலும் உணவிலுங் கலந்து மக்களுடம்பின் உட்சென்று ஒன்று பலகோடியாய்ப் பெருகி உடம்பின் அகவுறுப்புகளையெல்லாந் தமக்கு இரையாகக் கொண்டு தின்று அழிக்கின்றன வென்றும், ஆகவே நீரை நன்றாய்க் கொதிக்கவைத்தும் உணவைச் சூடு தணியாமல் வெய்தாக வைத்தும் உட்கொண்டால் அப் புழுக்கள் அழிந்து நோயை வருவியாவென்றும் நேரே காண்பதுபோற் கண்டறிந்துரைக்கின்றார்கள். ஆகவே, நுண்ணியவற்றைக் காட்டும் பெருக்கக்கண்ணாடி போல்வதாகிய அகக்கண்பார்வை யுடையார்க்கு எத்தகைய நுண்ணிய பொருள் நிகழ்ச்சிகளுந் தெற்றென விளங்குமாப்போல், ஏனையோர் கண்களுக்கு அவை விளங்காவாயினும், அவற்றால் விளையும் பின் நிகழ்ச்சிகளைக்கொண்டு அவற்றின் இருப்பும் இயற்கையும் உய்த்துணர்தல் அவர்க்குங் கைகூடுவதேயாம். என்றாலும், ஆராய்ச்சியுணர்வானது ஒரு நுண்பொருளியல்பினை அதன் பின்நிகழ்ச்சிகொண்டு பின் அறிவிக்குமே யல்லாமல், அந் நிகழ்ச்சிக்கு முன்னரே அதனையறிந் தறிவிக்க வல்லதன்று. இந் நிலைமையில் மக்களின் உணர்வைவிட மற்றைச் சிற்றுயிர்களின் உணர்வு மிகச் சிறந்ததாயிருக்கின்றது. எவர் கண்களுக்கும் புலப்படாமல் மறைத்து மூடிவைத்த நெய்யையுஞ் சர்க்கரையையும், கண்கள் இல்லாத எறும்புகள் எப்படியோ தெரிந்துகொண்டு வந்து அவைகளை மொய்த்துக்கொள்கின்றன. தன் தலைவனைச் சுமந்துசெல்லுங் குதிரை

யானது அவன் செலுத்தும் வழியிற் கள்வராலாவது புலி மலைப்பாம்பு களாலாவது அவனுக்கு வரப்போகும் இடரினை எப்படியோமுன் அறிந்து, அவன் எவ்வளவுதான் தன்னை அடித்துச் செலுத்தினும் அவ் வழியிற் செல்லாமல் வேறு வழியிற் சென்று அவனை அவ்விடருக்குத் தப்புவித்த உண்மை வரலாறுகள் எத்தனையோ இருக்கின்றன. அங்ஙனமே, நன்றி யறிவு மிக்க நாய் தன் தலைவனுக்குப் பின் வரப்போகும் இடர்களை முன் னறிந்து அவனைக் காத்த செய்திகளும் பற்பல. இவைகளை உற்றுணருங்கால், நம்முடைய கண்களுக்கு நேரே புலப்படவில்லையென்று நுண்பொருள் நிகழ்ச்சிகளை இல்லையென மறுத்தலும், அந்நிகழ்ச்சிகளை அறிந் தார் சொல்லக் கேட்டும் அவற்றை நம்பிச் செய்யத்தகுவதும் விலக்கத் தகுவதுஞ் செய்யாமலும் வறிதே அறியாமையிற் புதைந்து வாணாளை வீணாளாக்குவது பழுதுடைத்தாம். ஆதலால், இவர் தூயர், இவர் தூயரல்லரென நன்காராய்ந்துபார்த்துத், தூயராயினாரை மட்டும் நோன்பியற்றும் அறையினுள் அழைத்துக்கொள்க.

இனி, யாம் வரையப்புகுவன நம் ஆன்றோர்களால் மிகவும் மறைவாக வைத்துப் பாதுகாக்கப்பட்ட அரியபெரிய மறைபொருள்களாகும். அம் மறைபொருள்களைப் போற்றிவைத்துப் பழகியே அவர்கள் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றார்கள். இவ் வருமறைப் பொருள்களைத் தெரிந்து பழகி எல்லாரும் பெரும்பயன் பெறும்பொருட்டே, இவற்றை இங்கே யாம் திறந்து எழுதலாயினேம். இங்ஙனந் திறந்தெழுதியது பற்றி இவைகளை எளியனவாக நினைத்துவிடாமல், இவைதம்மை நிரம்பவுங் கருத்தாய்ப் போற்றிவைத்து, இவற்றின் உண்மைகளைத் தகுதியில்லாதார் எவர்க்குந் தெரியாதபடி மறைத்து, இவற்றைப் பழகுதற்கு இங்கே காட்டப்படும் முறைகளில் வழுவாமற் பழகிவருவார்க்குக் கைகூடாத இம்மை மறுமைப் பயன்கள் எவையுமே இல்லையென ஓர்க.

மேற்சொல்லியவாறு ஒழுங்குபடுத்தப்பட்ட அறையினுள்ளே மேலண்டைப் பக்கத்துள்ள சுவரிலிருந்து எதிரே மூன்றடி இடை நிலம் விட்டு, நான்காம் அடி தொடங்கும் இடத்தில் ஒரு முக்கோணம் அமைத்துக்கொள்க. இம் முக்கோணத்தின் மூன்று பக்கத்தும் உள்ள கோடுகள் ஒன்று நீளம் ஒன்று குறுகலாய் இராமல் மூன்றும் ஒரேயளவான நிகளம் உடையவாய்க், கோணல் இன்றி நேராய்ச்சென்று ஒன்றன் முனை மற்றொன்றன் முனையுடன் பொருந்தியிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கோடும் ஒருமுழம் இருக்கலாம். பச்சரிசி மாவின் பொடியினால் இக் கோடுகளை வரைந்து முக்கோணம் ஆக்குதல் எளிது. இம்முக்கோணத்தின் ஒருமுனை கிழக்குநோக்கி யிருக்குமாறு வரைந்து அதன் உள்ளே, ஒரு வட்டமான கோடு வரைக. அவ் வட்டக்கோட்டின் புறம், அம் முக்கோண மூன்றுகோட்டில் ஒவ்வொருகோட்டின் நடுமையத்தையுந் தொடு

மாறு அமைக்க. அதன்பின் அவ் வட்டக்கோட்டின்கண் பச்சரிசி யுமியை இரண்டுவிரல் உயரம் மட்டமாய்ப் பரப்புக. அத்தி, அரசு, ஆல், இத்தி, கருங்காலி, பலாசு, மா, வன்னி என்னும் எட்டு வகையான மரங்களி னின்றும், நாயுருவிப்பூடினின்றும் உலர்ந்த சுள்ளிகளை ஒருசிறு கூடை யிற் கொணர்ந்து, முதலில் அச் சுள்ளிகளிற் சிலவற்றை யெடுத்து வட் டக்கோட்டிற் பரப்பிய உமியின்மேல் அடுக்கிக்கொள்க. இவ் வெட்டு மரங்கள் நாயுருவிப்பூடு என்னும் ஒன்பதினின்றுஞ் சுள்ளிகள் கொண்டு வரல் வேண்டுமென்னுங் கட்டாயம் இல்லை. இவற்றுள் ஒன்றிலிருந்து சுள்ளிகள் கொணரினும் அமையும். இவ்வாறு முக்கோணத்தை அமைத்த பின், அதன் தெற்கு நோக்கிய முனையிலிருந்து தவங்கி, மேலண்டைச் சுவரின் அடியில் வளைந்து, மறித்தும் அம் முக்கோணத்தின் வடக்கு நோக்கிய முனையில்வந்து தொட்டுச் சுழியுமாறு ஓர் ஓகாரம் வரைந்து கொள்க. அவ் வோகாரக் கோட்டினுள்ளே கிழிசல்இல்லாத ஒரு வாழை இலையை விரித்து, அதிற் பச்சரிசியை இரண்டு சிறு குவியலாக்கி உச்சி களைக் குழித்து, அவ்விரண்டு உச்சியிலும் இரண்டு புதிய சிறு மண்குடங் களை அவற்றின் மேற்புறமெங்கும் நூல்சுற்றி, அவை ஒன்றனை ஒன்று தொடுமாறு நிறுத்துக. அங்ஙனம் நிறுத்தியபின், தூய தண்ணீரைத் தூய பாண்டம் ஒன்றில் முகந்துவந்து அவ் விரு சிறுகுடங்களிலுங் கழுத்தளவு நிரப்புக. ஐந்திலையுள்ள மாங்கொத்துகள் இரண்டு ஒடித்துக் கொணர்ந்து, அவ் விருகுடத்தின் வாயினுள்ளுங் காம்பின் புறத்தை நுழைத்து, மேலே இலைகளை விரித்து, அவற்றிடையே இரண்டு நல்ல குடுமித் தேங்காய்களைக் குடுமி மேல்நோக்குமாறு வைத்திடுக. அதன் பின், வலதுபுறத்துள்ள குடத்திற்குப் புதிய வெள்ளிய ஆடைத்துண்டு ஒன்றும், இடதுபுறத்துள்ள குடத்திற்குப் புதிய சிவந்த ஆடைத்துண்டு ஒன்றும் அணிக. வலதுபுறக் குடத்திற்குத் திருநீறுஞ் சந்தனமும், இடதுபுறக் குடத்திற்குத் திருநீறுஞ் சந்தனமும் மஞ்சளுங் குங்குமமும் இடுக. மணங்கமழும் இனிய மலர்மாலைகளை இரண்டுக்குஞ் சூட்டுக. வலக்குடத்தின் நீரின்உள்ளே சிவப்புமணியும், இடக்குடத்தின் நீரின் உள்ளே நீலம் அல்லது பச்சைமணியும் இடுதல் மிகநன்று. அவை வாயா வாயின், இரண்டினும் இரண்டு பொற்காசேனும் இரண்டு வெள்ளிக் காசேனும் இடலாம். குடங்களின் இருபுறத்தும் இரண்டு நெய்விளக் குகள் ஏற்றுக. அக்குடங்களுக்கு எதிரிலே மற்றொரு வாழையிலை விரித் துப், பழவகைகள், பாலடிசில் நெய்யடிசில் சர்க்கரைப்பொங்கல், பாயசம், வடை முதலியன இயன்றமட்டும் படைத்தற்கு ஒழுங்குசெய்து வைத் தல் வேண்டும். பக்கத்தே ஒரு கிண்ணத்தில் நெய்யும், அதனை எடுத்து விடுதற்கு மாவிலையை மடித்துத் தைத்த ஒரு சிறு அகப்பையுந், தூவு தற்கு நெற்பொரியுஞ் சந்தனத்தூளும், இறைவனைப் போற்றி வணங்கு

தற்கு விடுபூக்களும் வைத்துக்கொள்க. நோன்புஇயற்றுவோர் இப்போது புறத்தும் அகத்தும் வேள்விவேட்க வேண்டியவரா யிருத்தலால், அவர் அங்குவரைந்துள்ள முக்கோணத்தின் கிழக்கு மூலைக்குச் சிறிது விலகி ஒரு பலகைமீது அமர்ந்து, திருநீற்றைக் கையில் அள்ளி, அதிற் றண்ணீர்விட்டுக் குழைக்கையில், "ஓம் நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் காண்க" என்னும் மந்திரஞ் சொல்லிக் குழைத்து, அதன்பின் "ஓம் நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி" என்னும் மந்திரத்தை ஒருகாற் சொல்லித் தலையின் உச்சியிலும், பின்னும் ஒருகாற் சொல்லி நெற்றியிலும், அங்ஙனமே மார்பிலுங் கொப்பூழிலும் முழந்தாள் இரண்டிலும் அதனைத்தீற்றி, அதன்பின் மறுபடியும் "ஓம் நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் காண்க" என்று சொல்லித் தண்ணீர்விட்டுக் குழைத்து, மறித்தும் "ஓம் நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி" என்று சொல்லிக்கொண்டே இரண்டு தோள்மேலும் முழங்கைகளிலும் மணிக்கட்டுகளிலும் இடுப்பின் புறத்தும் அங்ஙனமே அதனைத் தீற்றிக்கொண்டு, முன்போலவே தண்ணீர் மந்திரஞ் சொல்லிக் கைகழுவி வாய்பூசி,

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே,
வெய்யாய் தணியாய் இயமானனும் விமலா,
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்னும் அருண்

மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே கருப்பூரத்தைக் கொளுத்தி, முக்கோணத்து வட்டத்தில் அடுக்கிய விறகில்இட்டு அதனை எரியவிடுக; அஃது அங்ஙனம் எரியுங்கால் நெய்யை இடையிடையே மாவிலை அகப்பையிலெடுத்துச் சொரிந்து, பொரியும் இட்டு வேட்க; தீச்சுடர் மிகுந்தெரியுங்காற், சூழவுள்ள ஐம்பெரும்பொருள்களும் அவற்றின்கண் உலவுந் தேவர்கள் ஆவிகள் முதலியனவுந் தூயவாய்த் துணைநிற்கும் பொருட்டும், மாறுன தீய பேய்கள் அணுகாமல் அகலுதற்பொருட்டும், அவற்றின் கண்ணெல்லாந் தீயினுருப்போல் மறைந்து நிற்கும் இறைவனே இப்போது இத் தீப்பிழம்பின் கண்ணும் உருவுகொண்டு அடியேமுக்கு எளியனாய்த் தோன்றினான் என்னும் நினைவோடு,

"நிலன்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்,
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ" என்னும் மந்திரத்தை

மனஉருக்கத்தோடுங் கூறிப், பின்னுங்,

"தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி!
அழிவிலா ஆனந்த வாரி போற்றி!
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா போற்றி!
மான்நேர் நோக்கி மணாளா போற்றி!
வானகத் தமரர் தாயே போற்றி!
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி!
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி!
நனவிலும் நாயேற் கருளினை போற்றி!
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி!
தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!
அருளிட வேண்டும் அம்மான் போற்றி!
இருள்கெட அருளும் இறைவாபோற்றி!" என்னும் மந்திரங்களைச் சொல்லிச் சொல்லி ஒருமுறை நெற்பொரியை வேள்வித்தீயில் இட்டும், மறுமுறை விடுபூவை அள்ளி வேள்வித் தீமேலும், அதற்குமுன் நிறுத்தியிருக்குங் குடங்கண்மேலும் இட்டும் வழிபடுக. அங்ஙனம் வழிபாடாற்றியபின், வேள்வித் தீப்பிழம்பின்கண் இயற்கையே முனைத்து விளங்கும் அம்மையப்பனைச்,

"சோதியே சுடரே சூழ்ஒளிவிளக்கே சுரிகுழற் பணைமுலைமடந்தை, பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய் பங்கயத் தயனும்மால் அறியா, நீதியே செல்வத் திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்தம் மேவியசீர், ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே" என்னும் மந்திரஞ்சொல்லி அழைத்து, வலதுபுறக் குடத்தின் உள்உள்ள நீரிலே சிவத்தையும் இடதுபுறக் குடத்தின் உள்உள்ள நீரிலே அம்மையையும் புகுந்திடுமாறு மனத்தான் நினைந்து வேண்டிப், பின்,

"பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாய்" என்னும் மந்திரத்தை நாவாலுஞ் சொல்லி வேண்டுக. இவ்வாறு மந்திரஞ்சொல்லி வேண்டியவளவிலே அம்மையும் அப்பனும் அக் குடங்களி னுள்உள்ள

நீரிலே முனைத்து விளங்குவர். அதன்பின் அந் நீரிலிட்ட மணிகளிலேனும் பொன்னிலேனும் அவ்விருவரும் புகுந்து விளங்குமாறுவேண்டித்,

"தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயிலே இதுகேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் ஞேக்கி மணுளனை நீவரக்கூவாய்" என்

னும் மந்திரத்தை மனங்கரைந்து உரைக்க. அங்ஙனம் உரைத்த வளவானே அம்மையப்பர் இருவரும் அவ்விரண்டினும் விளங்கிநிற்பர்.

இப்போது அக்குடங்களின் நீரினும் மணியினும் முனைத்து விளங்கும் அம்மையப்பர்க்கு அகில் புகைத்துக், கருப்பூரங் கொளுத்தி ஒகார வடிவாகச்சுழற்றிக்காட்டிப், பழங்கள் நெய்யடிசில் முதலியன படைத்து,

"எம்பிரான் போற்றி! வானத்தவரவர் ஏறு போற்றி!
கொம்பரார் மருங்குன் மங்கைகூற, வெண்ணீற போற்றி!
செம்பிரான் போற்றி! தில்லைத் திருச்சிற்றம்பலவ போற்றி!
உம்பரா போற்றி! என்னை ஆளுடை ஒருவபோற்றி!" என மலர்

தூவித் தொழுது,

"வானுகி மண்ணுகி வளியாகி யொளியாகி
ஊனுகி யுயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே" என்னும் மந்தி

ரத்தைச் சொல்லி வழிபாட்டை முடித்து, அதன்பின் இம்மை மறுமையில் தாம் எதனைப் பெறக்கருதி நோற்கின்றனரோ அதனை இப்போது நன்கு நினைவிற் கொணர்ந்து இருத்தி,

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே, என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே"

என்னும் மந்திரத்தைச் சொல்லி வணங்கித் திருநீறிட்டுக்கொண்டு புறவழிபாட்டை முடித்துக்கொள்க.

இனி, இத்துணை விரிவாகக்காட்டிய புறவழிபாட்டு முறைகளின் பொருள்தெரிந்தா லன்றி, அவற்றின் கருத்தும் பயனும் விளங்காவாகலானும், அகவழிபாடாகிய தவத்தின் முறைகள் புறவழிபாட்டோடு ஒப்பச் செய்தலின் நுட்பம் புலனுகாதாகலானும் அவ் வியல்பினையும் ஈண்டு ஒரு சிறிது விளக்கிக்காட்டுகின்றும்.

ஓரறிவுடைய புல் மரம் முதலாக ஆறறிவுடைய மக்கள் ஈருக உள்ள எல்லா உயிர்களின் உடம்புகளும் ஏறக்குறைய ஒத்த அமைப்பு வாய்ந்தனவாய் இருக்கின்றன. இவ் வுடம்புகளின் அமைப்பும், இவ் வுடம்புகள்

உலவுதற்கு இடமான உலகங்களின் அமைப்பும் அங்ஙனமே எறக்குறைய ஒத்த இயல்பினவாய் இருக்கின்றன. ஆகவே, புறத்தே காணப்படும் உலகு பெரிய உலகு என்றும், அதன் அகத்தே காணப்படும் இவ்வுடம்பு சிறிய உலகு என்றுஞ் சொல்லப்படும். இவ்விருவகையுலகுந் தீயினாலும், அத் தீ இறைவன் அருளாலும் இயக்கப்படுகின்றன. தீயின்கண் இருந்து உண்டாகுஞ் சூடும் ஒளியுமே எல்லாப் பொருள்களின் இருப்புக்கும் எல்லா உயிர்களின் அறிவுவிளக்கத்திற்குங் கருவியாய் இருக்கின்றன. தீ இல்லையானால் எங்குங் குளிரும் இருளுமே நிரம்பியிருக்குமாதலால், அறிவில்லாப் பொருள்களெல்லாங் குளிரால் இறுகி அசைவின்றிக்கிடக்கும், அறிவுடைய உயிர்களோ குளிராற் குருதி உறைந்துபோன உடம்புகளில் உயிர்வாழமாட்டா, சிறிதுகாலம் உயிர்வாழல் கூடுமேனும் எங்கும் இருளாயிருத்தலிற் கண் இருந்தும் ஒளியைக்காணா, ஒளியைக் காணாவாகவே அவைகளின் உள்ளமும் ஒளியைக் கருதமாட்டாமையால் இருண்டு கிடக்கும். சுருங்கச் சொல்லுங்காற், சூடும் ஒளியும் இல்லாதொழியின் இவ்வுலகமும் இரா, இவ்வுயிர்களும் இரா. ஆகவே, உயிர்கட்கு வந்த வாழ்வெல்லாந் தீயினால் வந்தனவேயாகும். தீ கட்புலனாய்த் தோன்றினும் அஃது எனைப் பருப்பொருள்கள்போல் நிறுத்து அளக்கப்படுவதன்றெனவும், அஃதொருவகை யாற்றலேயாமெனவும் இஞ்ஞான்றை 'இயற்கைப்பொருணூலாரும்' ஆராய்ந் துரைக்கு முறையைக் கருதிப் பார்க்குங்கால், தீயானது இறைவனோ டொத்த அருவுரு வியல்பிற்றுமென்பதூஉம், அஃதொன்றின்மட்டுமே இறைவன் முனைத்து விளங்கி நின்று உயிர்கட்கு அருள்புரிகின்றானென்பதூஉம் இனிது புலனாம். இறைவன் ஞாயிற்றுமண்டிலத்தினை ஒரு நடுமையமாய்க்கொண்டு விளங்கி, அதன்கண் உள்ள தீ வடிவினை இயக்கி அம்மண்டிலத்தினைச் சுழற்ற, அது சுழன்ற அளவுபடா விசையினால் அதன் மேற்புறத்தில் இறுகிய பருப்பொருட் டுண்டங்கள் தெறித்தோடி, நாமிருக்கும் இந் நிலமண்டிலமும், திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய எனை ஆறு மண்டிலங்களும் ஆயின. தீ எரியுங்கால் அடியில் விரிந்து தலையிற் குவிந்து முக்கோணவடிவிற்றாய் நிற்குந் தன்மையதேனும், அது விறு விறுவென்று மிகுவிசையோடு சுழற்றப்படுங்கால் வட்டவடிவினதாய்க் காணப்படும். ஆதலினாற்றான், அளவுக்கடங்கா விசையுடன் சுழலும் வெயில்மண்டிலம் வட்டவடிவினதாகக் காணப்படுகின்றது. முன்னே தீத்திரளாயிருந்த இந்நிலமண்டிலம் முதலான மற்றையவும் அஞ்ஞாயிற்று மண்டிலத்தோடு உடன் சுழலுதலால், இவையும் பந்துபோல் வட்டவடிவாகவே அமைவவாயின. எனவே, தீ வடிவினதாகிய ஆற்றல் தன்னிலையில் நிற்குங்கால் முக்கோணவடிவும், விரைந்து சுழலுங்கால் வட்டவடிவும் உடைத்தாதல் கருத்திற் பதிக்கற்பாற்று. வட்டவடிவாய் மிகுவிரை

வோடு சுழன்றெரியுந் தீயையே 'குண்டலிசத்தி' என அறிவுநூல்கள் புகலாநிற்கும். இக் குன்டலிசத்தியின் இயக்கம் புறத்தே ஞாயிற்றுமண்டிலத்தினும், அதனைச் சூழ்ந்தோடும் ஏனை மண்டிலங்களினும் நன்கு காணப்படுமாறுபோலவே, அகத்தே இவ்வுடம்பின் நடு மையமாகிய அடிவயிற்றினுள்ளுங் காணப்படும். எருவிடும் வாயிற்கு இருவிரல் மேலுங், கருவிடும் வாயிற்கு இருவிரற் கீழும் இஃதிருக்குமிடம் முக்கோண வடிவிற்றாய் 'மூலாதாரம்' எனப் பெயர்பெற்று நிற்றலும், அங்கு எரியாநின்ற குண்டலியினுள்ளே திகழுஞ் சிவவொளியை இடையறாது நினையவல்லார் அவ் வொளிவடிவினராகித் தாம் வேண்டிய வேண்டியாங் கெய்தலுங் தவமுடிவுகண்ட தெய்வத் திருமூலநாயனார்,

"எருவிடும் வாசல் இருவிரன் மேலே
கருவிடும் வாசல் இருவிரற் கீழே
உருவிடு சோதினய உள்க வல்லார்க்குக்
கருவிடு சோதி கலந்து நின்றானே" எனவும்,
"மூலத் திருவிரல் மேலுக்கு முன்நின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே" எனவும்,
"மூலத்து மேலது முச்சதுரத்தது
காலொத் திசையிற் கலக்கின்ற சந்தினின்
மேலைப் பிறையினுள் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே" எனவும் அருளிச்செய்த அருமறைத் திருமொழிகள்கொண் டுணர்ந்துகொள்க. இவ்வாறு இவ்வுலகத்தினுள்ளும் இவ்வுடம்பினுள்ளும் நடைபெறும் மூலகுண்டலியின் இயக்கம், நாம் இருக்கும் இத் தமிழ்நாட்டகத்துங் காணப்படும். இச் செந்தமிழ்நாடு முக்கோணவடிவிற்றாயும் இந்நிலவுலகத்தின் மேற்சுற்றுக்கு நடு மையமாயும் இருத்தல், இஞ்ஞான்றை நிலநூல்வல்லார் வெளியிட்டிருக்கும் நிலஓவியத்தை (Map) ஒருசிறிது நோக்குவார்க்கும் நன்கு புலனும். இச் செந்தமிழ்நாடு தீ வடிவிற்றாய் இருத்தலினுற்றான், இந் நிலவுலகத்திற்கு நடுவே செல்லுஞ் 'சுழுமுனை' என்னுந் தீ நாடியானது (Equator) இதனூடே செல்கின்றது. இத் தீ நாடியை இருபுறத்தும் நெடுக அடுத்துள்ள இடங்களிலெல்லாம் 'எரிமலைகள்' இருத்தலும், இச் செந்தமிழ்நாட்டை அகன்று வடகோடியிலுந் தென்கோடியிலும் உள்ள இடங்களெல்லாங் குளிர்மிகுந்து பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருத்தலுமே இதற்குச் சான்றாம். இச் செந்தமிழ்நாட்டில் ஓடும் அனல்நாடியின் நடு, தில்லைச் சிற்றம்பலத்தின்கண் இருத்தலால், அங்கு நடைபெறுங் குண்டலிசத்தியின் இயக்கமும், அதனை இயக்கும் இறைவன்றன் அசை

வுமே 'சிற்றம்பலத்தில் ஆடும் இறைவன்றன் அருட்கூத்தாக' வைத்து ஆன்றோரால் மொழியப்பட்டன.

இங்ஙனமெல்லாம் உலகிலும் உடம்பிலும் இந்நிலத்திலும் நடு மையமாகிய இடத்திலே இறைவனருளால் உந்தப்பெற்று நடைபெறும் நுட்பமான தீயினியக்கத்தைப் புறத்தும் அகத்தும் இடையறாது கண்டு உயிரின் நினைவை ஒளிவடிவாக்கி, அம்முகத்தால் இவ்வுடம்பும் உயிரும் ஒளிவடிவாகிச் சிவத்தோடு ஒன்றுபட்டு நிற்கச் செய்தலே தவமுயற்சியின் முடிந்த கருத்தாகும். புறத்தே நடைபெறுங் குண்டலியசைவினைக் கண்டு தொழாதார்க்கு, உடம்பின் அகத்தே நினைவை நிறுத்தி அதனைக் கண்டு தொழுதலும் இயலாதாகலின், அதன்பொருட்டாகவே தீயின் அடையாளமான முக்கோணவடிவினை வரைந்து, அத்தீயின் இயக்கமாகிய குண்டலியின் அடையாளமாக ஒரு வட்டவடிவினையும் அம் முக்கோணத்தினுள் வரையலாயிற்று. அவ் வட்டவடிவினுட் சுடர்விட்டெரியுங் குண்டலியனலுக்கு அடையாளமாகவே, சுள்ளிகளை யடுக்கித் தீ வளர்க்கலாயிற்று. இக் குண்டலியனல், நமது அடிவயிற்றின்கண் முக்கோணவடிவா யிருக்கும் எலும்பைச் (Sacral Plexus) சார்ந்து தோன்றி உடம்பெங்கும் பரவுகின்றதென்பதற்கு, வெப்புநோய் மிகுந்து உடம்பெங்கும் அனல் வீசப்பெற்றான் ஒருவனை அவனது அடிவயிற்றிற் குளிரச்செய்த அளவானே, உடம்பெங்கும் பரவிய அவ்வனல் தணிந்து அந் நோயும் அவனை விட்டு நீங்குதலே ஒரு பெருஞ்சான்றாம் என்க.

இவ்வாறாகப் புறத்தே வரையப்பட்ட முக்கோணத்தையும், அதனுள் வரையப்பட்ட குண்டலி வட்டத்தையும், அதன்கண் வளர்க்கப்பட்ட தீப்பிழம்பின் ஒளிவடிவினையும் நன்கு நினைவில் இருத்தி, அதன்பின் விழிகளை மூடிக்கொண்டு அடிவயிற்றின் மூலத்தே அம் முக்கோணத்தையும் அதனுள் வட்டவடிவையும் அதன்கண் எரியும் அனற்பிழம்பையும் நேரே நோக்குவதுபோல் நோக்கித், தன் அறிவையே ஓர் அகப்பையாக்கொண்டு தன் அன்பையே நெய்யாகக் கருதி இதனை அதனால் அள்ளி அவ்வனலின்கட் சொரிந்து, தன்னுள்ளத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் விரைந்து தோன்றும் பல்வகை நினைவுகளையே நெற்பொரியாக எண்ணி அவற்றை அந் நெருப்பிற் பெய்து, மேலே குறித்த 'திருவாசகத்' திருமறை மந்திரங்களைச்சொல்லி இறைவனையும் இறைவியையும் வழுத்தித், தாம் பெறுதற்குக் கருதிய பொருளை மனத்தால் வேண்டி அவ்வளவில் அகவழிபாட்டை முடித்துக்கொள்க.

அற்றேல், இவ்வளவின் முடிவதாகிய அகவழிபாட்டோடு ஒப்பது, புறத்தே எரிவளர்த்து அதனை வழிபடும் அத்துணையேயாதலால், மேலும் முக்கோணத்தை யடுக்க வரைந்த ஓகாரக் கோட்டினுள்ளே 'இரண்டு மட்குடங்கள் நிறுத்திச்செய்த எனை வழிபாட்டு முறைகளெல்லாம் வேண்டா

செய்தலாம் பிறவெனின்; அற்றன்று; தீ வடிவின்கண் இயற்கையே முனைத்து விளங்கும் அம்மையப்பரை, அங்ஙனம் இயற்கையே அவர் முனைத்து விளங்குதல் இல்லாத நீரினும் மண்ணினும் முனைத்து விளங்கச்செய்தற் பொருட்டாகவே அவ்வழிபாடுஞ் செயற்பாலதாயிற்று. அங்ஙனம் நீரினும் மண்ணினும் அவரை வருவித்து வைத்து வழிபடுதல் எற்றுக்கு? அனற்பிழம்பின் வைத்து வழிபடுதல் ஒன்றே அமையுமெனின்; நாடோறும் எரிவளர்த்து அதனையோம்புதல், இஞ்ஞான்றை நாகரிகவழக்கிற் பட்டார்க்கு எளிதின் இயைவதன்றாகலானும், செல்லும் இடங்கடோறும் எடுத்துச் செல்லுதற்கும் தமக்கெழும் பேரன்பின் பெருக்கால் தொடுதற்கும் திருமுழுக்குச் செய்து சாந்தப்பி மலர்மாலை சூட்டி வழிபடுதற்கும் நெருப்பு இடந்தருவதன்றாகலானும், என்றுந் தம்முடன் வைத்துத் தொட்டு வழிபாடு செய்தற்கு இசைந்த மண்வடிவங்களாகிய கல் செம்பு வெள்ளி பொன் முதலிய உருக்களில் அம்மையப்பரை வருவித்து வைத்து வழிபடுதல் இன்றியமையாததாயிற்று. இந்த ஏதுவினாலேயே, பண்டைக்காலத்தில் தீ வடிவின்வைத்து இறைவனை வழிபட்ட அம்பலங்களையெல்லாம் பின்றைக்காலங்களில் திருக்கோயில்களாக்கி, அவற்றின் நடுவே தீப்பிழம்பின் வடிவுபோல்வதாகிய கந்துருவினைச் (சிவலிங்கத்தை) நிறுத்தி வழிபடலாயினர்.

அஃதொக்குமாயினும், நெருப்பின்கண் இயற்கையே விளங்கும் முதல்வனை மண்வடிவுகளில் வருவித்தல் யாங்ஙனங் கூடுமெனிற் கூறுதும். ஐம்பெரும் பொருள்களில் மண்வடிவொன்றே பருப்பொருட்டன்மை மிகுதியும் உடையது; அதற்கடுத்த நீரோ மண்ணினும் நுண்டன்மை உடையது; அதற் கடுத்த தீயோ நுண்டன்மையோடு இயற்கையொளியும் வாய்ந்தது; அதற்கடுத்த காலும் விசும்பும் மிக நுண்ணியவாயினுங் கட்புலனாகாதனவாகலின் அவற்றின்கண் விளங்கும் இறைவனைக் காண்டல் இயையாது. ஆகவே, அவ்விரண்டனையும் விடுத்துக், கட்புலனாகும் ஏனை முப்பொருள்களில் மிக நுண்ணிதாகிய தீயில் விளங்கும் இறைவனை, நிரம்பவும் பருப்பொருட்டன்மையுடைய மண்ணிற் சடுதியில் வருவித்து அமரச்செய்தல் இயலாது. ஆதலாற், பருட்பொருட்டன்மையில் ஒருவாற்றால் மண்ணின் இயல்போடும், நுண்பொருட்டன்மையிலும் விளக்கத்திலும் ஒருவாற்றால் தீயின் இயல்போடும் ஒத்து நடுநிகர்த்ததாய் நிற்கும் நீரின்கண், தீயின் நிற்கும் அம்மையப்பரை வருவித்து அமரச்செய்தல் எளிதின் முடிவதாகும்; அதுபற்றியே இரண்டு மட்குடங்களில் நீரை நிரப்பி, நெருப்பின்கட் புலப்பட்டும் புலப்படாதும் பிரிவின்றி அருவுருவாய்க் காணப்படும் அம்மையப்பரை அந் நீரின்கட் புகுந் தமருமாறு வேண்டலாயிற்று. அங்ஙனம் அன்பினால் வேண்டிய அளவிலே அன்பர்க்கு எளியராம் அவ்விருவரும் நம்பொருட்டு ஒருவாற்

றூற் பிரிந்து தனித்தனி யுருவுகொண்டு, வலதுகுடத்தின் நீரில் அப்ப னும், இடதுகுடத்தின் நீரில் அம்மையுமாகப் புகுந்து அமர்ந்தருளுவர். அவ்விருவரும் ஒருவாற்றூற் பிரிந்தும் ஒருவாற்றூற் பிரியாதும் நிற்கும் இயல்பு தெரித்தற்கே அவ் விருகுடங்களும் ஒன்றையொன்று தொடு மாறு நெருக்கி வைக்கப்பட்டன. இனி, அக் குடங்களுள் இடப்பட்ட சிவப்புமணி இறைவன் திருவுருவத்திற்கும், நீலமணி இறைவியின் திரு வுருவத்திற்கும் அடையாளங்களாகலின், அந் நீரில் அமர்ந்த அவ் விருவ ரையும் பின்னர் அந்நீரோடு ஒருபுடையொத்த அம்மணிகளிற் புகுந்தமரு மாறு வேண்டுதல் எளிதாயிற்று. இங்ஙனம் அவ்வப்பொருள்களின் தன் மைக் கேற்பப், படிப்படியாக இறைவனை இறக்கி அவ் வவற்றின்கண் எழுந்தருளச்செய்து வழிபடும்முறை எவர்க்கும் எளியதொன்றூதல் கண்டு கொள்க. இவ்வாறு குடத்தின் நீரிலிட்ட மணிகள் எங்கு சென்றூலும் உடனெடுத்துச்சென்று தாம் வேண்டியவாறுவைத்து வழிபட்டுப் பயன் பெறுதற்கு உரியவாகும். மேற்சொல்லிய மணிகளை இடுதற்கு வேறாகக், கல்லிற் செம்பில் அழகுற அமைத்த அப்பன் வடிவினையும் அம்மை வடி வினையும் அக் குடங்களின் நீரிலிட்டு உருவேற்றி எடுத்து வழிபடுதலும் உண்டு. திருக்கோயிலினுள் நிறுத்தும் வடிவங்கள் பெரியனவாய்க் குடத் தினுள் நுழைக்கலாகாதனவா யிருத்தலால், மேலே காட்டியவாறு உரு வேற்றிய குடங்களின் மந்திரநீரை எடுத்துச்சென்று, அத் திருவுருவங் கண்மேற்சொரிந்து, அந்நீரிற் பாய்ந்த அம்மையப்பர்தம் அருளொளிகளை அவ்வுருவங்களுள்ளும் பாயச்செய்குவர். இங்ஙனஞ் செய்யும் முறையை யே 'கும்பாபிஷேகம்' என வடமொழிப்பெயரால் இஞ்ஞான்று வழங்கி வருகின்றூ ரென்பது.

அற்றேல் அஃதாக, அக்குடங்களிரண்டிற்கும் நூற் சுற்றியதும், ஐந்திலையுள்ள மாவிலை முதலியன வைத்ததும் என்னையெனின்; அக் குடங்களிரண்டையும் அம்மையப்பர்க்கு உடம்புகள்போற் சமைத்தற்கு அங்ஙனஞ் செய்தபடியாம். அக்குடங்கள் உடம்பாகவும், மேற்சுற்றிய நூல்கள் அவ்வுடம்பின் நரம்புகளாகவும், உட்பெய்த நீர் அவ்வுடம்பில் நிறைந்த சோரியாகவும், நீரிலிட்ட மணிகள் உள்ளமர்ந்த உயிர்களாகவும், மேல்வைத்த ஐந்திலை மாங்கொத்துகள் ஐந்தெழுத்து மந்திரங்களால் இயங்கும் உயிர்ப்பாகவும், மேல்வைத்த தேங்காய்கள் முக்கண்களோடு கூடிய தலையாகவும் எண்ணிக்கொள்ளப்படும். இங்ஙனமே அக்குடங்க ளிரண்டையும் அப்பனும் அம்மையுமாக எண்ணி அவற்றிற்குச் செய்த ஏனையவைகளையும் பொருத்திப் பார்த்துக்கொள்க. அவையெல்லாம் யாம் உரைக்கப்புகின் மிக விரியும்.

இனித், தீயில் இயல்பாகவே முனைத்து விளங்கும் இறைவனையும் இறைவியையும் மண்வடிவங்களில் வருவித்து வைத்து வழிபடுதற்குச்

செய்த இம் முறையானது, வசியத்தின் பொருட்டுப் பொன் வெள்ளி செப்புத் தகடுகளிற் கீறிய சக்கரங்களின் அறைகளில் ஐந்தெழுத்து ஆறெழுத்துகளை அடைத்து, அம் மந்திரங்களை உருவேற்றி உயிர்ப்பித் தற்கும் மிக இயைந்ததொன்றாம். யாங்ஙனமெனிற் காட்டுதும்: முன்னே வரையச் சொல்லிய முக்கோண சக்கரம் நமதுடம்பின் நடு மையத்தில் உள்ளதாகையாற், கீழ்நோக்கிய ஒரு முனையையுடைய ஒரு முக்கோண சக்கரம் நமதுடம்பின் ஓர் அரைப்பகுதியைக் குறிப்பதொன்றாகும்; ஆக வே, மேல்நோக்கிய ஒரு முனையையுடைய மற்றொரு முக்கோண சக்க ரத்தையும் அதனோடு பிணைத்து வரைந்துவிட்டால், அங்ஙனம் பிணைக் கப்பட்ட அவ்விரண்டு முக்கோண சக்கரங்களும் ஒருங்குசேர்ந்து ஓர் ஆண் மகன் அல்லதொரு பெண்மகளின் வடிவை ஒப்பதாகும். அங்ஙனம் வரைந்த அறுகோண சக்கரத்தைச் சிவபிரானைக் கருதல் வேண்டின் 'ஓம் சிவனே போற்றி' என்னும் மந்திரத்தில் 'ஓம்' என்பதை நடு அறை யிலுஞ், 'சி' எனும் எழுத்தை மேல்நோக்கிய முனையின் அறையிலும், 'வ' எனும் எழுத்தை அதனையடுத்த இடதுமுனையின் அறையிலும், 'னே' எனும் எழுத்தை அதற்கடுத்த இடதுமுனையின் அறையிலும், 'போ' எனும் எழுத்தைக் கீழ்நோக்கிய முனையின் அறையிலும், 'ற்' எனும் எழுத்தை அதற்கடுத்த வலதுபக்கத்து முனையின் அறையிலும், 'றி' எனும் எழுத் தை அதற்கடுத்த வலபுறத்து முனையின் அறையிலுமாகப் பொறித்துக் கொள்க. இனி, அதனை முருகப்பிரானைக் கருதல் வேண்டின், 'ஓம் முருகா போற்றி' என்னும் மந்திரங்களின் எழுத்துக்களை அவ்வாறே அவ்வறைகளிற் பொறித்துக்கொள்க. இங்ஙனம் பொறித்துக்கொண்ட பின், நோன்பு இயற்றுவோர் எந்தப் பொருளைப் பெற விழைகின்றன ரோ, அப்பொருளின் பெயரை அச் சக்கரத்தின் வலதுபுறத்தும் இடது புறத்தும் எழுதி முடித்து, அதன்பிறகு அக் குளிசத்தை, அப்பனைக் கருதி வைக்கப்பட்ட குடத்தின் நீரினுள்ளிட்டு நான்குநாள் வரையில் வேள்வி வேட்டு, மேலேகாட்டிய மந்திரங்களைச் சொல்லி அழைத்து இறைவனை அக் குளிசத்தினுட் புகுந்தமருமாறு வேண்டுக; அதன்பின் அக் குளிசத்தை அக் குடத்தினின்றும் எடுத்து, அம்மையாகக் கருதி வைக்கப்பட்ட குடத்தினுள் இட்டுப் பின்னும் மூன்றுநாள் வேள்வி வேட்டு இறைவியை அதன்கட் புகுதுமாறு மந்திரஞ்சொல்லி அழைத்து வேண்டுக. இவ்வாறு செய்தானபின் அக் குளிசத்தைப் புறத்தே எடுத்து வைத்து வழிபட்டு மெல்லச் சுருட்டி, ஒரு தாயித்தினுட் செலுத்தி, அதன் இருபுறத்து வாயிலையும் அடைத்துப் பின்னர் அத் தாயித்தை ஒரு சரட் டிற் கோத்துக் கழுத்தில் அணிந்துகொள்க. ஓராண்டுக்கொருகால் அக் குளிசத்தை அதன் தாயித்தினின்றும் எடுத்து, மேற்சொல்லியவாறே மந்திர உருவேற்றிப், பின்னர் அணிந்துகொண்டுவந்தால், அதன் வசிய ஆற்றல் மேன்மேல் மிகுதிப்படும். இப் பெற்றித்தாகிய குளிசமானது

வசியத்திற்கேயன்றி, எத்தகைய நோய் நீக்குதற்கும், பேய்பிடியுண்டார்க்குப் பேய் ஓட்டுதற்கும், இன்னும் இவைபோன்ற பல நலங்களைப் பெறுதற்கும் நிரம்பப் பயன்படுதலுடைத்தாம்.

ஆனல், இத்துணைச் சிறந்த குளிசங்களை முறைவழுவாமற் செவ்வையாக மந்திர வுருவேற்றிக் கொடுக்கவல்ல செவ்வியர் மிக அரியர். அவர் கல்வியிலுங் கடவுள்வழிபாட்டிலுந் தவப்பயிற்சியிலும் நல்லெண்ண நற்செய்கைகளிலுஞ் சிறந்தாராயிருத்தல் வேண்டும். மற்று, இஞ்ஞான்று இவைகளை உருவேற்றிக் கொடுப்போமென்று வருவாரோ கல்வி மணம் இன்னதென்றே யறியாராய்க், கடவுளிடத்து அன்பிலாராய்த், தவவொழுக்கத்திற்கு முற்றும் புறம்பானவராய்ப், பிறரை ஏமாற்றும் எண்ணமே முழுதும் உடையாராய், ஊன் உண்டுங் கட் குடித்தும் பொய் புகன்றும் பொதுமகளிர்ப் புணர்ந்துஞ் சூதாடியுந் திரிவாராய் இருத்தலின், இவர் உருவேற்றிக் கொடுப்பதாக ஏமாற்றித் தருங் குளிசங்கள் எத்தகைய நன்மையையுந் தரா; அதுவேயுமன்றி, அத்துணைத் தீயரான அவர் தொட்ட குளிசங்கள் அவர்தந் தீய இயல்பு பொருந்தப்பெற்றனவா யிருக்குமாதலால், அவைதம்மை அணிந்துகொள்வார்க்கு அவை அளவிறந்த துன்பங்களை வருவிக்குமென்றும் உணர்ந்துகொள்க. எனவே, குளிசங்களை முறை வழுவாமல் மந்திர வுருவேற்றிக் கொடுக்கத் தக்க பெரியாரைத் தெரிந்து, அவர் உவக்குமாறெல்லாம் பணிந்தொழுகி, அவரைக் கொண்டு அதனை முடித்துக் கோடலே இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று இனிது வாழ்தற்குக் கருவியாமெனக் கடைப்பிடிக்க.

இனி, மேற்காட்டியவாறு மந்திரவசியஞ் செய்யப் புகுவோர் தாங்கொண்ட நோக்கங்களுக்கேற்ற நாட்களில் அவ்வவற்றுக்குரிய பண்டங்களோடு அதனைத் துவங்கிச் செய்தல் இன்றியமையாததாகும். அறிவையுஞ் செல்வத்தையும் பெறல்வேண்டி நோற்போர் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் நோற்கத் துவங்குக. தாம் வழக்கமாய் உடுக்கும் உடையின்மேல் ஒரு சிறு சிவந்தஆடையை யுடுத்தித், தங்கத்தாற் செய்த சில அணிகலங்களையும் அணிந்து கொள்க. ஏனைய மலர்களோடு பொழுதுவணங்கி (சூரியகாந்தி) என்னும் மலரையும், புகைத்தற்கு மஞ்சள் செஞ்சந்தனம் என்னும் இவைகளையும் பயன்படுத்துக.

குறிசொல்லுந் திறமையும் மறைபொருள் அறியும் ஆற்றலும் பெற விழைகுவோர் திங்கட்கிழமையில் நோற்கத் துவங்குக. தாம் என்றும் உடுத்தும் உடையோடு தூவெள்ளையான ஓர் ஆடையினையும், முத்தால் அல்லது பளிங்கு மணியால் அமைத்த ஒரு மாலையினையும் அணிந்து கொள்க. மஞ்சட்பூவும், புகைத்தற்கு வெண்சந்தனம் அம்பர் முதலியனவும் பயன்படுத்துக. கரிய நிறமுள்ள துணிகளேனும் பொருள்களேனும், வெள்ளி யல்லாத பொற்கலங்களேனும் அன்றைக்கு நோற்கும் அறையில் இருத்தல் ஆகாது.

பிறர்க்குத் தீங்கு இழைக்குஞ் செயல்கள் செவ்வாய்க்கிழமையில் துவங்கப்படுவன வாகையால், அப் பொல்லாத முறைகளை இங்கே குறியாமல் விடுகின்றோம்.

உயர்ந்த கலைநூல் ஆராய்ச்சியிற் சிறந்த புலமையுஞ் செவ்வனே பேசுந் திறமும் பெறவிரும்புவோர் புதன்கிழமையில் நோற்கத்துவங்குக. அன்று உடுக்கற்பாலன பச்சை நிறமுள்ள அல்லது பலநிறக் கலப்புள்ள ஆடையேயாம். அணியற்பாலன இரசமணிகளேயாம். வழிபாட்டிற்குப் பயன்படுத்தற்பாலன மகிழப்பூவும், சாம்பிராணியுமேயாம்.

சமயத்துறைகளிலும் அரசியற்றுறைகளிலுஞ் சிறப்பெய்த வேண்டுவோர் வியாழக்கிழமையில் நோற்கற்பாலார். அவர்கள் குருதிநிற முள்ளதோர் ஆடையுடுத்து, வியாழன் பெயர்பொறித்த பித்தளைத் தகடொன்றை நெற்றிமேற் கட்டிக்கொள்ளல் வேண்டும். அத்திப்பூ மாதுளம் பூக்களைத் தூவி, மீனம்பர் மஞ்சள் முதலியன புகைத்து வழிபாடு புரிதல் வேண்டும். பச்சை அல்லது நீலமணி யழுத்திய கணையாழியொன்றையும் விரலில் அணிந்துகொள்க.

காதலின்பப்பேற்றை விரும்பினோர் வெள்ளிக்கிழமையில் நோற்றல் வேண்டும். அன்று அணிந்துகொள்ளும் ஆடை வான்நீல நிறமாய் இருக்கற்பாற்று: அவ்வறையுள் தொங்கவிடப்பட்ட திரைகள் பச்சையும் உரோசாநிறமுந் தோய்ந்தனவாயும் அன்னத்தூவிகள் பிணைந்தனவாயும் இருத்தல்வேண்டும். பளபளப்பாக்கிய செப்புமணிகளாலும், ஊதாநிறம் வாய்ந்த மலர்களினாலும் உரோசா மலர்களினாலுஞ் சமைக்கப்பட்ட மாலைகள் அன்று பூணுதற் குரியனவாகும். வைடூரியங் கோமேதகம் என்னும் மணிகள் அழுத்திய கணையாழிகள் விரல்கட்கு இடற்பாலன. ஒரு செப்புத்தகட்டில் வெள்ளி மதனவேள் என்பாரின் பெயர்பொறித்து, அதனைத் தமது மார்பின்மேல் அணிந்துகொள்ளல் வேண்டும். மேற்கூறிய மலர்களையே தூவிச் சாம்பிராணி புகைத்து வழிபாடு ஆற்றுக.

பிறரை வைது அவர்க்குச் சாவினை வருவித்தற்குரிய முறைகள் சனிக்கிழமையிற் செய்யற்பாலனவாயிருத்தலாற், பிறர்க்கு இன்னுவிளைக்கும் அக்கொடிய முறைகளை ஈண்டு வரையாது விடுகின்றோம். பிறவுயிர்க்குப் பொல்லாங்குதரும் முறைகளை மறந்துஞ் செய்யற்க. ஏனென்றால், அம்முறைகள் செய்தானுக்கே ஆற்றொணாத் துன்பத்தைத் தந்து, அவனுயிரையுங் கொள்ளை கொள்ளும். அது பற்றியே, முற்று முணர்ந்த தெய்வத் திருவள்ளுவர்,

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்" எனவும்,
"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ் சூழுஞ் சூழ்ந்தவன் கேடு" எனவும்,
"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்" எனவும் அறிவுறுத்தருளினர். மேலும், பிறர்க்குத் தீங்கினைத்தரும் பில்லி சூனியங்களைச் செய்வோர், மனிதக் கொழுப்பிற் செய்த திரிகளைப் பிறர் கொலையுண்ட ஒரு வீட்டில் ஏற்றி வைத்து, வெள்ளாடு அகமெலி வெளவால் முதலியவற்றின் குருதியிற் பிசறிய கர்ப்பூரம், கரியபோளம், மீனம்பர் முதலியவற்றைக் கொளுத்திப் புகைத்துக், கொல்லப்பட்ட உயிரின் சோரிநிறைந்த ஒரு செப்புச்

சட்டியையுந் தந்தையைக் கொன்ற ஒருவனது மண்டையோட்டையும் வைத்து, இன்னும் இங்ஙனமே நினைப்பினும் நெஞ்சம் நடுங்கும் எனைக் கொடுந் தீவினை முறைகளையுஞ்செய்து, நம்மனோரை விட்டகன்று இருளுலகத்திற் றாஞ் செய்த தீவினைப் பயனால் நிரம்பத் துன்புற்று அலறித் திரியுங் கொடும் பேய்களை வருவித்து, அவற்றிற்கு மனிதன் ஈரல் முதலியவைகளை உணவாகக்கொடுத்து உயிர்ப்பேற்றி, அவை தம்மை ஏவிவிடுதலால், ஏவப்பட்ட அவை சென்று, குறிப்பிடப்பட்டாரை அச்சுறுத்துகின்றன. அத் தீயபேய்களைக் கண்டு அஞ்சாமல், இறைவன் திருவடிக்கண் அன்புவைத்து, மனவுறுதியோ டிருப்பார்க்கு அப் பேய்கள் ஏதுந் தீங்கிழைக்கமாட்டாமையின், அவை பெருஞ்சீற்றத்துடன் திரும்பிச் சென்று தம்மை ஏவினவனையே மிகவும் அச்சுறுத்திக் கொன்று விடுகின்றன. ஆகையால், யாம் இதுகாறும் விரித்து விளக்கிய வசிய முறைகளைத் தமக்கும் பிறர்க்கும் நலம்பயக்குந் துறைகளின் மட்டும் பயன்படுத்தி இனிதுவாழ்க.

இனித், தமக்குந் தம் மனைவிமக்கட்கும் பொருள்தொகுத்து வைத்தலிலும், உலக இன்பங்களை நுகர்தலிலுமே கருத்தை ஈடுபடுத்தி, அவற்றின்பொருட்டு வசியமுறைகளைப் பழகுதலிலேயே வாணாளைக் கழித்து விடற்க. எவ்வளவுதான் பொருளைத் திரட்டிவைத்தாலும், எவ்வளவுதான் மனைவிமக்கண்மேல் அன்புவைத் தொழுகினாலும், எவ்வளவுதான் உலக இன்பங்களை நுகர்ந்தாலும், இவையும் இவற்றிற்காகப் பாடுபடுவோரும் இவ்வுலகத்தில் நிலையாக இருக்கப்போவதில்லை. திரட்டிவைத்த பொருள் எங்கே! மனைவிமக்கள் எங்கே! நுகர்ந்த இன்பங்கள் எங்கே! எந்த நேரத்திலோ எவராலும் அறிய இயலாதபடி கூற்றுவன் வந்து உயிரைக் கொள்ளை கொள்ளுங்கால், எல்லாம் இருந்தவிடந் தெரியாமல் மறைந்துபோகின்றன! அப்போது, தாஞ்செய்த நல்வினை தீவினைகளுஞ், சிவபிரான் திருவடிகளுமே அவ்வுயிர்க்கு உடன்செல்லும் பொருள்களுந் துணையுமா யிருக்கின்றன!

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே" என்ற பட்டினத்தடிகளின் அரிய அருளுரையை உள்ளத்திற் பதித்து, மேற்காட்டிய வசியமுறைகளைக் கொண்டு உயிர்வாழ்க்கையை வறுமையும் நோயுந் துன்பமும் இல்லாமல் வைத்து, இறைவன் திருவடிப் பேரின்பத்தைப் பெறும் முயற்சியிலேயே கருத்தை ஊன்றுக. அது, மூச்சையொடுக்கும் (பிராணயாமப்) பழக்கத்தால் மூலகுண்டலியை எழுப்பிச் சுழுமுனையிலேற்றி மேலே ஆயிர இதழ்த் தாமரைபோல் வயங்கும் நிலாமண்டிலத்திலே படிவித்து அம்மையப்பரைத் தலைக்கூடுதலால் மட்டுமே வாய்ப்பதாகும். யாம் ஈண்டுக்காட்டிய வசிய முறைகளும், அவற்றிற்கு மேலாந் தவமுறைகளும் நல்லாசிரியன் காட்டக்கண்டு செய்தலே, பிழைபடாமற் பழகிப் பயன் பெறுதற்கு வழியாமாகலின், ஒரு நல்லாசிரியனை யடுத்து அவன் உவக்குமாறு ஒழுகி, இவைதம்மை அவன்பாற்பெற்றுப் பழகி எல்லாரும் இனிது வாழக்கடவராக! ஓம் சிவமே போற்றி!

முற்றுப்பெற்றது.

ஏ

புத்தகங்களுட

"Betwixt Ours

by Mr. P, V Ma

Superintending Engineer, P.

This is a lecture on Sociology delivered at Gu Manicka Naicker and is now published in the form to give a wider popularity to the views inculcated in subject-matter of the lecture is treated of in two entirely differ manners of which one is satirical and the other is quite plain and straightforward. We wish the satirical part were published separately, for by being mixed up with the plain treatment of the same matter within the same area the satire loses much of its pungency and flavour. It is like blowing hot and cold at the same breath.

Now in treating of the subject in the first part, that is, in the satirical part, we may say that the author has done his work remarkably well. The strife and struggle going on in the ridiculous multiplicity of Indian communities he has portrayed vividly and amusingly in the animal life of the Madras zoo. That he had recourse to this satirical mode of treating the subject not actuated by any malice to any community but induced by a due sense of its fitness which the abject state of the Indian society itself suggests, would be plain to all careful and unprejudiced readers. To an exact description of the present ridiculous state of the Indian communities no better mode of treatment can be accorded than the one the author has attempted. When all the great people all over the world are every moment concerting most thoughtful measures to promote their life-conditions physically, morally, intellectually and spiritually, it is the Indians alone that are perpetually fighting over the question of touchable and untouchable accidents of birth. What can be more frivolous than this and what can be more apposite than the sarcastic way in which our talented author has exposed to our view the rotten condition of our society? While exciting our laughter, the author has not failed to impress on our m nd the gravity with which he views the present condition of our life. His motive is not to trifle and play with it, but to cleanse it of its self-imposed sins and exalt it to the purer and ethereal realm of fraternal love. We cannot but admire the genius of our author for having so ably and pleasantly treated his subject in this part of his lecture.

In the second and subsequent part the philosophical temper of the author resumes its seat and expresses itself in the calm and profunder views taken of the British rule and its beneficent relation to the Indian society. British rule is the balm sent by the benign will of Providence to be applied to the suppurating caste-system of the Indian people for the purpose of effecting its radical cure. A nation that produced Milton and Shelley, Burke, and J. S.

Indians in particular.
...ost boldly and lucidly
... of his lecture. The only
...ne author is his occasional out-
...ed words and phrases which smack of
...r taste though this coarseness loses its
...rilliance of his wit and mature thought.
...k can be had of Mrs. S. R. Sabhapathy & Co., 2/11,
...Road, Madras.

BY SWAMI VEDACHALAM.

---

## திருக்குறள் நாடகம்

இது திருவாளர் மயிலை, சீனி. கோவிந்தராசர் என்னார் தமிழறிஞரால் இயற்றப்பட்டதொரு தமிழ் உரைநூலாகும்; தம் ஆசிரியராகிய இதன் ஆக்கியோர்பாற் பேரன்புபூண்ட திருவாளர் மயிலை க. மாணிக்கவேல் முதலியாராற் பதிப்பித்து வெளியிடப்பட்டது. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த 'திருக்குறள்' என்னுந் தெய்வத் தமிழ்மறை எல்லாச் சமயத்தவரும் எல்லாச் சாதியினரும் எல்லா மக்கட்பிரிவினரும் 'இஃது எமக்குரிய வேதம், இஃதெமக்குரிய மெய்ம் மறை' எனத் தத்தந் தலைமேற்கொண்டு போற்றும் விழுப்பம் வாய்ந்த தென்பதும், அஃது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள் உண்மைகளை விரித்து விளக்குவ தென்பதும் அறியாதாரில்லை. இவ்வரும் பெருநூலின் இறுதிப் பகுதியாகிய 'இன்பத்துப்பால்,' செந்தமிழ் மொழிக்குச் சிறப்பாய் உரிய அகப்பொருள் நாடக வழக்குப்பற்றிச் செய்யப்பட்ட தொன்றாகலின், அது, தொல்காப்பியப் பொருளிலக்கணம், நக்கீரனார் அருளிச் செய்த 'இறையனாரகப்பொருளுரை,' மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த 'திருச்சிற்றம்பலக்கோவையார்' முதலான நூல்களைப்பயின்றார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதிற் பொருள் விளங்குவதன்று. பரிமேலழகியார் அதற்கெழுதியிருக்கும் உரையுஞ் சுருக்கமாகவேயிருத்தலால் அவ்வுரைகொண்டும் அதன்பொருளை எல்லாரும் விளங்கல்ஏலாது. இவ்வாறாக எல்லாரும் அறிதற்கு அரிதாய்க் கிடக்கும் அவ்வின்பத்துப்பாலை எல்லாரும் அறிந்து கொள்ளுதற்கு எளிதாம்படி வைத்து விளக்குதலே இந்நூலாசிரியரின் நன்னோக்கமாகும். அந்நோக்கம் ஈடேறுதற்பொருட்டு இவர் கைக்கொண்ட முறையாவது: இஞ்ஞான்று ஒரு நாடக அரங்கின் மேல் ஒரு தலைவனும் ஒரு தலைவியும் அவர் தம் பாங்கன் பாங்கிமாரும் நேர் நேர் நின்று உரையாடி ஒரு நிகழ்ச்சியினைத் தொடர்புபடுத்துக் காட்டுமாறு போற் காட்டுவதேயாம். இவ்வாறு காட்டும் முறையில் இந்நூலாசிரியர் நன்கு தேர்ச்சி பெற்றவராயிருக்கின்றார். இன்பத்துப்பாலிலுள்ள ஒவ்வொரு திருக்குறட் பாட்டின் பொருளையும் நாடகம் இயற்றுவோர் பேசும் முறையில் உரைநடைப் படுத்துகையில், அவ்வுரைநடையை அழகிய இனிய தெளிதமிழில் எழுதியிருக்கின்றார். அதனோடு திருக்குறட்பாக்களையும் விடாமற் காட்டிச் செல்கின்றார். அத்திருக்குறட்பாவின் கருத்துக்களை வரையுமிடங்களிற் பரிமேலழகியார்தம் உரைக்குறிப்புகளையுஞ் சொற்களையும் ஆங்காங்கு இனிதாகப் பிணைத்திருக்கின்றார். சுருங்கச் சொல்லுங்கால் இந்நூல் 'திருக்குறள்' கற்பார்க்குப் பெரிதும் பயன் படுவதொன்றாம். இதனை ஆக்கிய நுட்பஅறிவினர் தமது இளமைக்காலத்திற்றானே இம் மண்ணுலகவாழ்வு நீத்தமை தமிழ்மக்கள் மிகவருந்துதற்கு இடமாயிற்று. அவர் இவ்வுலகவாழ்வு துறந்தாற்போல அவர் இயற்றிய இவ்வரிய 'திருக்குறள் நாடகமும்' இறந்துபடாமல், அதனைப்பதிப்பித்து வெளியிட்ட மாணிக்கவேல் முதலியாரின் நற்செயல் மிகவும் பாராட்டற்பாலதொன்றாகும். இதன் விலை ரு 1-4 அணா; வேண்டுவோர்: சென்னை, மயிலாப்பூர், மல்லீசுவரன் கோயில் தெரு, 4- வது இலக்கம், 'கலாசிந்தாமணி நிலையம்,' திரு மாணிக்கவேல் முதலி...ருக்கு எழுதுக.